786

# மாசெ: எதிர் – விசாரணை

த.மலர்ச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LENDING
ARASADY PUBLIC LIBRARY

C

Class No:
Acc No 786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

786

# மாசெ : எதிர் - விசாரணை

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| | |
|---|---|
| Class No: | |
| Acc No | 786 |

LENDING
ARASADY PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகங்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட நூலாகும்
தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை
NL/BRL/ 3189

# மாசெ : எதிர் - விசாரணை

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

த. மலர்ச்செல்வன்

Class No:
Acc No 786

மறுகா
ஆரையம்பதி - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலானது தேசிய நூலக ஆவணமாக்கற் சேவைகள் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டதாகும். இதன் உள்ளடக்கமானது சபையின் எண்ணக்கருத்தை எடுத்துக்காட்டுவதாக அமையாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

மாசெ : எதிர் - விசாரணை

© த.மலர்ச்செல்வன்

முதல் பதிப்பு : ஓகஸ்ட் 2018

ISBN 978-955-50710-2-4

தேசிய நூலக ஆவணமாக்கல் மத்திய நிலையத்தினால்
அங்கீகரிக்கப்பட்டு வடிவமைக்கப்பட்ட வெளியீட்டு பட்டியல் தரவு

மலர்ச்செல்வன். த

மாசெ : எதிர் - விசாரணை / த.மலர்ச்செல்வன்

ஆரையம்பதி - மறுகா பதிப்பகம் 2018

ப.122. செ.மீ 21

ISBN 978-955-50710-2-4

1 8948113 டிவி 23

1 தமிழ் சிறுகதை ii. தலைப்பு

Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Class No:
Acc No

அட்டை : றஷ்மி

வெளியீடு : மறுகா பதிப்பகம்,
ஆரையம்பதி - 03
0776084756

அச்சகம் : நியூசெலக்சன், அக்கரைப்பற்று

விலை : ரூபா 480.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பிள்ளைகள்

பிரபஞ்சனுக்கும்

கீரனுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நானுமொரு புதுக்குளம்பு

என் முதல் சிறுகதைத்தொகுதி வெளிவந்து பத்து வருடங்களைத் தாண்டி விட்டது. இந்த பத்து வருடங்களில் என்னால் பத்துச் சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன. (ஒன்று இத்தொகுப்பில் சேர்க்கப் படவில்லை.)

- பால்குடியனும் இன்னும் சிலரும்
- மூன்று படுகளத்துடன் தேடுபவன்

இந்த இரு சிறுகதைகளைத் தவிர மற்றைய கதைகள், நான் எதிர்கொண்டவைகள்.

*1*

இந்த அந்தகாரத்தில்தான் சூனியக்காரர்களும், சூனியக்காரிகளும், ஜான்சிராணிகளும் படையெடுத்தபோது களத்தில் தனித்திருந்து போரிட வேண்டியிருந்தது. பின் முதுகு காட்டி ஓட ஒருபோதும் நான் எத்தனிக்கவில்லை. எப்போதும் போலவே சுடுகலன் சுட்டுத்தள்ளியது.

பின்னைய காலங்களில் கலை இலக்கியம் தேவையற்றதென புரியத் தொடங்கினேன். இந்த எழுத்தில் எதுதான் மிஞ்சியிருக்கிறது? விரோதம் தான் மிச்சம்.

நான் முதுகு சொறியப் பழகாததும், ஐஸ் வைக்கக் கற்றுக் கொள்ளாததும்... என் அறியாமையின் நிமித்தம், எறிகணைகள் என்னைத் தாக்கின. இருந்தும் பிட்டிசங்களுக்குத் தாக்குப் பிடித்தேன். ஒரு முதலமைச்சன் கூட என்னை விசாரித்தான். நானும் திமிர் கொண்டு பேசினேன். "என்னுடைய தலை பறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார்கள்." வீரபாண்டிய கட்டப் பொம்மன்தான் ஞாபகத்து வந்தான். நானும் 'நயிஞ்சி' போகவில்லை. இப்படி.... இப்படி....

2

போர் வீரனைக் கொலை செய்ய முயற்சித்த கூட்டத்திலிருந்து தப்பி, தலைமறைவாய்ப் போன நாட்களில் அரசியை வெறுக்கத் தொடங்கினேன். மீண்டும் யுத்தம் மூண்டது. நான் வெல்வேன் என கூக்குரல் இட்ட சமயம் கறுப்புநாய் கோரைப்பல்லுடன் அவளைக் கிழித்தெறிந்தது. கர்மாவும், அக்காச்சியும் எச்சரித்தனர்.

தோற்றுப்போன மண்டையனும், ஜான்சி ராணியும், தலையாட்டிப் பொம்மைகளும், புகைக்குடுவை உலகத்தினுள் என்னை அறுத்தெறிய கணக்குப் போட்ட மாயத்தை உடைத்தெறிந்து விசாரணைக் கமிஷன் முன் கைகட்டி நின்றபோது நரபலி தின்னிகளை ஒரேயொரு மந்திரத்தினால் கட்டிப்போட்டேன். இருந்தும் குறைகுடம் ஒன்றில் உளறிய ஒரு கோணல் பித்தனை நார் நாராக்கிய திருப்தியில் எழுத்துக்களை ஓடவிட்டேன். என்னுள் சிக்மன் பிரைட் மட்டும் அமர்ந்திருந்தார். ஒரு *like* விட்டார். "போதுண்டா சாமி இந்தப் புண்ணாக்கு" என்று ஓட எத்தனித்தேன்.

3

விசாரணையை அச்சேற்றும் நடுவர் குழாத்தின் பெரும் தலைவன் இதிலுள்ள அறிக்கைகள் கதையா? கட்டுரையா? என என்னால் ஊகிக்க முடியவில்லை என்றான். அவனின் வாசிப்பின் ஆழத்தை பறைசாற்றினான். நானும் கையை விரித்தேன். அவனின் அதிஷ்டம் அவன் முகவரி கிடைக்காமல் போனது. இல்லாவிட்டால். 'ஹாருக்கி முரகாமியின் 'விநோக நூலகம்', மூன்று ஜெர்மனிய அதிபுனைவுகளின் பிரதிகளை 'அம்மாச்சிக்கு' அனுப்பியிருக்கலாம்.

இருந்தும் ஒரு எழுத்தாளன் இப்படிக் கூறுகின்றான் ......... கவிதையின் நடையைக் கட்டுரையிலோ கட்டுரையின் நடையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளிலோ காண நினைப்பது பொருத்தமற்ற காரியம் மட்டுமல்ல சிறுகதையின் நடை நாவலுக்கோ நாவலின் நடை சிறுகதைக்கோ சரிவரப் பொருந்திப் போவதில்லை.. என்ற உண்மையையும் கணக்கிலெடுக்க வேண்டியிருக்கிறது என்கிறான்

**4**

எல்லாம் மாறித்தான் போகின்றது. மொழியும் எழுத்தும் கூட மாறிவருகிறதல்லவா அப்போ?

60களின் எழுத்துக்கள் 70 களுக்கும், 70 களை 80 களுக்கும், 80 களை 90க்கும். 90 ஐ 2010க்கும், 2010ஐ 2018 ற்கும் பிடிக்காமல் போயிருக்கலாம், அல்லது போகலாம். என்ன செய்வது சாமி ? மாற்றம் நிகழ்ந்துதான் ஆகும்.

நானொரு புதிய பறவை
"இறக்கை வளர்க என்னில்"...
நான் பறப்பேன்....
தேய்புள்ளியாத் தெரிகிறது தூரம்

த.மலர்ச்செல்வன்

ஆரையம்பதி - 3
03.08.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முதலாம் பாட்டத்திற்குப் பின் பெய்த இரண்டாவது மழை | 1 |
| மண்டையனின் மரணக்கதை | 18 |
| மூன்று படுகளத்துடன் தேடுபவன் | 34 |
| எம்.பி.சூர்ப்பனகையின் இறுதி அத்தியாயம் | 43 |
| காடேறிகளின் மாநாடு | 55 |
| தூ..... | 65 |
| பால்குடியனும் இன்னும் சிலரும் | 73 |
| மாசெ. எதிர் - விசாரணை அறிக்கைகளும், தீர்வுகளும் ஆலோசனைகளும் | 86 |
| தக்கையனின் நாட்குறிப்பேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நான்கு கதைகள் | 95 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பாட்டத்திற்குப் பின் பெய்த இரண்டாவது மழை

அவன் ஆயிரம் முகங்களாய்த் தெரிந்தான். குளம், குட்டைகளிலும், கிணறுகளிலும், ஏரிகளிலும், சாக்கடைகளிலும் பல்முகங்களாக ஆக்கப்பட்டிருந்தான். கதை, கவிதை எழுதுவதற்கு முன்னர் அவனுக்கு ஒரு முகம் மட்டுந்தான் இருப்பதாகச் சொன்னார்கள். தெற்கு நோக்கி நடைபாதையாக யாத்திரைபோன சன்னியாசி கூட அப்படித்தான் கூறினான். எல்லோரும் அவனில் பாசம் கொண்டு கதைத்தார்கள். வல்லவன், நல்லவன், நாலும் தெரிந்தவன் எனப் புளுகினார்கள். கார் காலத்திலும் புகழை உச்சியில் வீசினார்கள். அவன் எப்பொழுதும் அசையவில்லை. அவன் முகத்தைப் பொத்திக்கொண்டே திரிந்தான். யாரும் கிழித்து விடுவான்/ வாள் எனப் பயந்து, நிம்மதியாகப் படுத்து உறங்கியே எத்தனை இரவுகள் ஆயிற்று எனச் சொல்லமுடியாது. நாலாயிரத்து நானூற்றிச் சொச்சம் இரவுகள் விழித்திருப்பான். அதற்கு முதலும் இருகிழமை கண்மூடவில்லை. எல்லாம் கதை கவிதைதான் காரணமென்று கதைக்கிறார்கள்.

முதற்கவிதை எப்போது எழுதினானென்று சரியாக அவனுக்கே ஞாபகமில்லை. ஒரு இருபது இருபத்தைந்து வருசத்திற்கு முதலாகவிருக்க வேண்டும். ஆனால் கதை எழுதினது இப்பவும் அவனுக்கு ஞாபகமாயிருக்கு. அது விதியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை இல்லாத ஒரு டொக்டர் பற்றியகதை. "அவள் குழந்தை இல்லாத பலருக்குக் குழந்தைப் பாக்கியம் கொடுக்கிறாள். இனி நமக்கு வாழ்க்கையே இல்லையென்று வருபவர்களுக்கு வாழ்வளிக்கிறாள். ஆனால் அவளுக்கு ஜனனிப்பேயில்லை. துன்பப்படுகிறாள். வேதனை யில் வெடிக்கிறாள். சம்பிரதாயச் சடங்குகளில் கழிக்கப்படுகிறாள். இந்த இருட்டடைந்த சமூகம் அப்படிப் பார்க்கக்கூடாது. இதுதான் விதியா? அவளும் ஒரு மனிசிதானே. இந்த நவீன யுகத்தில் ஏனிந்தப் போக்கிரித்தனம்" - இது கதையின் மைய நீரோட்டத்தின் ஒரு பகுதி - வீரகேசரி 11.10.92 இல் வெளிவந்தது.

அவள் (அந்த டொக்டர்) அவனைக் கண்ட மறுநாள் முகத்தை திருப்பிக்கொண்டு போனாள். அவன் எதிர்கொள்ளாத ஒரு இடி. சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் அவனது பார்வையில் தென்பட்டாள். அவள் ஒரு அப்பிராணியாக அவனைப் பார்த்து விருட்டென வெட்டினாள். "இதுதான் விதியா?" அவனுக்குப் புரியவில்லை.

அவன் முதல் கதையிலே பேனாவை மூட முனைந்த போது, முகம் தெரியாத யார் யாரோவெல்லாம் அவனை உச்சாணிக் கொம்பில் தூக்கி வைத்தார்கள். வானத்தின் துருவ நட்சத்திரமாக்கினார்கள். அவன் பயணம் செய்தவாகனங்களும் சமச்சீராக ஆர்முடுகிச் சென்றன. அப்போது எந்தக் கொம்பனாலும் அவனை ஒன்றும் செய்யமுடியவில்லை. ஒரு கையில் கருவி, மறுகையில் பேனா, உடலை ஒவ்வொரு கணமும் வதைத்துச் சாறாக்கினான்.

"ஒரு வானமும் இரு தெருக்களும்" கதை வந்த பின்னர்தான் இலக்கிய உலகில் இருந்து சிலகாலம் காணாமல் போயிருந்தான். அது பெரும் கதையல்ல. இரு தெருக்களிடையே நடந்த சிறு யுத்தம். அது பிரச்சனையல்ல. "காட்டு மாவடிப் புள்ளையள் என்னவும் செய்யுங்கள் . அங்கால போகாதே "மனே" - இந்த வரிதான் பிரச்சினையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் வீரன் அன்று வீட்டில் இருக்கவில்லை. இருபது, இருபத்தைந்து வாலிப முறுக்குகள் போர்வீரனைக் கொல்லவோ? அடித்துத் துவம்சம் செய்யவோ? தெரியல்ல. அவன் தந்தையுடனும், தாயுடனும் மல்லுக்கட்டி, போர்க்கொடி தூக்கி படைமுகாமைத் தகர்த்தது போன்ற மண்டைக் கனத்தில் சென்றதாகப் பக்கத்து வீட்டுச் சுரேன் பின்னர் சொன்னான்.

சில நாட்கள் தலைமறைவாகத் திரியும்படி அக்கம்பக்கம் எல்லாம் சொன்னார்கள். போர்வீரன் அசையவேயில்லை, எத்தனை, எத்தனை களங்களதைத் தாண்டியவன். இது....! பின் அவனுடைய பேனாவும் பேப்பரும் தொலைந்து போய்விட்டன. தேடினான் கோவில் ஒலி பெருக்கியில் அறிவித்தல் கொடுத்தான். தெருவில் நின்று கூவினான். யாரும் கொண்டு வந்து தரவில்லை. ஆறு மாதம் கடந்தது. "கண்டு பிடித்துத் தருபவர்களுக்குச் சன்மானம் வழங்கப்படும்" பத்திரிகையில் அறிவித்தல் கொடுத்திருந்தான். பலன் கிடைக்கவில்லை. மூன்று வருடங்கள் கழிந்து ஒரு பின்னிரவில் அவன் பேனாவும், பேப்பரும் கிடைத்தன.

"அரசி பற்றிக் கதையும் கவிதையும் எழுதுக" அசரீரி ஒலித்தது. அது சித்தார்த்தனின் ஒலியாகத்தான் இருக்க வேண்டும். நீள் நிஷ்டைக்குப் போக முன்னர் அரசமரநிழலில் இருந்து உபதேசம் செய்த குரலின் ஒலி தான் அது. இன்னொன்று 'எஸ். ராவின்' "புத்தரின் கார்ட்டூன் மொழியில் வருகின்ற மொட்டையடிக்கப் பட்ட தலையோடு அலைந்துகொண்டிருந்த சிறுவனின் குரல் போலவும் பின்னர் இருந்தது.

அரசி அப்பொழுது கொடிகட்டிப் பறக்கும் காலம். அண்டை நாட்டிலும் அப்படித்தான். புத்திரனைப் போலத்தான் அவனும் எழுதியிருந்தான்.

மீண்டும் யுத்தம் தொடங்கியதாக
சொறி நாயொன்று கத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ யுகப்
பிரளயத்தில் முகம் கொடுத்து
திமிரேறிப் போன உடலுக்கு
இச்சொறிநாயின் கூக்குரல் பெரிதல்ல.

கிழட்டுச் சிங்கத்தின்
கவட்டுக்குள் மறைந்து கொண்டு
உலகத்தையே நான்தான் ஆளுவதாக
வீணி வழியக் குரைக்கும்
சொறிநாய்க்கு
இந்த ஊரில் வாழ்வதற்கென்ன
யோக்கியமிருக்கு.
கசப்பானதும்
அருவருப்பானதுமான
காலங்களை நான் நினைவு கூர-
விரும்பவில்லை.
அது-
ஊழிக்காலத்தின்
பின்நிலவுக் காலங்களின்
சலசலப்புக்கள்.
இன்று
இவையெல்லாம் மறந்ததும்
கிழட்டுச் சிங்கத்தின்
கவட்டுக்குள் மறைந்து கொண்டு நான்தான்

அரசி
என் கட்டளைக்கெல்லாம்
யாவரும் தலைவணங்க வேண்டுமென்று
நீ சொல்வதுதான் புரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் நிலாக்காலம் தொடங்கியது.
திமிர் கொண்டு உடல் குறுகுறுக்க.....

குளிரேறிப்போன தெருக்களில் நடக்கிறேன்.
புணரமுடியாது.
கிழட்டுச் சிங்கம் நாக்கைத் தொங்கப்போட்டு
ஓட
சொறிநாய்
கதறக் கதறக் கடித்துத் துரத்துகிறது.
மீண்டும் யுத்தம் நடக்கும்
அதில் நான் வெல்வேன்.

## 10-30-2000 இரவு 11.10 மணி

கறுப்பு நாயும் அடுத்த நாள் பின்னிரவு ஒரு மணி தாண்டி அரசியைப் பல்முகங்களில் கோரைப்பல்லை நீட்டிக் கதைசொல்லியை நகர்த்தியிருந்தான். அது நல்ல கதையென கரியவுருவமெல்லாம் கதைத்துப் போயின. நாடுகூடக் கடத்தப் படலாமெனப் பல்லிழந்த பக்கிரி பகிடிவிட்டுப்போனான்.

அவன் தன் சுயமுகத்தைக் காட்டாமல் வேறு ஒரு முகம் செய்து அனுப்பியிருந்தான். தவறுதலாகப் பொத்தி வைத்திருந்த முகம் கிழித்தெறியப்பட்டபோது அவன் அழவேயில்லை. ஒரு குரல்தான் முதல் முதலில் அவனுக்கு எதிராக எழுந்தது. 18ம் போரின் கடைக்கூற்றில் எழுந்த குரலை ஒத்தது அந்தக் குரல். "அது வல்கர்" கதை எப்படிப் பிரசுரிப்பது? அந்த இடி குரலோன் எந்த நேரத்தில் குரல் எழுப்பி னானோதெரியல்ல.

அம்புகள் பாயத் தொடங்கின. வெட்ட வெளியில் சருகுத்துகளாய் அடித்து வீசப்பட்டான். கிடுகிடு பாதாளத்தில் தள்ளப்பட்டு மூளை சிதறிய வெற்றுடலாய்க் கிடந்தான். ஆனாலும் தைரியம் ஒரு சொட்டும் இழக்கப்படவில்லை. அவன் வீரன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மதியம் இரு கடிதங்கள் கிடைத்தன. பரிச்சயமில்லாத காகிதத்தை உடைத்தான். கடிதம் முழுவதும் நாறியது. ஒவ்வொரு எழுத்துக்களும் சீழ்கட்டி ஒழுகின.

கடிதம் - 1 20-11-01

நீ நினைப்பது போல் நானில்ல,
வாழ்வின் துயரில்
ஜன்னலாய்
காலம் ஓடுகிறது.
..........................
நான் மல்லுக்கிழுப்பதாய்
கதை விடுகிறாய்
காலம் இருள் சூழ
பாடைகள் தயாராகின்றன.
..........................
உன் காலை வாராமல் விடேன்.

* * *

கிழட்டு சிங்கத்தின் கவட்டுக்குள் மறைந்து கொண்டு உலகத்தை நான்தான் ஆளுவதாக என்னைக் காறித்துப்பியிருக்கிறாய்.

நான் யார்?
நீ புரிந்தது
பூச்சியம் மட்டுந்தான்,

* * *

காலம் மலரட்டும்
கட்டுகின்றேன் பாடமுனக்கு
நீ பெரிய ஆளென்ற நினைப்பில் திரிகிறாய்
நீ தான் எல்லாம் உலகத்தின் அந்தத்திலிருந்து
மறு அந்தத்திற்கு எல்லை காணும் போர் வீரனாக
உன் பொய் முகத்தைச் செய்து கொண்டு ஓடுகிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பறந்து பறந்து பத்தும் தெரிந்தவன் போல் பாசாங்கு செய்கிறாய், காலம் மிக விரைவில் திகதி குறிக்கும்.*

*எச்சரிக்கையுடன்*

*கர்மா,*

## கடிதம் - 2

*2001 தேனகத்தில் கவிதைகளை நான் பார்த்தேன். வாசிக்கவே எனக்கு உடலெல்லாம் புல்லரித்தது. அக்கவிதைகள், யாருக்காக எழுதப் பட்டவையென்று. அதனை மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்தேன். சொறிநாயென்றும், கறுப்பு நாயென்றும், மோகினிப் பிசாசென்றும் யாரை இப்படி எழுதினாய்? எனக்குத்தான் எழுதினாயா? என்று நான் எனக்குள்ளே கேட்டுப் பார்த்தேன் மறுமனமோ எனக்குத்தான் எழுதியதாக நினைக்க வைத்தது. மல்லுக்கு உன்னை இழுக்க நினைக்க வில்லை....... ஏன்? ஏன்? இப்படி யாருக்காக? இந்த நாகரிகமற்ற சொற்பிரயோகங்கள்.*

*எச்சரிக்கையுடன்*

*அக்காச்சி*

*கடிதங்களின் நெடி அறை முழுவதும் அடித்தது. கீலம் கீலமாகக் கிழித்து எரியூட்டினான். புகை அறை முழுவதும் எழுந்து மூச்சுத் திணறியது.*

*அம்மா ஓடி வந்தாள்.*

*"ரெலிபோனாம்" மனே!*

*ரிசீவரைத் தூக்கினான்.*

*"யாரு?"*

*"ரஞ்சன், அருமையான கவிதை"*

*"எந்தக் கவிதையண்ணன்? "*

*"மல்லுக்கிழுக்கின்ற சுணங்கன்"*

*"ஓ..... அதுவா, அது வந்து, இங்க...."*

*" தம்பி, நாட்டு நடப்புக்கேற்ப, தக்கதருணத்தில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிந்து எழுதியிருக்கிறீர்கள், நல்லது"

"ஆனா, இவங்க வந்தண்ணன், வல்கர்
கவிதையென்று இரு மொட்டைக் கடிதமும்......"

"தம்பி. அவங்க 60, 70 களில் வாழ்கிற ஆட்கள்.
அவங்கட கத நமக்கெதற்கு. அதையெல்லாம் காதில்
போடக்கூடாது!

* * *

## குற்றப் பத்திர நகல்
## இலங்கை உ.நீ.மன்றம்

**சட்டமா அதிபர் இல: எஸ்.எஸ்.சீ.ஏ. 55/02/11**
**உ.நீ.மன்ற குற்ற வழக்கு இல: 088-150/100**
**எதிரி: காசிநாதர் அரிச்சந்திரன்**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டமா அதிபர் ஜயசூரிய வீரசிங்க அவர்களின் கட்டளைப்படி உங்களுக்கெதிராகக் குற்றப்பகிர்வு செய்யப்பட்டுள்ளது.

## குற்றங்கள்

1. ஒரு நாட்டின் இறைமையுள்ள அரசியென்று கூடத்தெரிந்தும் அவருடைய சுய கௌரவத்தையும், அரசோச்சியையும் இழிவு செய்யும் வகையிலும், காலம் காலமாக, தலைமுறை தலைமுறையாக இந்நாட்டில் நிலவி வரும் பண்பினைச் சீர்குலைக்கும் வகையிலும் தங்களது படைப்பு அமைந்திருக்கிறது. இது ஒரு மனிதனின் தனிமனித உரிமையை மீறுவது மாத்திரமன்றி, ஒரு நாட்டிற்கே குந்தகம் செய்யும் செயற்பாடாகவும், இழிபடுத்துவதாகவும் அமைந்துள்ளது. இவை நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜையையும் கீழ்நிலைப்படுத்தும் செயற்பாடாகும். இச்செயற்பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காரணமாகத் தண்டனைக் கோவை 25(5) இல.ஏஐ பிரிவின் கீழ், தண்டனைக்குரிய குற்றத்தைப் புரிந்துள்ளீர்கள்.*

2. *அத்தோடு, கர்மாவின், அக்காச்சியின் 20-11-01 திகதியக் கடிதங்கள் சார்பாகவும், வாய்மொழிமுறைப்பாட்டுக்கு அமைவாகவும் தாங்கள் தனிமனித உரிமையைத் துஸ்பிரயோகம் செய்தது மாத்திரமன்றி, அவர்களுடைய சுயகௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுத்தியிருக்கிறீர்கள். மேலும் படைப்பாக்கச் சமூகத்தை கேவலப்படுத்தியதோடு எதிரிகளைத் தாக்குவதற்குப் புனிதமான படைப்பாக்கத்தை ஆயுதமாக்கிப் பழி தீர்த்திருக்கிறீர்கள். இது மனித உரிமைச் சட்டம் 15(ஏஐ) (VII) பிரிவின் கீழ் தனி மனித உரிமையை மீறும் தண்டனைக்குரிய குற்றம்.*

3. *மேலும் நன்றியுள்ள மிருகத்தையும், காட்டு ராஜாவையும் வீண்வம்புக்கிழுத்து, ஐந்தறிவு ஜீவன்களை இழிவுபடுத்தியிருக்கிறீர்கள். இது மிருகவதைச் சட்டம், மி.வ.ச.வ.3(III) கீழ், தண்டனைக்குரிய குற்றமாகும். இந்த இழிநிலைச் செயற்பாடுகளுக்காகத் தாங்கள் பின்வரும் தண்டனைக் குரித்துடையவர்.*

## தண்டனைகள்

1. *வலதுகைப் பழக்கமுள்ளவராக உள்ளதால் குற்றவாளியின் பெரு விரலையும், ஆள்காட்டி விரலையும், ஏகலைவனின் கட்டை விரலைத் தானமாகப் பெற்ற, நடுச்சந்தியில் நிற்கும் துரோணாச்சாரியாருக்குத் தானமாக வழங்க வேண்டும்.*

2. *நல்ல நூல்கள் படைப்பாற்றல் அறிவை உயர்த்தும் காாரணத்தினால் குற்றவாளியின் கையிருப்பில் இருக்கின்ற நூல்களை அக்கினி வேள்விக்கு ஒப்படைக்க வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சிறந்த சுயசிந்தனையாளராக இனி வரும் காலங்களில் திகழ்வதற்கும் மாற்றுச் சிந்தனையை உருவாக்குவதற்கும் - ஒரு வருடம் மனநல மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப் படவேண்டும்.

4. வாழ்நாள் முழுவதும் இலக்கியக் கூட்டங்களில் பங்குபற்றுவதையும், இலக்கிய நண்பர்களுடன் உறவு கொள்வதையும் தவிர்க்கும் பொருட்டு, மேற்பார்வை செய்ய, கழுதைக் கண்காணிப்பாளர்களை அல்லது கழுகுக் கண்காணிப்பாளர்களை நியமித்தல்.

5. மேற்படி நபருக்கு வழங்கப்படும் தண்டனை, இலக்கியச் செயற்பாட்டாளர்களுக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும் என்பதோடு, இனி வரும் காலங்களில் "வல்கர்" இல்லாமல் எழுதுவதோடு, அரசோச்சிக்குக் குந்தகம் விளைவிக்காமலும் நாய், பூனை, சிங்கம், கரடி... என்ற சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தி மிருகவதைச் சட்டத்தை மீறக்கூடாதென்றும் தீர்ப்பளிக்கின்றோம்.

உண்மையுள்ள நீதிபதிகள்

1. பியசேன சுசில் பெரேரா
2. தர்ம ராஜ் மண்டையன்
3. முகமட் சுக்கிரி

திகதி : 25-12-01
மூலப்பிரதி: அதி.உ.நீ.மன்றம்
பிரதி : எதிராளி

## மேல்முறையீட்டு நகல்

ஐயா,

இலங்கை ஜனநாயக சோசலிச உ.நீ.மன்றம் எனக்கெதிராகக் குற்றப்பத்திரம் எஸ்.எஸ்.சீ.ஏ.55/02/11 தாக்கல் செய்து,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாற்றல், தனி மனிதனையும் இறைமையுள்ள அரசினையும் கீழ்மை செய்வதாகத் தண்டனை வழங்கியுள்ளது. ஆனால் சிந்தனையோட்டம் தனி மனிதன் என்றோ, அரசோச்சி என்றோ, அறியாமலேயே வெளிவருகிறது. பலரிடம் பயத்தினால் சவங்களாகப் புதையுண்டு போகிறது. நானும் சவங்களைப் புதைப்பவனல்ல. அரசோச்சிக்கு எதிராகவோ, தனிமனித சுதந்திரத்தைக் கேலி செய்வதாகவோ எழுதவில்லை. அவ்வாறு அரசோச்சிக்கு எதிராக, தனிமனித உரிமைக்கு எதிராக எழுதிய கார்ல்மாக்ஸ் தொடக்கம் பல ரஷ்ய எழுத்தாளர்களுக்கு நடந்த சம்பவங்களை நான் அறிவேன். அத்தோடு அண்மைக்காலமாக உயிரைக் கையில் பிடித்துத் திரியும் தஸ்லிமா நஸ்ரின், சல்மான் ருஷ்டி போன்றவர்களின் அவல வாழ்வையும் அறிந்தவன் என்றவகையில், வித்தியாசமாக எழுத வேண்டும் என்ற நப்பாசையிலேயே என்னுடைய எழுத்து எழுந்தது.

ஐயா,

நான் பத்துப்பிள்ளைகளின் தந்தை. என் மனைவியோ காசநோயால் இன்றோ, நாளையோ என இருக்கிறாள். என் உழைப்பிலேதான் குடும்பம் ஓடிக் கொண்டிருக்கிறது. என் பேனாவும் என் விரல்களும் தானம் செய்யப்பட்டால், என் குடும்பம் இருள் சூழ்ந்து நடுத்தெருவிற்கே வந்து விடும்.

எனவே மேன்மை தங்கிய நீதிபதிகளே!

முன்னரும் எனது தொழில்சார் நண்பிகளும் சிங்களப் பத்திரிகையாளர்களுமான தயாசீலி, சந்திரிக்கா ஆகியோர் எனது கிராமத்தில் பண்பாட்டு ஆய்வில் ஈடுபட்டபோது, பல்லு நெட்டிகளின், கோணல் வாய்களின் பொய்சாட்சியால் கிராமக்கோடு பிழையான தீர்ப்பு வழங்கிப் பொய்ப்பரப்புரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது. பின் மானநஷ்ட மேல்முறையீட்டினால் தன் தவறைத் திருத்திக்கொண்டது.

ஆகவே தாங்களும், மேற்படி பிழையினை விடாமல், விடயத்தைக் கவனத்தில் எடுத்து என் கலை இலக்கிய முயற்சிக்குப் பங்கம் ஏற்படாமல் நடவடிக்கை எடுக்குமாறு தங்களை மன்றாட்டமாக கேட்டுக் கொள்கிறேன். எனினும் இப்போ, நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கின்றேன். கனவிலும் இனி நான் வயிற்றுச் சோற்றுக்குக்கூட உதவாக்கதையையோ, கவிதையையோ எழுதப்போவதில்லையென்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

திகதி : 26-11-01 இப்படிக்கு,

விசுவாசமுள்ள,

காசிநாதர் அரிச்சந்திரன்.

* * *

## மார்கழி - 2001

தமிழின் கதையாடலில் மீ- கதைவகைக்குள்ளே இக்கதையைப் பார்க்க வேண்டியுள்ளது. அ - கதை வகைக்குள் இதைச்சேர்ப்பதில் சில சிக்கல்கள் இருந்தாலும், அ-கதைப் பண்புகள் நிறைந்தே காணப்படுகின்றன. எனினும் மீ -கதையே சாத்தியமாகின்றது.

தமிழில் மீ-கதையில், பி.ர, எஸ்.ரா, கோகி போன்றோர் தொடக்கப் புள்ளிகளாக இருந்தாலும், மீ-கதைகள் இன்னும் இறக்கை கட்டிப்பறக்கவில்லையென்றே படுகின்றது. இதற்கு வாசகர்களின் புரியாத் தன்மையே காரணம்.

இந்தக்கதை - கதை, கவிதை எழுதியதால் ஏற்பட்ட சிக்கலே - காசிநாதர் அரிச்சந்திரன் நீதிமன்றம் வரை செல்லவேண்டியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் கதை - "விதியா"? மூலம் ஏற்பட்ட பிரச்சினை, பின் " ஒரு வாணமும் இரு தெருக்களும்" கதை வந்த பின்னர் இலக்கிய உலகில் இருந்து காணாமல் போய், பின் - "மல்லுக்கு இழுக்கின்ற சுணங்கன்" - கவிதை வந்த பிற்பாடு முற்றும் போக்குக் காணப்படுகின்றது.

"கறுப்பு நாய்" கவிதை வந்த பிற்பாடு ஏற்பட்ட சலசலப்புமே... கதை, கவிதைகளின் மைய நகர்வுகள். ஆனால் கர்மாவினதும் அக்காச்சியினுடையதுமான எதிர்வினைகள் இப்படைப்பினை இன்னொரு தளத்துக்குக் கொண்டு செல்வதைக் காணலாம்.

இங்கு "குற்றப் பத்திரிகை நகல்" - இவ்வடிவம் திசேயினால் "கண்ணியத்தின் காவலர்களில்" கையாளப்பட்ட உத்தி. அது இங்கும் கையாளப்பட்டிருக்கிறது. இது இப்படைப்பின் உச்சத்தைத் தடை செய்யுமா? என்பதுதான் என் கேள்வி.

சிவக்கொழுந்து
சிகரம்

* * *

சிவக்கொழுந்தினுடைய ஆதங்கம் தமிழில், கதைசொல்லும் மரபில் எந்தவிதப்பாதிப்பையும் ஏற்படுத்தும் ஒரு விடயமாகத் தெரியவில்லை. முன்னர் கூடப் பலருக்கு, இப்பிரச்சினை எழுந்திருக்கின்றது. 'உ.வ' வின் எலியத்தையும், ஸ்ரீபலிபாடகாந்தாரா வுவின் கீரியின் கதையும் புரியாமல், கொப்பி என எழுந்ததும் உண்டு. உண்மையில் அது அப்படியில்லையென்பது தெரியும். பாரதிக்குக் கூட இச்சிக்கல் இருந்திருக்கிறது. இங்கு வெவ்வேறு கதை சொல்லிகள், இரண்டுமே அடிப்படையில் வேறுபட்டவை. முதல் பாட்டத்திற்குப்பின் பெய்த இரண்டாவது மழை முற்றிலும் கதை, கவிதை சார்ந்து ஏற்பட்ட அரசியல் சிக்கலின் வெளிப்பாடு. கண்ணியத்தின் காவலர்கள் "கோமோ செக்ஸ்" (லெஸ்பியன்) சார் பிரச்சினை. இது முழுக்க முழுக்க நீதிமன்று, வழக்கு சார்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை சொல்லியல்ல. இறுதிக்கூறில் குற்றப் பத்திரிகையினூடாக கதை நகர்வு காணப்படுகின்றது. எனினும் இரண்டும் வெவ்வேறு பிரச்சினைகள்: வெவ்வேறு கதையாடல்கள்.

ஒரு உத்தியைப் பலர் பல்வேறு விதமாகப் பயன்படுத்துவதில் தவறு ஒன்றுமில்லை. 'ல.ம'வின் 36A பள்ளம் தொகுப்பிலுள்ள "ஜெயாவும் சௌந்தரபாண்டியனும்" கதை உத்தி 'திசே' யினுடைய "மாண்டான் சரித்திரத்தில்" காணப்படுகின்றது. 'பி.ர'வினுடைய "இங்கும் அங்கும் உடல்கள், அங்கும் இங்கும் கதைகள்" உத்தி முறையைப் பல தொகுப்புக்களில் காணலாம்.

எஸ். ராவின் கழிப்பறை உத்தி முறை 'திரு' வினுடைய "ஆண்கள் விடுதியினுல் காணலாம். இங்கு எல்லாக்கதை சொல்லிகளும் வேறுபட்டவை. உத்திகள், வடிவக் கூறுகள் ஒன்றுடன் ஒன்று இசைந்துள்ளன. இதில் என்ன தவறு உள்ளது? ஒன்றின் பாதிப்புத்தான் இன்னொன்றின் உருவாக்கம்.

செ.யோ

உலகத் தமிழ்ப் பல்கலைக்கழகம்.

* * *

படைப்பிலக்கியம் சார்ந்து எற்படுகின்ற பிரச்சினையை வாசிப்பது மகிழ்வு தருகிறது. இந்தக் கதையின் வாழ்வனுபவம் காசிநாதர் அரிச்சந்திரனுடையது மட்டுமல்ல, பல முகங்களுக்கும் நெருக்கத்தியுள்ளதைக் காணமுடியும். முழுக்க முழுக்க இலக்கியத்தினுடைய இயங்கியல் தன்மை கற்பனை சார்ந்து இயக்கம் கொள்வதல்ல. ஒவ்வொரு தனிமனிதனுடைய அனுபவம் சார்ந்த முகிழ்ப்பு என்பது, போர்வீரனின் வாழ்வின் அடையாளங்களுடன் ஈடுபட்டிருப்பதிலிருந்து உணர முடிகிறது.

அதிகாரத்தினுடைய மையத்தில் ஒரு தனி மனிதன் கேள்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

எழுப்பும் போது தனிமனிதக் குரல் அடக்கம் கொள்வது அல்லது அமைதி கொள்ளச் செய்வது, வரலாற்றினுடைய கறைபடிந்த காலங்களின் கசப்பான உண்மைகளாகவே உள்ளன. இது, இங்கும் தனிமனிதக் குரல் வெற்றி கொள்ள முடியாத ஒரு நிழல் தயாரிப்பு என்பது புரியக்கூடும். காசிநாதர் அரிச்சந்திரன் அன்றாடம் ஏதோ ஒரு வகையில் உணர்த்தும், அவரால் தொடர் இயக்கம் கொள்ளமுடியவில்லை. படைப்பூக்கம் இறைமையுள்ள அரசியென்று பார்த்தோ, அதனுடைய சீர்மைக்காகவோ, பித்தலாட்டத்திற்காகவோ துணைபோவதில்லை. அறத்தின்பால் கூடாத எதையும் கேள்வி கேட்கும். அரசோச்சி, அதிகாரத்தின் மையம் எனத்தலைவணங்கி, பொய்மையின் ஓட்டத்திற்குள் துணை போகும் ஒரு இயக்கமல்ல படைப்பு.

உண்மையில் காசிநாதர் அரிச்சந்திரன், உண்மைபற்றிப் பேச முனைவதே தவறாக உள்ளது. அவர் உண்மையில் மென்மை கொண்டவராகவே உள்ளார். வலது பெருவிரலையும், ஆள்காட்டி விரலையும் இழப்பதற்கோ, நூல்களை அக்கினி வேள்விக்கு ஒப்படைப்பதற்கோ, மனநல மருத்துவ நிலையத்திற்குச் செல்வதற்கோ, கழுதை, கழுகு இவற்றிடம் தன்னை அர்ப்பணிப்பதற்கோ தயாரில்லைதான்.

எத்தனை பேர்தான் இதை ஒப்புக்கொள்வர்? அவருடைய முடிவு கூட..... "வயிற்றுச் சோத்துக்குக் கூட உதவாக் கதையையோ, கவிதையையோ எழுதப் போவதில்லை" என நீதிபதிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் கூட, எதுவித பயனும் ஏற்படவில்லை. அவர்கள் கூட ஒரு வார்த்தைபேசவில்லை. வாய் திறப்பதற்குக் கூட நீதிமன்றத்திற்கே அதிகாரமில்லை. அது யார் யாராலோ தீர்மானிக்கப்படுகிறது. அதுதான் அவன் ஒரு நேர வயிற்றுச் சோத்துக்குக் கூட உதவாத எழுத்து என்னத்திற்கு? என முடிவு கட்டியிருக்க வேண்டும். அது மாத்திரமின்றி, பத்துப்பிள்ளைகளின் தந்தையாகவும், காசநோயாளியான தன் மனைவிக்குத் துணையாகவும் அவன் ஒருவனேதான்.



Class No:
Acc No 786

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

அதனால் அவனுக்கு ஏதும் ஏற்பட்டால் அவன் குடும்பமே நடுரோட்டில் நிற்கும் இப்படி அதிகாரங்களை எதிர்த்தவர்கள் பலர், நாய்க்கும் கேவலமாக நடுவீதியில், சந்து பொந்துகளில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காயிருக்கிறார்கள். குடும்பம் சிதைந்து அல்லோல கல்லோலப் பட்டிருக்கின்றது அனாதைகளாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக்கெதி தன் குடும்பத்திற்கு வரக்கூடாதெனப் போர்வீரன் நினைத்திருக்ககக்கூடும்.

இந்தக் கதையயை நான் எழுதி, பல வருடங்களுக்குப் பின்னரே திசேயினுடைய கதையைப் படிக்கக்கூடியதாகவிருந்தது. நானும் திசேயும் இதற்கு முன்னர் ஒத்த கருவில் இருகதைகள் எழுதியிருக்கிறோம். அது நானும் திசேயும் சேர்ந்துதான் ஒரே கருவில்எழுதுவதாக முடிவெடுத்து எழுதிய காலம். காலப்போக்கில் அது சரிப்பட்டு வராததால் விட்டு விலகினோம். இதைக் "கொம்பு நீட்டுகின்ற கிருமியில்" விபரமாகச்சொல்லியிருக்கிறேன்.

உண்மையில் ஒரு வாணமும் இரு தெருக்களும் தான் எனக்குப் பிரச்சினையான பிரதியாக இருந்தது. நான் ஒரு நொடியில்த்தான் உயிர்தப்பியிருந்தேன். மரணத்தினுடைய தருணங்களைப் பல இடங்களில் சந்தித்திருந்தாலும் இத்தருணம் மிக ஆபத்தானதாகவே யிருந்தது. அது அவர்களின் அறியாமைதான். ஒரு வாணமும் இரு தெருக்களும் சொல்லும் கதையாடல் கூட அறியாமையின் மரணங்கள் தான். வாழ்வு பற்றிய, உண்மை புரியாத புருஷர்களாக வாழ்ந்ததும். ஒரு அதிகாரத்தின் நிழலுக்காகத் தங்களைக் காவு கொள்ளச் செய்ததும் நிதர்சனம். அதை வெளிச்சத்திற்கு கொண்டு வரும்போது சிலவரிகளை சில வார்த்தைகளைப் புரிந்து கொள்ளாததுதான் இச்சிக்கல்.

மல்லுக்கு இழுக்கின்ற சுணங்களை அரசி பற்றியதாக ஒரு போதும் நான் நினைக்கவில்லை, பிரதி அப்படிப் பார்க்கப்பட்டிருக்கிறது. கறுப்பு நாய் கூட முதிர் ஸ்திரிகளின் உடல் தாகம் வேண்டுதலின் பிரதிபலிப்பு.



Class No:
Acc No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பெண்ணுக்கான உடல் தாகம் மறுக்கப்படுகின்றபோது தாண்டுகை மேல் எழுகின்றது. இது தவிர்க்க முடியாதது. (ஒழுக்கவியலை மீறுகிறது)

இனி, காசிநாதர் அரிச்சந்திரனுக்கும் பிரச்சினை, படைப்பூக்கம் அதிகாரத்தின் மையத்தினால் கட்டமைக்கப்பட்டால், வெற்று வாழ்க்கையை எதுகொண்டு நிரப்புவது, என்பதே?

*01-01-2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டையனின் மரணக்கதை

அவஸ்தைகளால் நிரம்பி நிற்கின்ற அவனது மனம், பெரும் பெயரொன்றிற் காய் ஏங்கி நிற்கிறது. மறுபடியும் அந்த விமர்சனத்தை வாசித்தான். மீண்டும் தேய்ந்த ஒலிநாடாக்கள் போல் அவர்களின் பெயர்கள்தான் எழுதப்பட்டிருந்தன. ஒலிபெருக்குகின்றன. அவனுக்கு தன் பெயர் குறிப்பிடப்படாதது, ஏன் எனத் தனக்குள் பசப்பினான்? எழுதுபவர்களும், கதைப்பவர்களும் அவர்கள் தான். என்ன அந்த எழுத்துக்களில் பிரமாதமாக உள்ளன?

அவனுக்குத் தன் எழுத்துப்பிடிக்காமல் போகவில்லை. 'அசோமி' போல் எழுதுவதாகவே நினைக்கிறான். தமிழில் 'அசோமி' போல் யார் பெரிய எழுத்தாளன் இருக்கின்றான். 'சு.ரா' வின் "ஸ்ராம் அல்பம்" போலத்தான் அவனுடைய "சிலேட்" கதையும் அற்புதம். அப்படியிருக்க 'சு.ரா' வை பெரும் எழுத்தாளன் என்கிறார்கள். ஏன் அவனைச் சொல்லவில்லை? அவனுக்கு இதுதான் இப்போ பிரச்சினை.

தன்னுடைய கதைப்பிரதிகளை ஒவ்வொன்றாக எடுத்தான். வீடு முழுவதும் பரப்பினான். "சிலேட்" டிற்கு மேலே பெரிய கல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தான். மற்றப் பிரதிகளுக்கும், மேலும் சிறு சிறு கற்களை வைத்தான். ஒரு தடவை தூரத்திலிருந்து பார்த்தான். ஊகூம் எல்லாம் அழகாகவே அவனுக்குப்பட்டன. பிறகு ஏன்? அவன் பெயர் உச்சரிக்கப்படவில்லை. ஒரு தடவை தலையைச் சொறிந்தான். வீர்றென்று தன் அறைக்குள் சென்று கபாலபதி, வெள்ளைத்தோல் வீரர்கள், பெரிய எழுத்து, கனவில் பெய்த மழை பற்றிய இசைக்குறிப்புக்கள், முன்பு ஒரு காலத்தில் நூற்றி யெட்டுக் கிளிகள் இருந்தன..... தொகுதிக்கதைகளை எடுத்து வந்து கொட்டினான். 'பி.ர', 'தி.ரா', 'ம.செ' உதிரியாக 'இரா'வையும் நிலத்தில் பரப்பினான். வீச்சுவலையில் பிடிபட்டுத் துடிக்கும் சள்ளல், ஒட்டி போல் எல்லாப் பிரதிகளும் துடித்தன. பாய்ந்து பாய்ந்து கற்களை பிரதிகளின் மேல் வைத்தான். 'பி.ர' வை வேறாக வைத்தான். 'தி.ரா', 'ம.செ', 'இரா'வின் மூன்றையும் ஒன்றாகக் குவித்தான் மாண்டான் சரிதம்....., மஞ்சள் வரி கறுப்பு வரி, பெரிய எழுத்து,......, சதுரம்,.........

மீண்டும் மீண்டும் வாசித்தான். இதில் என்ன இருக்கு? எல்லாம் ஒரே குழப்பம், பம்மாத்து, எதுவுமே அவனுக்கு விளங்கவில்லை. கட்டுரை சொற்கள் சிறுகதை இது தான் அவனுக்குப் பிடிபட்டது. இப்படி எழுதுவதுதான் பின் நவீனத்துவமா? பின்நவீனத்துவம் என்றால் என்ன? முன்னுக்குப் பின் முரணாக எழுதுவதா? அல்லது பிதற்றுவதா? அல்லது வேறு மேதாவியாக எழுதுவதா? அவன் இதில் ஏதோ ஒன்றுக்குள்தான் வந்தான். 'இரா'வின் வீரகேசரியில் எழுதிய ஒரு கட்டுரையில் சமன்பாடு, அறிக்கை, வரைபடம், குறிப்பேடு, அட்டவணை, படம் என உட்கூறுகளைக்கொண்டு புனைவது பின்நவீனத்துவக் கதைகள் என எப்போதோ படித்த ஞாபகம், அவனுக்குள் கிளறியது. அப்போ கட்டுடைத்தல் என்பது என்ன? அவனால் ஊகிக்கமுடியவில்லை.

கதைகள் படிப்பதில் அவனுக்கு ஈடுபாடு சற்றுக் குறைந்து போயிற்று. கதைப் பிரதிகள் இப்போ அவனுக்கு எதிரிபோல்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்பட்டன. இருந்தும் நேற்று வேலைப்பளுவினால் 'அயர்ந்து' தூங்கி எழுந்தவன் கட்டிலில் கிடந்த உயிர்எழுத்து ஆகஸ்ட் 2009ஐ எடுத்து வாசிக்கத் தொடங்கினான். எடுத்த எடுப்பிலே காட்டு மனிதன் நகர் நீங்கியது. 'பா.வெ'யின் கதை அவனுக்குப் பிடித்துப் போனது. கதையை அப்படியே மனப்பாடம் செய்து கொண்டு மற்றப்பக்கங்களைத் தட்டினான். பிறகு, 'கால'னின் பட்டித்தெரு, 'ச.ரா'வின் "காட்டின் பெருங்கனவு" அப்படியே மனதில் தைத்தன. ஒரு புத்துணர்ச்சி எழுந்து ஊசலாடியது. அவன் ஒப்பு நோக்கினான். அவனது பிரதிகள் அவ்வளவு மோசமில்லை. எல்லாம் கிட்டத்தட்ட நின்றன. அவை பின்னர் நடந்து பட்டித்தெருவிலும், காட்டின் பெருங்கனவிலும், காட்டு மனிதர் நகர் நீங்கியதிற்குள்ளும் குதித்து நீச்சலடித்தன. அவனுடைய எந்தப்பிரதியும் அழிந்து விடவில்லை. அது அவனுக்கு பெரும் சந்தோசம். இங்குதான் அவன் பழைய ஒலி நாடாக்களினால் கணக்கிலெடுக்கப்படவில்லை. மற்றப்படி அவன்...........

இருந்தும் அவன் மனம் ஆலாய்பறந்தது. தன் பெயரை பழைய ஒலி நாடாக்கள் தேட வேண்டும் என்று விரும்பினான். பின்நவீனத்துவம் என்ன கொம்பா? பின்நவீனக் கதைகளை எழுதக்குந்தினான் எந்த "ஸ்ரைலில்" எழுதுவது சமன்பாடா?, அட்டவணையா?, படமா?, வரைபடமா?, எதனூடாகத் தொடங்குவது சிறிது நேரம் கண்ணை மூடி எல்லாவற்றையும் மனதுக்குள் எடுத்து ஒரு முடிவுக்கு வந்தான்.

"நம்மிடமிருந்து அனைத்தும் நழுவிப் போய் விடுகிறபோது மரணம் தான் பற்றிக்கொள்ள எஞ்சியிருப்பது!" - பால்செலான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரணம் - 01

சந்திரபோஸ் சுதாகர் 14 வயதிலே வேங்கை அணியில் இணைந்திருந்தான். விடுதலை பற்றி எதுவும் தெரியாத பிஞ்சு அவன். 'சோபா'வின் "ரொக்கிராஜன்"தான் அவன் துவக்குத் தூக்குவதற்கு தொண்ணூற் றொன்பது வீதம் காரணம். ரொக்கிராஜன் சுதாகருக்கு ஒன்று விட்ட மாமன் முறை. அவன், விடுதலை விடுமுறையில் வரும் போது சுதாகருக்கு ஆனையிறவுச் சண்டை, ஜெயசிக்குறுச் சண்டைப் படங்களையும், வீர தீரத்யையும் சொல்லிச் சொல்லி சுதாகரை ஊசியில் ஏற்றுவான். ஆரம்பத்தில் அவனுக்கு விருப்பம் இருக்காட்டிலும் ரொக்கியின் ஏ.கே- 47 தான் அவனை இயக்கத்துக்குப் போக வைத்தது.

சுதாகருக்கு பயிற்சி நிலையங்களிலும் பாசறைகளிலும் சக நண்பர்கள் என எவரும் இருக்கவில்லை. புத்தகங்களும், சஞ்சிகைகளும், கடதாசிகளும், பேனாக்களுமே தோழர்கள். பயிற்சி முடிந்தால் கவிதைகள் கட்டுக்கட்டாகப் பிறக்கும்.

01.01.1990 அன்று சந்திரபோஸ் சுதாகர் பயிற்சி நிலையத்திற்குப் போகவில்லை. தணல் பறந்த காய்ச்சல் அவனுக்கு, தனியாக முணங்கிக்கொண்டு படுத்திருந்தான். "ரெயினிங் மாஸ்ரர்" சுதாகர் எங்கே? என விசாரித்திருக்கிறார். யாரும் அவனைப்பற்றி சொல்லவில்லை. தெரியாது என்றே பதில்கள் வந்தன. மாஸ்டர் கூடாரத்திற்கு வந்த போதுதான் சுதாகர் படுத்துக்கிடப்பது தெரிந்தது.

"டே என்னடா செய்கிறாய்"

"காச்சல் மாஸ்டர்"

"காச்சலும் பீச்சலும், நீ திடலுக்கு வந்திருக்கணுமல்ல"

"வர ஏலாது மாஸ்டர். அது தான் வரல"

"அந்தக்கதையெல்லாம் தேவையில்ல, முதலில வந்த பிறகுதான் மத்ததெல்லாம்"

விவாதம் "பணிஸ்மென்ற்" வரை போய் விட்டது. அவன் "பணிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்றை" ஏற்கவில்லை. "ரெயினிங் மாஸ்டர்" துவக்கை நீட்ட சுதாகர் திமிறியெழுந்து "ரெயினிங் மாஸ்டரைத் தள்ளிவிட்டு துவக்கைப் பறித்து அடித்து விட்டான்.

பிரச்சினை தலைவர் வரை போயிற்று. விசாரணைக்காக சுதாகர் கொண்டு வந்தபோது அவன் மெலிந்திருந்தான். இருட்டு அறையின் வாழ்வு அவனை சித்தப்பிரமையாக்கியிருந்தது. ஒரு நேரச் சாப்பாடு அவனைக் களைப்படையச் செய்திருந்தது. அவனை யாரோ தள்ளுவது போன்ற உடல் நிலை.

தலைவர் 30 வருட போராட்டத்தில் யாரையுமே விசாரித்ததில்லை. சந்திரபோஸ் சுதாகர் தான் முதல் விசாரிப்பு.

"ஏன் அடித்த நீ" என்று கேட்டார். "அண்ணே! அண்டைக்கு சரியான காச்சல் எழும்பேலாது. ஏ.கே யை புடிச்சுத்து ஓடுகிற தெண்டா சும்மா வேலயா? பிலம் வேணுமல்ல அண்ணே! அதுதான் ஏலல்ல. "அத மாஸ்டரிடம் சொன்னால் அவருக்கு விளங்குதில்ல" ...என்றான் சுதாகர்.

"அது சரி ஆருட்டையும் வியளம் சொல்லியிருக்கலாமே"

"ஆரும் கூட்டமில்லை அண்ணே!" என்றான்

"அப்ப எப்படி நாம விடுதலை எடுக்கிற" என்று கேட்டார்.

" விடுதல சும்மா கததான்" அவருக்குக் கண்சிவந்தது.

"அப்ப ஏன் இங்க வந்த நீ"

"துவக்குத் தூக்கணும், "கலஸ்" காட்டணும், என்ன மத்தாக்கள் பாக்கணும், மதிக்கணும், பயப்படணும்"

"வாயைப் பொத்தடா........"

பக்கத்தில் நின்ற "வொடிஸ்" அடிக்கக் கையை ஓங்கினான். தலைவர் கையைக் காட்டினார். அவன் அடிக்கவில்லை.

"உனக்கு இங்கே இருக்கேலாட்டி போகலாம் என்றார்.

"அண்ணே! இவன் கவிததான் எழுதுறதே வேல மத்தப்படி உணர்வுமில்ல, ஒண்டுமில்ல" என்றான் "ரெயினிங் மாஸ்டர்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ பெரிய கவிஞனோ"

"ஓம் நான் பெரிய கவிதான். உங்களுக்கு கவிதை பற்றி என்ன தெரியும்" என்று கேட்டான். அவர் சிரித்தார். விசாரணை முடிந்தது. நீதிபதிகள் 101 பக்கத்தீர்ப்பு அறிக்கையை வாசித்தனர். முக்கிய குற்றங்கள்

1. தலைவரை எதிர்த்துப் பேசியது.
2. ரெயினிங் மாஸ்ரருக்கு அடித்தது.
3. விடுதலை உணர்வு இல்லாமை
4. உடல் நிலையில் கவனம் கொண்டமை.

உபகுற்றங்கள்

1. சக போராளிகளுடன் நட்புக் கொள்ளாமை.
2. கவிஞனாக இருந்தமை.
3. தலைவருக்கு கவிதை தெரியாது என்று சொன்னமை.

இப்படி உப குற்றங்கள். பிரிவு பிரிவுக் குற்றங்கள் என தண்டனைகளுமாக 101 பக்கங்கள் வாசிக்கப்பட்ட போது பொழுது சாய்ந்திருந்தது.

அவன் மீண்டும் இருட்டுக்கிடங்கில் (பாதாளம்) அடைக்கப்பட்டு ஆறு மாதங்கள் ஆன பின்பு, தலைவரின் பிறந்தநாள் அன்று விடுதலை யானான். சுதாகருக்கு விடுதலை பற்றி எந்த விருப்போ, உணர்வோ ஏற்படவில்லை. அவன் தலைமைச் செயலகத்தில் துண்டைக் கொடுத்து வீடு போனான்.

இப்போ அவனுக்கு கவிதைதான் மன ஆறுதலாக இருந்தது. கவிதைகள் பிரவாகம் எடுக்கின்ற இப்படியான ஒரு காலத்தில்தான் அவன் 'சித்தாபுத்தா' குழுவினரால் மண்வெட்டியினாலும், சவளினாலும் தன் மகன் முன் அடித்துக்கொல்லப்பட்ட போது சூரியன் சரிந்தது. அவன் திமிறியெழுந்து மூச்சை உள்ளே இழுத்து உதைத்தான். நிலம் பிளந்து பூமாதேவி அவனைத் தாங்கினாள். ஆய்.......



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராசாத்தி ரொம்ப அழகி. அவளை ஆசைப்படாதவர்கள் யாருமில்லை எத்தனையோ இளைஞர்களின் கனவுக்கன்னி, அவளின் வீட்டு மூலைகளில் குவிந்து கிடந்த காதல் கடிதங்களின் பிரதிகளை பத்துக்கு மேற்பட்டவர்கள் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்கள் என்றால் பாருங்களேன். அப்படி அவள்.....

நளமகாராசாவின் மறுபிறப்பென்று கருதும் நதன்ராஜ் கூட அவளை முன்னுக்கும் பின்னுக்கும் துரத்தாத நாளே இல்லை. இறுதியில் போதும் சாமி இந்தப் புண்ணாக்கு எனப்பின்வாங்கியது தெரிந்ததே. அவள் எந்த வலைகளிலும் சிக்காது சிறுமீன்களாகத் தப்பித்தே வந்தாள். அவளின் கெட்ட காலம் குமுக்கனுக்கு இரையானது பெரியகதை.

குமுக்கன் சிறியின் இயக்கத்தில் முக்கியமான ஒரு உறுப்பினரில்லை. தையான் பாட்டியாகத்தான் திரிந்தவன். பிறகு ஊருக்கு அலுவலகப் பொறுப்பாளரானான். ராசாத்தியும் கணிதபாடத்திற்கு அந்த வீதியாலதான் "ரியூசனு"க்குப் போய் வரும் போது தான். குமுக்கனின் கண்ணில் பட்டாள். குமுக்கன் அவளை அடைவதற்கு பல சூழ்ச்சிகளைச்செய்து பார்த்தான். போதாக்குறைக்கு அவளின் தம்பியை "புலி" என்று அடைத்துப்பார்த்தான். "ஊகூம்" வெளிப்படையாகப் பலதடவை வற்புறுத்தி தன் காதலுக்கு அடிபணிய வைக்க முயற்சித்தான். அவள் அடிபணியவில்லை. அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்ற விதி அவனுக்குள் தோற்றுப் போனது. அவனின் முடிவு அவளை அதுதான் செய்வது. இருட்டுப்பட்ட மாரிகால மழைநாள் ஒன்றில் அவள் குமுக்கனினால் வல்லுறவுச் செய்யப்பட்டு ஆற்றில் வீசப்பட்ட போது ஊர் முழுவதும் அவளின் ஓலம் ஒலித்தது. யாருமே ஏதும் செய்ய முடியவில்லை. ஊரிலுள்ள ஆண் குறிகள் அடங்கிப் போனது. குமுக்கனின் குறி மட்டுமே எழுந்து ஓங்கியது. கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிஸ்ரலை" எடுத்தான். "தாம்... தைத்தோம்... தாம் ..... தாம் எனப் புதுப் புது இதழ்களை விரித்தான். அவனிடம் நீதிபதி கூட ஒன்றும் கேளார். ஆய்.....

தெருவின் மூலை முழுவதும்
அலைந்து திரிந்த மரணம்
விடுதலையையும்
அது பறிக்காமல் விடவில்லை
மரணம்
இனி யாராலும்
நடக்கும்

-மாசெ.

## மரணம் - 03

கனகம்மா கிளிநொச்சி கனகராசா வீதியைச் சேர்ந்தவள். தமிழினம் விடுதலை பெற வேண்டுமென்று அவளால் முடிந்த எல்லாவற்றையும் செய்திருக்கிறாள். சத்தியாகிரகம், மறியல் போராட்டம், ஸ்ரீ போராட்டம், உண்ணாவிரதப் போராட்டம் அவள் ஏற்காத போராட்டங்களே இல்லையெனலாம். தந்தை செல்வா, அமிர்தலிங்கம், சிவசிதம்பரம்,.... என அவளைப் பாராட்டிப் பேசாத தலைவர்களே இல்லை.

"கோல்பேஸ்" முன்னால் நடந்த அகிம்சைப் போராட்டத்தில் இடது பக்க மண்டை "பேந்து" இருபது நாள் ஆஸ்பத்திரியில் படுத்துக்கிடந்து வீடு போன அன்றுதான் அவளுக்கு வெற்றித் திலகமிட்டு சங்கு முழங்கி பொன்னாடை போர்த்தி "வீரவேங்கை" என்ற பட்டப்பெயர் வழங்கி கௌரவித்தனர். அவள் எதற்கும் அஞ்சாதவள். என்னவோ தெரியல்ல அவளுக்கு இந்தப் போராட்டம் பிடிக்கல்ல. "வலிஞ்சுதா வலிஞ்சுதா எண்டா சின்னத்தான் கூட இந்தா இந்தா எண்டு தரமாட்டானாம்" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிக்கடி உரக்கப் பேசியவள். நமக்கு விடுதலை எண்டா வேறு வழியத்தான் பாக்கணும். அது தான் செரி. அகிம்சை, உண்ணா விரதம், சத்தியாகிரகம் எல்லாவற்றையும் தூக்கியெறிந்து மகனையும் கூட்டாளிகளையும் கடல் கடந்து அனுப்பிவைத்தாள். "மானம் உள்ள தமிழா மலையாய்த்திரண்டு வாடா." "மானம் காப்போம் எம் மண்ணை மீட்டெடுப்போம்." "அவளின் மேடைப்பேச்சுக்களும், தீவிரப் பிரச்சாரமும் அலை அலையாய் வீரர்களை உருவாக்கியது.

ஆனால், அவள் சொட்டும் எதிர்பார்க்கவில்லை மகன் இப்படி மாண்டு போவான் என்று, கனவிலும் அவள் நினைத்திராத ஒன்று. புற நாநூற்று வீரத்தாய், புலி அரசி என்ற பட்டங்கள் அவளை உசுப்பவில்லை. அவள் அடிபட்ட பெட்டிப்பாம்பாய்ப் போனாள். சோசலிசம், மாக்சி சம், லெனிலிசியம் பேசியவள் இயக்கங்களை வெறுத்துப்போனாள். கனகம்மாக்காவை இப்ப இருக்கிற பெடியளுக்கு யாரென்று கூடத் தெரியாது. கோவிலும் குளமுமென்று திரிகிற மனிசியை யாருக்குத்தான் தெரியப்போகிறது.

அவளுக்கு இந்தக் கிளிநொச்சி நகரத்தில் வாழவே பிடிக்கல்ல. எப்படி இந்த ஊரை விட்டுத் தப்புவது எனச் சதா சிந்தித்தாலும் தன் இளையமகன் மகாகவி ரவிதான் ஞாபகத்திற்கு வந்து துளைப்பான்.

அன்று மழை அடித்து ஓய்ந்த காலைப் பொழுது எல்லைப் பாதுகாப் பிற்காக (எல்லைக் காவல்பிரிவு) ஊரிலுள்ள சகலரும் ஒலிபெருக்கியில் அழைக்கப்பட்டனர். கனகம்மாவினால் எழும்ப ஏலாது, எழும்பினா குந்தமுடியாத நிலை. மனிசி வீட்டிற்குள் முடங்கிக்கிடந்ததை பொருட் படுத்தாது போக்கிரிகள் பயிற்சிக்காக இழுத்திற்றுப் போனார்கள்.

"மனே! எண்ட வயதென்ன மனே! எனக்கு ஓட ஏலுமா ராசா, என்னை விட்டிடுங்க மனே!" என எவ்வளவோ மனிசி கெஞ்சிப் பார்த்தும் அவனுகள் விட்டபாடில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடுதலை எண்டா எல்லாரும் தான் பங்களிப்புச் செய்யணும். நீ சும்மா இருந்துத்து பலன் அனுபவிக்கலாமா?" என்றான் சேங்குப்பல்லன்.

கனகம்மா அதன் பின் எதுவுமே கதைக்கவில்லை. இந்த மொக்கனிடம் எதுவும் கதைத்து எந்தப் பலனும் கிடைக்காது. "ஓடுங்க எண்டான்" சேங்குப்பல்லன். "ஹாய்" என்று மாடுகளைக் கலைத்த மாதிரிதான் இருந்தது. கனகம்மா ஐம்பது மீற்றர் தான் ஓடியிருப்பா. தடார் என்று விழுந்தது தான் தெரியும் கனகம்மா மயக்கமானாள்.

ரவிக்கு விசலம் கிடைக்கும் போது பகல் சாய்ந்திருந்தது. அவனுக்கு வந்தது வரல்ல.

"என்னடா இயக்கம் நடத்திரிங்க. நாளைக்கு பாடையில் ஏறுறதெல்லாம் சண்டைக்கு கொண்டு போய் விடுதலை பெறுறதா? போங்கடா உங்கட இயக்கமும் உங்கட போராட்டமும்"

வாய்க்கு வந்தமாதிரி ஏசிவிட்டான். ரவியிட நல்ல காலம் கருணா அங்கு நின்றது. இல்லாட்டி ரவியைத் துலைத்திருப்பார்கள். அவனுகளைச் சமாளித்து வீட்ட கொண்டு வந்து சேர்ந்த மூன்றாம் நாள் கனகக்காக விடைபெற்றா. ரவி தனக்குள் பொங்கி எழுந்த ஆத்திரங்களை வீட்டுச் சுவரில் இடித்துப் பெரும் இரத்தச் சுனையை உருவாக்கி அதில் நீச்சலடித்த போது வானம் உடைந்து ஊர் தாழத் தொடங்கியது. கனகக்கா மிதந்து மிதந்து..... போனா....... ஆய்.......

மரணத்தை அழைக்க விருப்பமில்லை
எனக்கு
காலாதிகாலமாக
பலியெடுத்து பலியெடுத்து
மனிதர்களின் சேவகனாய்
போன எனக்கும்
எலிகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் குரோதமுமில்லை
மரணம் அது
எந்த உருவிலும் வரும்!

-த.ம-

## மரணம் - 04

சிற்றரசு பெரும் ஆட்சியை நடத்திக்கொண்டு வந்தான். அவனின் ஆட்சியில் "நல்லாட்சி" கூட தப்பவில்லை. அதைக்கூட சிற்றரசு ருசித்துப்பார்த்திருந்தான். காசியப்பன் நல்லாட்சி இயக்கத்தின் தலைவன். இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்று கோடிக்கணக்கான ரூபாயில் அச்சிடப்பட்ட புத்தகம் "நல்லாட்சியும் மக்களும்" அந்தப் புத்தகத்தை அவன் இலவசமாக வாங்குவதற்கு ஏழு நாள் முகம் கழுவாமல் கால் கடுக்கக் கடுக்க நின்று வாங்கி இத்தனை நாளும் பகுத்திரமாக வைத்திருந்தான். அதைப் பார்க்கப்பார்க்க ஆத்திரம் குஞ்சியிலிருந்து, எழுந்து வந்தது.

"வேச மகன்ட எலிய என்ன செய்யிற""பாசாணம் வச்சுப்பாரு தம்பி" இலவச புத்திமதி ஆலோசகர் வைத்திய சேஷ்த்திரி, மதி நுட்ப சட்டாம்தம்பி சின்னவன் சிவலிங்கம் அண்ணன் சொன்ன கதைகளையும் கேட்டு அவன் செய்து பார்த்தான். சிற்றசு பெரும் புத்திசாலி பாசணத்தை முகர்ந்து விட்டு போயிருந்தது.

அவனுடைய எந்த வியூகமும் வெற்றி அளிக்கவில்லை. சிற்றரசரை அவனால் கைது செய்ய முடியவில்லை. அவனுடைய வருமானத்தின் பெரும் பகுதி சிற்றரசரினால் துண்டு விழுந்து கொண்டே போனது.

நேற்று அறை முழுதும் டெங்கு நுளம்பிற்கு அடித்து வந்த புகையை சிதம்பரம் தன் அலுமாரி வைக்கப்பட்ட அறையிலும் அடிக்கச் சொன்னான். அவன் "இது அண்ண நுளம்பிற்கு அடிக்கிற மருந்து எலிக்கு அடிக்கிற மருந்தில்ல."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சும்மா அடியன் புத்தகங்களில் ஒட்டியிருக்கும் நுளம்பு சாகும்."

அவன் புகையைக் கக்கினான்.

இரண்டு நாளாய் எந்தச் சடசடப்பும் காணவில்லை. மூன்றாம் நாள் மெல்ல ஒரு மணம் வீசியது. சிதம்பரம் தன் ஆராய்ச்சியை மோட்டு வளையிலிருந்து அலுமாரி முழுவதும் தேடினான். "ஊகூம்" எந்தப் பிணத்தையும் அவனால் கைப்பற்ற முடியவில்லை. 5ம், 6ம், நாள் வீட்டில் இருக்கமுடியவில்லை. நாற்றம் ஊரையே கூட்டியது. சிதம்பரம் மோப்ப நாயை கொண்டு வீடு முழுவதும் சல்லடை போட்டான். அலுமாரியின் அடிப்பக்கமிருந்து ஒரு சுண்டெலி கண்டு பிடிக்கப்பட்டபோது சிதம்பரம் இடிந்து விழுந்தான். காட்டெலியின் இன்னொரு இனத்தையும் கூட்டி வந்திருக்கிற செய்தி அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது. இருந்தும் டெங்கு நுளம்பின் புண்ணியத்தால் எலிகளின் தொல்லை சற்று நீங்கியிருப்பது அவனுக்கு ஆறுதல்தான்.

இதெல்லாம் கடந்து இரண்டு கிழமையும் மூன்று நாளும் கழிந்து ஒரு பின்னிரவு சடசடப்பு எழுந்தது. சிதம்பரம் சாமியறை "லைற்றைப்" போட்டுப் பார்த்தான். சிற்றரசு இன்னொரு சிற்றரசியையோ, சிற்றூரனையோ அழைத்து வந்திருந்தான். அவனுக்கு "வந்தெல்ல" ஆத்திரம். கையில் அகப்பட்ட புத்தகத்தால் எறிந்தான். "கீச்" சென்று மாயமாய் மறைந்தன. சிதம்பரத்திற்கு அன்று நித்திரையே வரவில்லை. சிதம்பரம் டாக்டராகணும் என்று படித்த காலத்திலே இருந்தே எலிகளுடன் பெரும் கோபம் இருந்து வந்தது. அவ்வளவு அவனை படாதபாடு படுத்தியிருக்கு.

மெழுகுத்தட்டில் எலிகளைப் பதித்து எலிகளை வெட்டும் போது எலிகள் உதைத்த உதையில் வெள்ளைச்சட்டை, ரவுசர் எல்லாம் பாழாய் போயிருக்கு. இருந்தும் பெரும் டொக்டராக பாவனை செய்து ஒப்பிரேசன் செய்யும் போது பெரும் "சேர்சனாக" சக மாணவர் களுக்கு முன் நிற்கும் போது எலிகளின் சேட்டைகள் அவனுக்குப் பெரிதாகப்படாவிட்டாலும் எலிகளைத்தேடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்டையாடும் போது வெறுத்தே போவான். இந்த வேட்டையினால் அவன்ட வீட்டில மண்ணுக்கும் எலியில்ல. அப்ப அவன்ட ஏரியாவிலும் எலி எண்ட பேச்சுக்கே இடமில்லை. இதற்குக்காரணம். கரப்பான் அழிப்பிற்கு அவன் பயணம் செய்த காலத்தில் எலிகளும் அழிந்திருக்கின்றன. அவனுக்குக் கூட மர்மமாகவே இருக்கிறது. அதன் பின் எப்படி எலிகள் உருவாகின. அவன் தனக்குள் கேட்டுக் கொண்ட கேள்விகளுக்கு எந்தப் புத்தகத்திலும் பதில்கள் இல்லை.

காலையில் சிதம்பரம் அலுமாரியைத் திறந்து பார்த்தான். விளிம்பு ஓரத்தால் அறுத்தெடுத்த எலி அலுமாரிக்குள் ஆக்கிரமிப்பு செய்திருப்பது அவனுக்குப் புரிந்தது. கதவைத் திறந்து அவசரத்தில் புத்தகத்தைக் கிண்டினான். அறுத்துக் குமித்து வைத்திருந்த தாள் குமியல் அவனுக்கு பதபதப்பைத் தந்தது. " உயிரைவிட மேலானது நூல்கள். மிகக் கவனமாய் வாசித்துத்தாருங்கள்" அவன் ஒவ்வொரு புத்தகத்திலிலும் எழுதி வைத்திருக்கும் வாக்கியம் மின்னல் வெட்டாய்ப் பளிச்சிட்டது. கதைப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த 'உ.வ'வின் 'உள்மன யாத்திரையும்,' 'பி.ரா' வின் இன் 'முன்பு ஒரு காலத்தில் நூற்றியெட்டுக்கிளிகள் இருந்தன' என்பனவற்றை பதம்பார்த்திருந்தன.

"வேச மகன்ட எலி" அவனை அறியாமலே வார்த்தைகள் கிளம்பின. உள் மனயாத்திரையை பிரட்டினான். எலியம் சிறுகதை முற்றாக துவம்சம் செய்யப்பட்டிருந்தது. இது படித்த எலியா? அல்லது 'உ.வ'வின் கதையில் சொன்ன எலியா? கல்முனையிலிருந்து சிதம்பரத்தின் ஊர் 40 கிலோமீட்டர் வரும். அங்கிருந்து இங்கு வருவதற்கு 15 வருசம் எடுத்திருக்குமா ? எலிகளின் காலம் எத்தனை வருசம்? அவன் கிறுக்கலாக சிந்தித்தான். பாழடைந்த வங்குளாவில் வாழ்ந்த எலிக்கு ஜே!

ஏன் 'பி.ரா'வின் முன்பு ஒரு காலத்தில் 108 கிளிகள் இருந்தன. பிடித்துப் போனதோ? இருவரும் சேர்ந்து கதைகள் எழுதமுடியாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற முடிவாலோ? சிதம்பரம் 108 கிளிகளைத்தட்டிப் பார்த்தான். சில கிளிகள் சிறகுடைந்து துடித்தன.

ஆட்ட விதிகளுக்குள் அடைபட்ட கடவுளின் தடம் கதையில்...

"உனது ஆண்குறியைப் பற்றிய பிரக்ஞை இல்லாமல் என்னை நீ புணர்கிறாய் உனது வேகம், என் உடலுக்குள் நீ புகுந்து உனது மரணத்திலிருந்து தப்பி..... இரவிலும்...... போகித்தில்லை. எனக்கு வெளிச்சம்..... படுக்கை.... ல் தான்....." தாள் குவியல்கள் பக்கம் பக்கமாய் உயிர் எழுத்தும், உயிர்மை எழுத்துக்களுமாய்....

"நூறு நாய்கள் குரைக்கட்டும்" கதையில் காலம் : நான்கு

*Opium is the opinism of our time.*

"என் யோனிக்குள் வெதுவெதுப்பாய் அவனுடைய உயிர்த் திரவம் வழிந்தது"

இவற்றைத்தவிர எந்தப் பகுதியும் அவனால் கண்டெடுக்க முடியவில்லை.

ஏன் இந்த வரிகளை மட்டும் விட்டு வைத்தது காட்டெலி? பொல்லாத மறி எலிபோல. ஜே! ஜே! ஜே!

இன்னும் விட்டு வைத்தால் அவனுடைய ஆதர்ச எழுத்தாளர்கள் மறைந்து விடுவார்கள். அவனுக்கு அவர்கள் தான் கொந்தளிப்பான காலங்களில் ஆதரவு தரும் நண்பர்கள். இவர்கள் மரணிப்பதை ஒருகணம் கூட அவனால் பொறுக்க முடியவில்லை.

மீண்டும் இலவச புத்திமதி ஆலோசகர் வைத்திய ஷேத்திரி, மதிநுட்ப சட்டாம்தம்பி சின்னவன் சிவலிங்கம் அண்ணனைச் சந்தித்து அவனுடைய ஆற்றாமையை கொட்டினான். அப்போதுதான் அவனிடமிருந்துமிருந்து மிகக் கூர்மையான புத்திமதி ஒன்று பிறந்தது.

"சுட்ட லாகன் கருவாட்டையும், சுட்ட தேங்காய்கட்டியையும் வைத்துப்பார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு எலிப்பொறியா அண்ணன்"

"இல்ல இல்ல வீடு முழுவதும் எலிப்பொறியை பரப்பி வை நாம் விரிக்கும் வலையில் விழும் இதுதான் என் கடசியோசனை." என்றார்

"சரி அண்ணே! இண்டைக்குத்தான் உருப்படியான ஒரு யோசனை சொல்லியிருக்கியல் சபாஷ்"

அவன் எலிப்பொறி தேடி அலையாத வீடேயில்லை. ஏறாத கடையே இல்லை கறல் பிடித்த எலிப்பொறி இரண்டு மட்டும் நாடாண் கடையில் கிடைத்தன. அதை வாங்கி கறல் கழட்ட ஒரு மாசமும் இரு கிழமையும் கழிந்து போயிற்று அவனுக்கு. அன்றுதான் அவன் லாகன் கருவாட்டையும், தேங்காய்க் கட்டியையும் வைத்து வச்ச கண்வாங்காமல் எலி வருமா? எனப் பார்த்துக் கொண்டிருந்தான். நள்ளிரவு 2.45 தாண்டியும் எந்தச் சுண்டெலியையும் காணவில்லை. விடியவும் எழுந்து பார்த்தான் தேங்காய்த்துண்டையும் கருவாட்டையும் காணவில்லை. ஆய்......

தலையைச்சொறிந்தான் . மீண்டும் லாகன் கருவாட்டையும், தேங்காய்த் துண்டையும் வைத்து பொறியை ஏற்றி வைத்து விட்டு பல்லுத்தீட்டக் கிணற்றடிக்குப் போன சில நாழிகையில் படார் என்ற சத்தத்திற்கு ஓடிப்போனான். சிற்றரசு துடித்துக் கொண்டு அங்குமிங்குமாய் காலை அடித்தான். ஜே! ஜே! அவன் துள்ளிக் குதித்தான்.

கதையை சிதம்பரம் எழுதி முடிந்த போது இரவு 12.21 மணி இருக்கும். பேப்பர் கட்டுக்களை எடுத்துக்கொண்டு நெத்தியடி விமர்சகர் நெத்திமுட்டன் சீனியின் வாசல் வந்தடையும் போது நள்ளிரவு 1.21 மணியத்தாண்டிவிட்டது.

"ஐயா ...... ஐயா" எனக் கூக்குரலிட்டான். கீர்.. கீர்ரென குறட்டை ஒலிதான் வாசல் முழுதும் பரவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின், இருபத்தையாயிரத்து இருபது ஐயாவின் பின் நெத்தி முட்டியர் நேற்று அடித்த மயக்கத்திலிருந்து கதவைத் திறந்தார்.

"என்ன தம்பி இந்த நேரத்தில...."

"இல்ல ஐயா மரணக்கதைகள்" கொண்டு வந்திருக்கிறேன்" என்றான்

கொண்டா கொண்டா" என்றார்.

நெத்தியர் பூதக்கண்ணாடியை மூக்கில் மாட்டினார். ஒவ்வொரு பேப்பராய் வாசித்து முடியும் போது பேப்பரில் புறங்கையால் அடித்து சுப்பர் என்பார். அவரின் முகத்தில் ஒளிவட்டம் குதிரையில் பாய்ந்தது.

"தம்பி நீங்க எங்கேயோ பொயிற்றீங்க சுப்பரோ சுப்பர்க்கதை.... உங்கள நீ ஆரும் விட்டுத்துக் கதைக்கேலா அப்படியொரு கத எப்படித்தம்பி இந்தத் "தீம்" தட்டுப்பட்டது.

"அது ஐயா சும்மா தெரியாதா நான் இவ்வளவு நாளும் எழுதினத்த ஆரும் கணக்கில் எடுக்கலத்தானே. பின்ன 'பி.ர', 'திரா', 'ம.செ', 'இ.ரா'வின் கதைகளை உள்டா பண்ணி எழுதுனதுதான் இந்தக் கத ....... ஆருட்டையும் கதைக்காதிங்க."

"சரி தம்பி"

"இந்தாங்க ஐயா "வைட்டைமன்" ஒண்டு மற்றது ஐயா, மத்த ஆக்களிட் டையும் நம்மளப்பத்திச் சொல்லுங்க என்ன"

சரி சரி, இனி உன்ன உட்டுப்போட்டு எந்தக்கொம்பனும் எந்தக்கதையும் கதைக்கேலாது..... ஆய்......ஆய்.....

-2012-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று படுகளத்துடன் தேடுபவன்

தற்செயலாக 'அஃ'இதழை வாசித்துக் கொண்டிருந்தபோது படுகள இதழ்களை வாசிக்க வேண்டுமென்ற ஆவல் மேலெழுந்தது. அந்த இதழ்களைத் தேடி நான் அலையாத இடமேயில்லை. தேடாத நூலகங்களே இல்லை. விசாரிக்காத எழுத்தாளர்களே யில்லை. இறுதியில் ஆவணக் காப்பாளர் குரும்பசிட்டி குலசிங்கத்திடம் இருப்பதாக அறிந்து அவர் வாசல் அடைந்தேன்.

வீடு முழுவதும் பழைய கடதாசியால் நிரம்பியிருந்தன. எழுத்துக்கள் எங்கும் ஒட்டிக்கொண்டு ஊஞ்சலாடின. அவர் மர வேலைகள் நிறைந்த அறையைத் திறந்து என்னை அழைத்துக்கொண்டு போனார். அறை நகர்ந்து கொண்டே இருந்தது. இரு பகலும் ஒரு இரவும் நடந்திருப்போம். அறையின் முடிவில் சிலர் எந்தச் சலனமுமில்லாது ஏடுகளை ஆராய்ந்துகொண்டேயிருந்தனர். எங்களைக் கண்டு எதுவும் பேசவில்லை. அடிக்கடி கண்ணாடியைச் சரி செய்துகொண்டு படியெடுத்துக்கொண்டேயிருந்தனர்.

"யார் இவர்கள்?"என்று கேட்டேன். "சாம வேதத்தை ஆராய்ச்சி செய்துகொண்டிருக்கும் இசைஞானிகள்"என்றார் குலசிங்கம்.

"இளையராஜாவின் குழுவினரா?"என்றேன் "இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை,இவர்கள் மேதைகள்"என்றார். திரும்பினேன் பின் பக்க மொட்டையிலிருந்து 'சரிகமபதநிச" ஆவியாகிக்கொண்டிருந்தன. சற்றுப் பின் மேதைகள் உறைநிலையாய் போனார்கள்.

குலசிங்கம் புத்தகங்கள் நிறைந்திருக்கும் ராக்கைகளின் அடுக்குகளில் இதழ்களைத் தேடிக்கொண்டிருந்தார். கறையான் கூட்டம் கலைந்துபடை யெடுத்துப்போயின. அவருக்கு அந்த இதழ்களின் மீது அக்கறையிருந் திருக்க வேண்டும். அல்லது அவரும் ஒரு பங்காளராய் இருந்திருக்க வேண்டும். "தம்பி இவ் இதழ் இலக்கியத்தில் மட்டுமல்ல வாழ்க்கை நடைமுறையிலும் மாற்றத்தைக் கொண்டுவந்த இதழ்.

ஆனால் இனத்துவ அரசியல் சார்ந்ததாகச் சிலரின் குற்றச்சாட்டுக்களைப் படுகள ஆசிரியர் எந்தத் தருணத்திலும் ஏற்றுக்கொள்ளவில்லை.இந்தப் போலிக்குற்றச்சாட்டுக்கள் இதழ் மறைவுக்குக் காரணமாய் இருக்க வேண்டும்"என்றார். குலசிங்க அண்ணன் அங்கிருந்துதான் தூசி படிந்த படுகள இதழ்கள் மூன்றினை என் கையில் ஒப்படைத்தார். தாள்கள் பழுப்பேறி நொறு நொறு வெனவிருந்தன.

நான் முதல் இதழை வாசிக்கத் தொடங்கி இரு இரவுகள் கடந்தும் எழுத்துக்கள் ஓடிக்கொண்டிருந்தன.

*****

இது இதழ் வடிவில் வரும் முதல் இதழ்.ஏலவே எட்டுப் பக்கங்களைக் கொண்ட பத்திரிகை வடிவில் நான்கு வெளியீடுகளைக் கொண்டு வந்திருந்தேன். விலை ரூபா 1.00 அப்போ ஒரு பற்றீசின் விலை ரூபா 1.05 சதம் ஆனால் பத்திரிகை வாங்குவதைவிட ஒரு பற்றீசை வாங்கிச் சாப்பிடுவதிலே பெரும்பாலான மாணவர்கள் அக்கறை காட்டினார்கள். எழுத்தாளர்கள் கவிஞர்கள் கூட காசு கொடுத்து வாங்கிப் படிப்பதில் தயக்கம் காட்டினார்கள். இச்சூழலில்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'படுகளம்"சஞ்சிகை வடிவில் முதல் இதழ் வெளி வருகின்றது.

பிணங்களைத் தொடர்ச்சியாய் புசித்துக் கொண்டிருக்க முடியாது. கதவுகள் திறக்காமல் எங்கள் வீடுகள் மட்டும் அழகானது எனக் கருத முடியாது. இலக்கிய ஆக்கங்கள் நாளுக்குநாள் மாறிக் கொண்டி ருக்கின்றன.

நாமும் மாறித்தான் ஆக வேண்டும். செத்த பாம்பை அடித்துக் கொண்டு நாங்கள்தான் வீரர்கள் என்று சொல்லிக்கொண்டிருப்பதில் என்ன பயனிருக்கு? கதவுகளைத் திறந்து கொண்டு வேறு உலகங்களைத் தரிசிக்க வேண்டும். புதிய காற்றுக்களைச் சுவாசியுங்கள். — ஆர்.

முதல் இதழ் ஆசிரியர் தலையங்கமே சாட்டையடியாகவிருந்தது. உள்ளே ஒவ்வொரு பக்கங்களும் இப்படித்தான். நவீனச் சிந்தனைகளைத் தூண்டும் படைப்புகளைக் கொண்டிருந்தன. சிறுகதை, கவிதைகள் வழமையாகவரும் பாணியிலிருந்து வித்தியாசமான கதை சொல்லும் சிந்தனையைக் கிளறி உட்சரடுகளை உடைத்துச் செல்லும் கதை மாந்தராகவே காணப்பட்டன.

கவிதைகளும் எதுகை மோனையிலிருந்து விலத்தி புதிய வடிவமாற்றத் துடன் சொல்லும் செய்தி அனுபவம் என்பன வேறு தளங்களில் பயணித்தன. கட்டுரைகள் கூட ஹாசியப் பாணியிலிருந்து சுயசரிதை லாவகத்திலிருந்து மாறி ஒரு இறுக்கத்தன்மையுடன் புதிய தலை வாசல்களை வெளிகொணர்வனவாகயிருந்தன.

மொத்தத்தில் படுகளம் முதலாவது இதழ் 50 பக்கங்களைக் கொண்ட காத்திரமான இதழாக வெளி வந்திருந்தமை அடுத்த இதழ்களைப் புரட்டுவதற்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது எனக்கு.

'படுகளம்'இரண்டாவது இதழ் 52 பக்கத்தில் ஆவணித் திங்கள் தச வருடம் 1956இல் வெளி வந்திருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது இதழ் ஊடாக மீண்டும்உங்களைச் சந்திப்பதில் துக்கம். ரூபா 1.00 கொடுத்து வாங்க முடியாத நமது இலக்கியச் சூழலில்ரூபா 3.00 சஞ்சிகையை அச்சடித்து வெளியிடுவது எவ்வளவு மடத்தனம் என எனக்குப் புரியாமல் இல்லை. என்னசெய்வேன் தாகம்தான் யாரும் இன்னும் குடித்ததாகத் தெரியவில்லை. சென்ற இதழ் வெளியீட்டிற்கு ரூபா 15,000.00 செலவாகின.

கையில் வந்து சேர்ந்தது ரூபா 5,000.00 கை நட்டம் ரூபா 10,000.00 இம்முறையும் அதே அளவு தொகையே செலவாகியுள்ளது. ஆனால் என் மனைவியின் புலம்பலைத் தாங்க முடியவில்லை.

1. வீடு முழுவதும் குப்பைக் காடுகளை உருவாக்கி வருவதாகவும்.
2. கவிதை, கதை, கட்டுரைகள் நடந்து திரிவதாகவும்.
3. தனது மகளின் சீதனக் காசினை அநியாயமாக அழிப்பதாகவும்.
4. இலக்கிய நண்பர்கள் என்று சொல்லி வரும் சும்மாக்களினால் சீனி பால்மா தொலைபேசி 'வில்'அதிகரிப்பதாகவும்.

தினமும் அர்ச்சனைகள் போட்டுக்கொண்டே இருக்கிறாள். அவள் சொல்வதிலும் கூட நியாயமில்லாமலில்லை. என்ன செய்ய? என்இலக்கிய நண்பர்களே! உங்களுடைய கைகளையும் கண்களையும் திறக்கும் போதுதான் 'படுகளத்தின்"பயணம் படுகுழியிலிருந்து மீளும்.

*****

இவ் இதழின் பல பக்கங்கள் தொலைந்திருந்தாலும் மீ-கதையும் அது பற்றிய விமர்சனமும் கறையானிலிருந்து காப்பாற்றப்பட்டன.

## மீ-கதை

அவனுக்கு அது புதுக்களம் யுத்தத்திற்காகத் தயார் ஆனவனுமல்ல. எந்த யுத்தகளத்திலும் இறங்கியவனுமல்ல. அனுபவம் என்பதுஎவ்வளவு முக்கியமானது. இதுவரையும் அதைச் சீரியஸ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ாக எடுத்துக்கொள்ளவு மில்லை. இன்றுதான் எல்லாம் அவனுக்குப் புரிகிறது.

வெட்கம் தலைக்கேறி மிகுந்த கூச்சத்துடன் படுக்கையின் ஓரத்தில் சுருண்டு கிடந்தான். குறுகுறுத்த மையம் தோற்றுக் களைத்து ஒடுங்கிவிட்டது. முதுகால் வழியும் வியர்வை சர்வாங்கம் எங்கும் வெட்கிப்போனது. மெல்லத் தலையை உயர்த்தி அவளைப் பார்த்தான் பிருட்டம் விம்மி நின்றது. தொடைவரை தெரிந்த ஆடையை இரு கையாலும் நீவி அவனுக்கு முதுகைக் காட்டி கெழிந்தாள். முதுகில் வழியும் அவளது வியர்வையைத் துடைத்தபடியே எதையோ முதுகில் எழுதிக் கொண்டிருந்தான். அவள் நாணத்தை உடல் எங்கும் பரப்பிச் சுகித்தலைக் கிளறினான். அவனுக்குக் குறி எழவில்லை. அவன் அவளைப் புரட்டி முகத்தையேபார்த்துக்கொண்டிருந்தான். அவளின் கண்கள் சிவந்திருந்தன. மென் விரலால் அவளின்மார்பில் அழுத்தி இதழ்களினால் தடவியபடிஎதையோ தனக்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தான்.

ஆற்றாமையின் கொடுமை அவனுக்குப் புரியவில்லை. என்ன செய்வான்? வேள்விக்கு அவன் தயாரில்லை. பலவீனத்தை நினைத்து ஒருகணம் வெட்கித்தான்.

5 நிமிடந்தான் சும்மாயில்லை 'சாமி' தூரத்து ஆற்றுப் படுக்கையிலிருந்து எழுகின்ற செம்படவனின் துயர் நிறைந்த பாடல் அவனை உசுப்பி எழுப்பியது. இரு கைகளாலும் சோம்பல் முறித்து ஆழ்ந்த பெருமூச்சிட்ட படியே தனக்குத்தானே சொல்லிக் கொண்டான் போதும் அவள் எழுந்துவிளக்கைத் தூண்டினாள். அவன் மங்கல் வெளிச்சத்தில் அவளைப் பார்த்தபடி சொன்னான் 'முட்டுவேன் கொல் தாக்குவேன் கொல்'-ஔவையின் துயரத்தின் ஆற்றாமை இன்றுதான் புரிந்தது. உனக்கு என்னால் உச்சத்தைத் தரமுடியவில்லை'...... அவள் கோணி வெட்கித்துத் தலையைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனிந்தாள். அவன் தயக்கத்துடன் சொன்னான் 'இனி ஒருபோதும் இங்கே திரும்பி வரமாட்டேன். இதைச் சொல்லும் போது அவனது அந்தரங்கம் நடுங்குவது போலிருந் தது. நடந்தான் மன்மதலீலை முடிந்து போனபிறகு ஓர் இரவில் அவன் வீடு வந்து சேர்ந்திருந்தான். அவன் நினைப்பெல்லாம் களத்தில் தோற்றுப்போன நாழிகைகளாக ஓடிக்கொண்டிருந்தது.

*****

அன்பின் படுகள ஆசிரியருக்குத் தங்களது படுகள இதழ் காத்திரமான செயற்பாட்டை மேற்கிளப்பினாலும் தங்களது இரண்டாவது இதழின் மீ-கதை சமூகப் பண்பாட்டைச் சிதைக்கும் கதையாகவே பதிவாகியுள்ளது.

இப்படியான 'செக்ஸ்'கதைகளினூடாகச் சிறுகதையில் என்ன மாற்றத்தைக் கொண்டு வரப்போகிறீர்கள்? மனித ஊடாட்டம் என்பதுசமூகப் பிறழ்வற்ற நல்ல விழுமியங்களைக் கொண்டு இயங்க வேண்டியது. மாறாக இது இளந்தலைமுறையினரைப் பிழையாக வழிநடாத்தும் மிகத்துயரமான செயல்.

இவ்வாறான கதைகளைப் பிரசுரித்து இனிமேலும் சமூக அசைவியக்கத்தை நாசப்படுத்தாதீர்கள். இதைவிட நீங்கள் மஞ்சள்பத்திரிகையை நடாத்தலாம்.

குப்தன்,
பேரூர்

*****

'இலக்கியப் பிரதியின் சுதந்திரம் அதை யாரும் எப்படியும் வாசிக்க முடியும்.பிரதியின் மீதான தன் கருத்தை எவ்விதமும் பதிவு செய்யலாம் என்பதுதான். எழுதி முடிக்கப்பட்ட ஒரு பிரதி படைப்பாளியை விட வாசகனுக்கே அதிக சொந்தமாக நேர்கிறது. நவீன இலக்கிய வாதிகள் மட்டுமே நவீன இலக்கியத்தை வாசிக்க வேண்டும் என்பதோ தரமான இலக்கியவாதிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதியின் மீது விமர்சனம்வைக்க இயலும் என்பதோ இலக்கிய ஆதிக்கங்களே.தங்களது மீ-கதையும் இவ்வாறு எதிர்கொள்ளப் படலாம். இருந்தும் மீ-கதை தரமானகதை. உடல் தாண்டுகை எல்லா ஜீவராசிகளுக்கும் தேவையானது. அதனுடைய கஷ்டங்கள் வேதனைகள் வெளிச்சத்திற்கு வருவதில் தவறில்லை. யதார்த்தம் என்பது மீகதையிலே வெளிவந்திருக்கிறது. கதையை வாசிக்கும் போதுதான் எனக்குள்ளே காந்தப் புலன்கள்உருவாகின. அற்புதம்.

சஞ்சீவி,
சாத்தான்குளம்

*****

குப்தன் போன்றவர்கள் இன்னும் காத்திரமான இலக்கிய உலகில் பிரவேசிக்காததின் விளைவுதான் இந்த எதிர்க்குரல். உலக இலக்கியத்தில் பேசப்பட்ட பிரதிகளின் கோடுகளெல்லாம் 'செக்ஸ்' இயக்கமாகவே காணப்பட்டிருக்கின்றன. இவை பேசும் படைப்புக்களாகவும் வீரியமான கதைகளாகவும் கணிக்கப் பட்டிருக்கின்றன. தமிழ்ச்சூழல் வேறு என்றாலும் எங்களுடைய படைப்புகளில் பொதுவாகப் பக்தி இலக்கியங்களில் 'செக்ஸ்' ஊடறுப்புக்கள் காணப்படவில்லையா? இலக்கியப் புரிதல் வரும்போது இவையெல்லாம் புஸ்வாணமாகிவிடும். நண்பரே! மஞ்சள் பத்திரிகை நடாத்த வேண்டிய அவசியம் இன்னும் ஏற்படவில்லை. ஏற்பட்டால் தங்களுக்குத் தகவல் அனுப்புகிறேன்.

- ஆர்

எனக்கு இந்த இதழ்களின் தொடர்ச்சியைத் தேட வேண்டிய அவசியம் மேலும் வலுத்தது. குலசிங்கம் தந்த மூன்று இதழ்களிலும் படுகளஇதழ் முகவரிகள் வேறுவேறாக இருந்தன.

முதல் இதழ் 1955 கார்த்திகை 18ந் திகதி மட்டூர் பித்தன் அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. இரண்டாவது இதழ் 1956 வைகாசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம்மட்டுநகர் கண்மணி அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. மூன்றாவது இதழ் **1956** ஆவணி **30**ஆம் திகதி மட்டக்களப்பு பாடுமீன் அச்சகத்தில்அச்சிடப்பட்டுள்ளது. அதன் முகவரி கீழ்வை வீதி மட்டக்களப்பு எனப் பொறிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இரு இதழிலும் அச்சகத்தின் முகவரி இல்லாத காரணத்தினால் கீழ்வை வீதி மட்டக்களப்பில் உள்ள பாடுமீன் அச்சகத்தைத் தேடிப் பயணித்தேன். பின்குறிப்பு: பாடுமீன் வீதியைப் பலரிடமும் கேட்டும் யாரும் சொல்வாரில்லை. இரண்டு கிழமையும் இரு நாட்களும் நாயாய் அலைந்து பலன் கிட்டாது போக,மாநகர ஆணையாளர் அலுவலகத்தில் பொழுது வணங்கியைச் சந்தித்து "பாடுமீன் வீதி மட்டக்களப்பு நகரில் எங்கே இருக்கிறது"?. என வினாவினேன்".

அவரும் அப்படி ஒன்றும் இங்கு இல்லையென அடித்துக்கூறினார். நான் படுகள இதழில் உள்ள முகவரியை அவரிடம் காண்பித்தபோது, தனது சோடாமூடிக் கண்ணாடியைச் சரிசெய்து மீண்டும் ஒரு தடவை படுகளத்தைக் கூர்ந்து கவனித்து "இது **55, 56** ஆண்டுகளில் அச்சிடப் பட்டதுதானே. **1972** இதற்குப் பிறகு நம் நாட்டில் எல்லாமே மாற்ற மாய்ப் போயிற்று என்று சொல்லித் தனது மேசை பெல்லை அடித்து பியோனை அழைத்து,ரெக்கோட் கீப்பரை வரவழைத்தார்.அவனுக்கும் அந்த வீதி பிடிபடவில்லை. தலையைச் சொறிந்தான். பின் தனது புழுதிப் படிந்த அறைகளில்,ராக்கைகளைத் துழாவி ஒரு பெரிய புத்தகத்தைக் கையில் எடுத்தான். விறுவிறுவென்று ஆணையாளரின் அறைக்கு வந்தான்.

"சேர் இந்தப் புத்தகத்திலேதான் பழைய வீதிகளுக்குப் பெயர் சூட்டும் ஆவணம் உள்ளது". எனக்கூறி ஒவ்வொரு இதழாகத் தடாவி **1526** பெயர்களையும் முணுமுணுத்தான். பாடுமீன் வீதி அவன் நாவில் தவழவில்லை. சிங்கிங்பிஸ் ரோட், லேடிமணிங்ரைவ், கோல்சிமித் ரோட் போன்ற ஆங்கிலப் பெயர்கள் தமிழ்ப் பெயர்களுக்குப் பதிலாக இப்பெயர்கள் மாற்றமாகியி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கலாம். அவனின் கணிப்பின் படி பாடுமீன் வீதிதான் சிங்கிங்பிஸ் ரோட்டாக மாற்றலாகியிருக்க வேண்டும் என முடிவுக்கு வந்தேன்.

பின்னர் நான் சிங்கிங்பிஸ் ரோட்டில் பாடுமீன் அச்சகத்தைத் தேடித் தேடுதல் வேட்டையைத் தொடங்கினேன். யாருக்கும் அப்படியொரு அச்சகம் இருந்ததாகவோ அதுபற்றி ஒரு துரும்பைக் கூட அறிந்திருக்கவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதிஷ்டவசமாக இழவு வீட்டில்சந்தித்த சந்திரலிங்கத்தின் தகவலின்படி புரூப்ரீடர் புண்ணியமூர்த்தியைச் சந்தித்தேன். அவருக்கு 88 வயதைத் தாண்டி விட்டது. நினைவுதப்பிப் போகின்ற நிலை.

இருந்தும் அவரிடம் ஓரளவு உரையாடக்கூடிய சூழல் இருந்தது. நான் அவரிடம் படுகள இதழ் தொடர்பாகக் கதையை விட்டேன். அவருக்கு முதலில் அது பிடிபடவில்லை. இரண்டு, மூன்று தடவை அது பற்றியே திரும்பத் திரும்பக் கதைத்தேன். ஒரு கட்டத்தில் மயக்கம் தெளிந்த ஓணானைப் போல் உன்னி எழுந்து "ஓம். ஓம்... படுகள இதழ்... நான் தான் அதற்கு புரூப்ரீடர், 30இற்கு மேற்பட்ட இதழ்கள் வெளிவந்தி ருக்கின்றன.

என்னிடம் ஒரு இதழ்கூட இப்ப இல்ல"என்றார். பின் 10 நாளைக்கு முன்னர் கூட கம்பஸில் படிக்கிற ரெண்டு பொடியனுகள் 4, 5 இதழ்களைக் காட்டி மற்ற இதழ்கள் எங்க எடுக்கலாம் என என்னிடம் வந்தனர்.

எனக்குத் தெரிந்தவரை படுகளம் 30 இதழ்களுக்கும் 30 ஆசிரியர்கள் பணியாற்றிருக்கிறார்கள். முதல் ஆசிரியர் தீக்குச்சி திருச்செல்வம்அதுமட்டுந்தான் நினைப்பாகயிருக்கு "இதுபற்றி வேற ஆரிட்டயும் விசாரிக்கலாமா?"எனக் கேட்டேன்.

"ஆரு தம்பி இப்ப இருக்கா? எல்லாரும் போயிற்றாங்க நானும் போறத் துக்குத் தயாராகத்தான் இருக்கன்"என்றார்.

எனக்கு எல்லாம் இடிந்து போனது.

நான் இப்போ படுகள இதழ் 4, 5-த் தேடிப் பயணிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பி.சூர்ப்பனகையின் இறுதி அத்தியாயம்

எம்.பி.சூர்ப்பனகை பற்றி ஏற்கனவே இரண்டு,மூன்று இடங்களில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் "மல்லுக்கிழுக்கின்ற சுணங்கன்" கவிதையூடாகத்தான் பலரிடம் அவள் பற்றி உண்மை தெரியலாயின. அது பெரிய கவிதையென்று சொல்லமாட்டேன். அன்றைய மனநிலையில் பிறந்த யுத்தம்தான் அது இப்படித் தொடங்கியது.

*மீண்டும் யுத்தம் தொடங்கியதாகச்*
*சொறிநாயொன்று கத்தியது.*
*.........................................*
*.........................................*
*புணரமுடியாது*
*கிழட்டுச்சிங்கம்*
*நாக்கைத் தொங்கப்போட்டு ஓட.....*
*சொறிநாய்*
*கதறக் கதற கடித்துத் துரத்துகிறது.*
*மீண்டும் யுத்தம் நடக்கும்*
*அதில் நான் வெல்வேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40 வரிகளைக் கொண்ட இக்கவிதையை 10.03.2003 இரவு 11.59 மணிக்கு எழுதி முடித்தபோது ஆள்கொல்லிப்பறவை சத்தம் எழுப்பிப் போனது. அப்போதே எனக்குத் தெரியும் இந்தக் கவிதை குடிகிளப்பும் என்று. இருந்தும் நான் கவிதையை 1½ மாதம் கழித்து ஒரு நடு மதியம் தபாலில் இட்டு திரும்பிவரும்போது கால் தடக்கி விழுந்ததில் இடது கால் மகிழித்தது. பூசாரி செல்லப்பர் உழுக்குப் பார்த்து நாலுதரம் மந்திரம் ஓதியபோதுதான் எனக்கு காலை நிலத்தில் வைக்கக் கூடியதாயிருந்தது. இதெல்லாம் கோப்பெருந்தேவி கண்ட கனவுக்கு ஒப்பானதாகவே என் மனைவி எச்சரித்தாள். இதை நான் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை.

யூரியாப் பெண்கள் எனக்கெதிராகப் போர்க்கொடி தூக்கியபோது நான் மிகத் தூக்கத்தில் இருந்தேன். அச்சாவின் தொலைபேசிதான் என்னைத் தட்டி எழுப்பியது. நான் உணர்ச்சிவசப்படவில்லை. பெண்களுக்கு எதிரானவன் நானில்லை. பெண்ணியம் பற்றிய கருத்து முரண்பாடு எனக்கு இருந்தாலும் பெண்களை மதிக்காமலில்லை. என்ன நடந்ததென்ற உண்மை தெரியாமல் இவளுகள் போய்... தேவடியாள் மக்கள்....

"ஹாலோ சிந்து... உண்மை தெரியாமல் எனக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கிறீங்க முதலில் என்ன நடந்ததெண்டு விசாரியுங்க புறகு ஆர்ப்பாட்டத்தை தொடங்குங்க..."

"நான் உன்னோட கதைக்கத் தயாரில்லை......" என்றாள்

"அப்படிக் கதைகேலாது நான் மட்டும்தான் பொம்புளையள மோசப் படுத்தி, கேவலப்படுத்தி கவிதயெழுதல்ல. அது எண்ட தொழிலுமில்ல. சங்கம் தொடக்கம் இப்பவரை எழுதியிருக்கு. நான் எழுதியது பொய்யுமில்ல". என்றேன்

"வைடா 'போனை' உன்னோட கதைக்க நான் தயாரில்ல" என 'டப்' பென்று 'போனைத் துண்டித்தாள். எனக்கு முகத்தில் அறைஞ்சாப்போல இருந்திச்சு. என்ன செய்யப் போறாங்க? எண்ட மசிரத்தான் புடுங்கிக்கிடக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களரி-1

அண்ணாவியார் மத்தாளத்தைத் தட்டி குரலை உயர்த்தி வரவுத் தாளத்தைப் பாடினார்

சூர்ப்பனகை வந்தாளே
சபையை நோக்கி,சூர்ப்பனகை வந்தாளே...
ராமனையும்,லட்சுமணனையும்
படாதுபாடு படுத்திய
சூர்ப்பனகை வந்தாளே...

அவள் ஓலம் போடத் தொடங்கினாள். என்ன கூத்து நடத்துறியள். பொம்புளயல் எண்டா கிள்ளுக் கீரைகளா? பார்வையாளர் மத்தியிலி ருந்து களரிக்கு ஏறிவந்தாள். இவ்வளவு காலமும் இதிகாச புராணங்களில் இருக்கிற போக்கணங் கெட்ட பாடல் கலெல்லாத்தையும் உட்டுப் போட்டு காலத்துக்கு ஏத்தாப்போல பாடி ஆடுங்க. இது ராமன் மட்டும்தான் நல்லவன் ராவணன் கெட்டவன். துரியோதனன் கூடாதவர்கள். தருமர், அருச்சுனன், தங்கமானவர்கள். பாண்டவர்கள் மனிதர்கள் கௌரவர்கள் அநியாயக்காரர்கள். சூர்ப்பனகை கொடியவள். காமக்கிழத்தி, பறையன்,வண்ணான்,குடிகாரர்கள், கள்ளர்கள், இழியவன், எழியவன், எண்டு பாடி ஆடி...

காலப்பொருத்தம் தெரியாம இன்னமும் பழயகுருடி கதவத்திறடி எண்டு இருக்காம மாற்றத்தைக் கொண்டு வாங்க இதில் சூர்ப்பனகை கெட்டவள் எண்டு ஆட நான் விடமாட்டன். நானும் ஒரு பொம்புள போதாக் குறைக்கு சூர்ப்பனகை எண்டு பெயர்கூட சூடியிருக்கிறவள். முடியாது.

அண்ணாவியார் அவளின் ஞாயத்தை ஏற்றுக் கொண்டார். கூத்தாடிகளும் எதிர்ப்புக் காட்டவில்லை. லட்சுமணனுக்கு மாத்திரம் உடன்பாடில்லை.அவன் சலங்கையைக் கழட்டி எறிந்தான். இந்தப் போக்கணம் கெட்டவளின் கதயக்கேட்டு காலம்காலமாக ஆடி வந்திருந்த...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கேளும் தம்பிஅவள் சொல்லுறதில் நியாயம் இருக்கு” ராமர், லட்சுமணனிடம் நிஜத்தைச் சொன்னான். லட்சுமணனுக்கு திருப்தி இருக்கவில்லை களரியை விட்டு வேப்பமரத்தடிக்கு நடந்தான். சபையோரும் அவளின் நியாயத்தை ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தனர். அண்ணாவியாரும், கொப்பி பார்ப்பவரும் பக்கங்களைப் புரட்டி வெட்டுக்குத்துக்களை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். எனக்கும் சூர்ப்பனகைக்கும் ஐந்து வருடங்களுக்கு முன்னர் நடந்த கூடலில்தான் பிணக்கு ஏற்பட்டது. அவள் என்னைச் சந்தித்த முதல்நாளே முறுகினாள்.

ஏன் என்று இன்று கூடப் புரியவில்லை. எண்ட பெயர் ஒரு காரணமாக அல்லது எனது மனுசியின் பெயரும் ஒரு காரணமா எனத் தெரியவில்லை. இல்ல கூடலுக்கு தலைமை தாங்கிப் போகவில்லையென்ற குறையா?

ராஜ்பாட் லட்சுமணன் என்ற இயற்பெயர் கொண்ட என்னை எல்லோரும் லச்சு என்றுதான் கூப்பிடுவார்கள். அதுபோல சீதாதேவி என்ற பெயர்கொண்ட எனது மனைவியை சீதா என்றுதான் அக்கம் பக்கமெல்லாம் கூப்பிடுவாங்க. இதற்கு நாங்க என்ன செய்யமுடியும்?

அவளுக்கும் ராமனுக்கும் இடையில் ஏற்பட்ட “கலாவுலா” க்கும் எனக்கும் என்ன சம்பந்தம்.

## களரி-2

லட்சுமணன் அவளை இழுத்து வந்தான் அவளின் முகத்தில் இரத்தம் வடிந்தது. மூக்கறுக்கப்பட்டுக் கொட்டும் குருதி ராமனை உலுக்கியது.

என்னயிது? என்ன செயல்? ஏன் இவ்வாறு கொடுமையாக நடந்து கொண்டாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ராமண்ணா இவள் என்னை...

"நிறுத்தும் பேச்சை உன் அண்ணியும் ஒரு பெண்".

"இவளுமா....."

"சீ..மானுடன் பெண்வேசம் போட்டாலும் அதையும் மதித்தாக வேண்டும். பெண் உடல் தேவைக்கு மாத்திரமா"?

"அண்ணா நான் அப்படியான எண்ணம் கொண்டவனல்ல. சூர்ப்பனகை என்னுடன் இச்சை கொள்ளவே பேயாய் அலைந்தாள் அதுதான் அறுத்தேன். உங்களையும் அவள்"..

"அவள் ஆசைகொண்டதில் என்னதப்பிருக்கு. மனுசனுக்கு எந்த வயதிலும் ஆசை வந்தே மறையும் அதில என்ன பிழயிருக்கு"

"ஓ... ராமா"

"தம்பி லட்சுமணாய் கேளும் சீதாவை எப்படி மதிக்கிறாயோ அதுபோல சூர்ப்பனகையையும் மதித்தாக வேண்டும். அவளிடம் மண்டியிட்டு மன்னிப்புக்கேளும்" என்றார்.

"முடியாது"?

அவன் கூத்துக் களரியில் அம்பையும், வில்லையும் வீசியெறிந்து அண்ணாவியாரை நோக்கிக் கேள்விகளைத் தொடுக்கத் தொடங்கினான்.

"வரலாறு இன்றி ஏதுமில்லை. வரலாற்றுக்கப்பாலும் எதுவும் இல்லை. இந்த வரலாற்று ஓட்டத்திலே ஓடிவந்துள்ளேன். நீ சொல்லுறாப் போல என்னால உடனடியாக மாறமுடியா. ஒரு பொம்புளைக்காக எத்தனையச் சரிப்படுத்துற...."

"பிற்போக்குத்தனமாக கதயாத லட்சுமணா" சூர்ப்பனகை துள்ளிக் குதித்தாள். மீண்டும் தொடர்ந்தாள். "வரலாறு எப்பவும் மக்களுக்காக கட்டப்பட்டதல்ல. அது மன்னனுக்காகவே புனையப்பட்டது. அதிகாரத்திலுள்ளவன் எதையும் செய்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் எத்தென வீதம் உண்மை, பொய் எண்டு உனக்குத் தெரியுமா? அப்படியொரு வரலாறுதான் இதுவும். ஆண்திமிரில் தான் வரலாற்றை புனைந் துள்ளானுகள் இதக்கூடத் தெரியாத நீ இதில் நடிக்க வந்தள்ளது எவ்வளவு முட்டாள்தனம்".

"தாம் தையத்தோம்

ததிகிணத்தோம்"

அவள் எட்டு ஒன்றைப்போட்டு துள்ளிக் குதித்தாள். அவளின் நடவடிக்கை அதிகரித்தே போனது. என்னை இழிவுபடுத்தி போஸ்டர்களை ஒட்டத்தொடங்கினாள். அவளின் உடலில் ஆசை கொண்டு அவளை வல்லுச் செய்யமுனைந்ததாகவும் தசதரனோடு அவளைப் புனைந்து கதைகட்டி விட்டதாகவும் என்மீது ஆயிரம் குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருந்தாள்.

தசரதர்,பரதன், உட்பட பத்துப்பிள்ளைகளின் தந்தை, பரதன் சிறந்த மாணாக்கனாகவும் நற்பழக்கமுடையவனாகவும், வளர்வதற்கு நானொரு காரணம். என்று தசரதன்என்னுடன் முப்பது வருடங்களாக நல்லுறவு உள்ள ஒரு நல்லமனுசன் இந்த மாயக்காரியுடன் எப்படி 'நடப்பு' என்று தெரியல்ல?

கூடல் முடிந்து எல்லோரையும் அழைத்த போதுதான் அவள் என்மீது முப்பாச்சலைத் நடாத்தினாள். நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை. சுதாகரித்து என்னுடைய தாக்குதலை தொடங்கும் முன்பே அவளுடைய சொல்லம்புகள் என்னைத் துளைத்து நிர்க்கதியாக்கி விட்டது. நானும் பின்னர் விடவில்லை. என்னிடமிருந்த வலுவினை எல்லாம் அவளிடம்காட்டாமலில்லை.

ஆனால் அவள் பக்கம் தான் எல்லாப்பேய்களும் கொலுவில் நின்றன. இருந்தும் நியாயம் தோற்கவில்லை. அவள் அழுது கொண்டே வீடு திரும்பினாள்.

நான் இன்று கூட மீட்டிப்பார்க்கின்றேன். "ஏன் அவள் அப்படி நடந்து கொண்டாள்? பிறர்சொல்வது போல் தசரதனுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளுக்கும் ஒரே "ரூம்" கொடுக்காததன் கோபமா? அல்லது மேடையில் தோன்றி படகமணி காட்ட நான் இடம் கொடுக்காததனாலா, எதனால்?

## களரி-3

சபையோர் லட்சுமணனை மாற்றி வேறு ஒருவரை நியமிக்குமாறு கோசமிட்டனர். லட்சுமணன் சற்றும் எதிர்பார்க்காதது.

"சபையோரே! உங்கட கோரிக்கைக்கு நான் தலைவணங்குகின்றேன். என்னால் வரலாற்றுக்கு எதிராகவும் பழமைக்கு முரணாகவும் ஆட முடியவில்ல விடைபெறுகிறேன்". அண்ணாவியார் அவனைத் தடுத்துப்பார்த்தார். அவன் கேட்கவில்லை அவரை உதறித்தள்ளி விட்டு நடையைக்கட்டினான். ராமனும் அங்கதனும் துயர்தோய்ந்த முகத்துடன் களரியில் நின்றனர். அண்ணாவியார் பேசத் தொடங்கினார். இந்தக்கூத்தின் உழைப்பு ஒருநாளில் நடைபெற்றதல்ல ஆறுமாதம் ராப்பகலெண்டு பாராது பழகித்தான் இந்தக் கூத்த அரங்கேற்றினேன். திடீரெண்டு ஒரு பாத்திரத்த இல்லாமச் செய்தால் அதை உருவாக்க சில மாதம் வேணும். நாங்க இனி பழகித்தான் ராமர் நாடகத்த அரங்கேற்ற வேணும். அண்ணாவி கதச்சி முடிஞ்சதும். துயரம் களரி முழுவதும் அப்பி எங்கும் பரவியது.

## களரி-4

என் கவிதை வந்து இரு நாட்களில் இப்படி நிகழும் என கனவு கூட நான் கண்டதில்லை. சூர்ப்பனகை கதாயுதத்தால் என் தலையைப் பிளந்தாள். அதிலிருந்து புறப்பட்ட லெட்சாதி லெட்சம் கவிதைகள் எல்லாவற்றையும் சாப்பிட்டு ஏப்பமிட்ட போது அன்றைய பொழுது விடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஆஸ்பத்திரியில் இருந்து டிக்கட் வெட்டிவர இரு கிழமை கடந்து போய்விட்டது. இப்போது எனக்கும் அவளுக்குமிடையே எந்தச் சலசலப்பும் இல்லாவிட்டாலும். அவள் உயர் அதிகாரியாக நியமிக்கப் பட்ட மறுநாளே நான் பழிவாங்கும் படலத்துக்கு ஆளானேன். வேலையில் அமர்ந்திருக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவளின் நெருக்குவாரம் இருந்து கொண்டேயிருந்தது. அது எனது மனநிலையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல்லைக்கடித்து நாட்களை ஓட்டினேன். வேறு என்ன செய்ய முடியும். பல மாதங்களாக அவள் முகத்தை பார்ப்பதிலிருந்து தவிர்த்து வந்தேன்.

அவள் பற்றிய வதந்திகள் 'கந்தோர்' முழுவதும் நிறையத் தொடங்கின இப்போது எனக்கும் அந்த வதந்திகளுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்பதை எப்படியோ அறிந்து கொண்டாள்.

ஒரு புதன்கிழமை என்னை "வெல்லை" அழுத்திஅவள் அழைத்தபோது சற்று நடுக்கம் எளாமலில்லை. ஏனென்றால் ஏற்கனவே எனது 'பேசனல்பைல்' அவளுடைய நற்சான்றிதழ்களால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது.

"என்னமடம்"

"எப்படி வேலைகள் போகுது"

"போகுது மடம்"

"இவ்வளவு காலமும் உன்னைப் பிழையாக நினைத்துவிட்டன். அவற்றையெல்லாம் மறந்துவிடு என்றாள்"

எப்படி திடீரென மாறிப்போனாள். இதுவும் எனக்கான ஆப்பா?

## களரி-5

அதன்பின் சூர்ப்பனகையை கனவிலும் காணவில்லை. அவளுடைய நினைவுகள் என்னை உசுப்பியது. புலிபோன்ற அவள் பார்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் வெட்டுக்களாய் அப்பப்ப வந்து மறைந்தன. நான் அப்ப தசரதண்ட நிலமை பற்றி அவனிட்ட கேட்டபோது. அவர் நடக்க ஏலாம வீட்டுக் குள்ள அடபட்டுக்கிடப்பதாக கோவிந்தன் கதச்சது நெஞ்சில் தைத்தது.

**எம்.பி.சூர்ப்பனகையின் இறுதி நாட்கள் எப்பிடி இருந்தது தெரியுமா?**

அது பற்றி உங்களிடம் சொல்லித்தான் ஆகவேண்டும். அந்தக் கதையை நான் கேட்டபோது எனக்குத் திக்கென்று இருந்தது. சொல்லுகிறேன் கேளுங்கள்.

சூர்ப்பனகை குலுங்கி குலுங்கி அழுதாளாம். ஏதேதோ பேசினாலும், மூளை குழம்பியவள் போலப் பசப்பினாளாம். கண்ணை இறுக்கி மூடி வெட்கம் கொண்டவளாய் நான் லட்சுமணனை மனதார விரும்பினேன். நான் இதுவரை எவனையும் விரும்பிப்புணரவில்லை. தசரதன் என்னோடு ஒட்டித்திரிந்தானே தவிர அவனுக்கு என் முந்தானையை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விரிக்கவில்லை. ஊர்தான் வாய்க்கு வந்தவாறு கதைத்து. நான் யாருடனும் கெட்டுப் போகல்ல மனதார விரும்பிய ராமன் அவன்தான். ஆனா அவன் இதுக்கு இணங்கவில்ல. எவ்வளவு தூரம் நாசுக்காக கதச்சிருக்கன் செக்சுவலாக பேசியிருக்கன் அவன் ஒரு முண்டம் ஏன் அப்படி நடந்தானோ தெரியல்ல. அவன் என்னப்பத்தி எழுதிய கவிதையாலோ,கூடத்தில் நடந்த சம்பவத்தினாலோ நான் அவன வெறுக்கல்ல. என்னோடு புணர்வதற்குக் கூட அவன் இஸ்டப் படமாட்டான் எண்ட காரணத்தால தான் நான் அவன வெறுக்கத் தொடங்கினனான்.

இதக் கேட்க உங்களுக்கு எப்படியிருக்கும்.? அப்படித்தான் எனக்கு மிருந்தது. புணர்வதற்காக அவள் இவ்வளவு நாட்களும் என்ன நாய் படாத பாடாக படுத்தியிருக்கிறாள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவேளை எனக்கு விளங்குற மாதிரிச் சொல்லியிருந்தா நான் மாட்டன் எண்டா சொல்லியிருப்பன் கிழவிதான் ஆனால் உடலால் குமரியாகத் தானிருந்தாள். எனக்கறியாமலே அவள்மீது ஒரு பரிவு ஏற்பட்டது.

ஏனெண்டா எண்ட மனுசியத்தவிர வேறெந்தப் பொம்புளையையும் ஏறெடுத்தும் பாக்காததாலா? அல்லது...

நான் இப்போ புணுகு பூசத் தொடங்கி விட்டேன். உடுப்புக்களிலும் மாற்றத்தைக் கொண்டுவந்திருக்கிறன். அவளை விசாரித்த மட்டில் எங்கிருக்கிறாள் எனத் தெரியவில்லை. சரி என்ன செய்யிற என தசரதனிடம் நேரடியாகப்போய் நிலமையை விலாவாரியாக எடுத்துக்கூறி சூர்ப்பனகையை சந்தித்தே ஆகவேண்டும். எங்கு இருக்கிறாள்?

என்பதை ஒளிவுமறைவின்றி சொல்லுமாறு தயவாய் வேண்டினேன். என்னுடைய பரிதாப நிலை அவருக்கு புரிந்திருக்க வேண்டும். நீண்ட நேர யோசனையின்பின் பொன்வாய் மலர்ந்தார்.

"தம்பி சூர்ப்பனகை கெட்டசாதி. கடைசியாக தாந்தா மலைச்சாமி யாரிட்டத்தான் சரணாகதி அடைந்தவள். அங்க போய் விசாரித்தா யெண்டா அவளிருக்கிற இடம் தெரிய வரும்" என்றார். சரி ஐயா தப்பினேன் பிழைச்சேன் என்ற மாதிரி அவரிடமிருந்து விடைபெற்ற போது மதியம் ஒன்றே முக்காலுக்கு மேல் தாண்டி விட்டது. இதற்குப்பிறகு தாந்தாமலைக்குப் போவது சாத்தியமற்றது. அத்தோடு அவருக்கும் எனக்கும் அவ்வளவு நல்லமுமில்லை. நானும் பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் வேலை செய்கின்ற போது S.S.O,R.D.O உட்பட கொஞ்சப்பேர் அவரைப் பார்க்க போயிருந்தபோது அவரிட நடவடிக்கை எனக்கு பிடிக்கல்ல. நான் எப்போதும் எந்தச்சாமிமாரையும் நம்பியது கிடையாது. மனுசன் படைப்பை உருவாக்கியவனை நோக்கிச் செல்லவில்லை என்ற கொள்கையை உடையவன் நான் ஆனால் சிலர் என்னை நாஸ்திகவாதி யென்று கூடக்கருதுவதுண்டு. பயித்தியக் காரனுகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாந்தாமலை முத்தையாவிடம் அன்று சில கேள்விகள் கேட்க வேண்டிய தாயிற்று. அது விவாதமாகிவிட்டது. நான் பின் அந்த இடத்தில் நிற்க விரும்பவில்லை.சக நண்பர்களை விட்டுவிட்டு தாந்தாமலை முருகனைப் பார்க்கப்போனேன். அதன்பின் நான் முத்தையாவை பார்க்க போனது கிடையாது.இப்படி இருக்கும் போது எப்படி சூர்ப்பனகையைத் தேடிப்போவது? எனக்குள் அறுந்து விழுந்த ஆயிரம் கேள்விகளுக்கு விடை காண முடியவில்லை. என்ன செய்வது தாந்தாமலை முத்தையாவை சென்றடைய ஒரு பொழுது மறைந்திருந்தது.அவருடன் நீண்டநேரம் கதையாட விரும்பவில்லை.சூர்ப்பனகை பற்றிக் கேட்டேன். அவர் திடுக்கிட்டு எழுந்து நீயாரு தம்பி, மாதாக்கு என்னமுற" என்று விசாரிப்பைத் தொடர்ந்தார். நான் பதில்களை முறையாக வழங்கினேன். மாதா இந்தியா சென்றுள்ளார்.

அப்படியா என்று எப்போ திருப்புவா" என்று கேட்டேன். "சொல்ல முடியாது மாதாபோய் நாலு வருசம் கழிஞ்சிபோச்சி"

"அப்படியா" எனக்கு வியப்பாகவிருந்தது. அங்க எங்க சந்திக்கலாம் என்று ஒரு வினாவை எழுப்பினேன்.

"மாதா இப்போ விசிறிச்சாமியாரின் ஆச்சிரமத்தில்தானிருக்கிறா. அங்கு போனா காணலாம்" என்றார்.

முத்தையாவின் சந்திப்பின் பின்னர் சூர்ப்பனகையைத்தேடும் ஆர்வம் மென்மேலும் அதிகரித்தே சென்றது. இந்தியா போற எண்டா சும்மாவா. கள்ளக்களவாக போற எண்டா ஐயாயிரம் வேண்டும். அதுவும் மணல்திட்டுகளில் இறக்கிவிட்டு தப்பிச்சிடுவானுகள். விமானம் என்றா எந்தப்பிரச்சினையுமில்ல. 15 ஆயிரம் ரூபா வேண்டும். என்ன செய்யிற இருந்த வளவை விற்றுப்போட்டு விசிறிச்சாமியின் ஆச்சிரமத்தை சென்றடைய நடுச்சாமம் 1.01 மணியாயிற்று.வீதியோரம் சனக்கூட்டம் விசிறிச்சாமியின் சமாதியின்முன் பெண்கள், ஆண்களுமாய் கதறி அழுது புலம்பும் காட்சி எனக்கு ஏதோ புல்லரித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அங்கிருந்து ஒருவரிடம் மாதாவைப்பார்க்கவேண்டும். எப்படிச் சந்திப்பதென்று கேட்டேன். அவன் பெரியசுவாமி (விசிறிச்சாமி)யின் பிரதம சீடனைக் காண்பித்தான். நான் இலங்கையைச் சேர்ந்தவன் மாதாவைப்பார்க்கவேண்டும் என்றேன். அதற்கு அவன் மாதா திரிசடையா என்று கேட்டான் எனக்கு குழப்பமாயிற்று.

நான் சூர்ப்பனகை என்றேன். அப்படி ஒருத்தர் இங்கில்லையே இலங்கையைச் சேர்ந்த மாதா திரிசடைதான் இங்கு இருந்தார் அவவும்...எனதியான மட்டத்தில் மாட்டி இருந்த புகைப்படத்தைக் காட்டினார். சூர்ப்பனகைதான் காவியுடையில் இருந்தாள். அவள் இப்போ ஆசை,பாசம்,பற்று.. முற்றும் துறந்த முனிச்சியா? அவன் தனது கற்பனையை எல்லாவற்றையும் தவிடு பொடியாக்கிக் கேட்டான் "மாதா திரிசடையா" "ஓம்..ஓம்" என்றேன். "அவ இங்க இல்ல", என்று சொல்லி மண்டபத்தினுள் வைக்கப்பட்டிருந்த புத்தக ராக்கையில் இருந்து "மாதா திரிசடையின் மகத்துவம் என்ற புத்தகத்தை என்னிடம் நீட்டினான். ஒவ்வொரு ஒற்றைகளாகத் தட்டத் தொடங்கினேன்.

"கண்ணகி பச்சைத்தேரில் விண்ணுலகத்திலிருந்து பூவுலகத்திற்கு வரும்போது நிலம் அதிர்ந்தது. வானவர்கள் மலர்களை மாறி மாறி சொரிந்தனர். வேங்கை மரத்தின் அடியில் நின்ற மாதா திரிசடை தேவர்கள் புடைசூழ கண்ணகி பச்சைத்தேரில் ஏற்றி விண்ணுலகத்திற்கு அழைத்துப்போனாள்"...

501 பக்கம் கொண்ட புத்தகத்தை வாசித்து முடித்த போது எனக்கு ஏது செய்வதென்று தெரியவில்லை திக்பிரமையானேன். சூர்ப்பனகை என எனக்குள் புலம்பினேன். என்மனம் கனத்தது பெரும் இருள் என்னுள் மூண்டது. நான் அந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டேன். (சூர்ப்பனகை இனிக்கனவிலும் வராள்)

*-2010-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காடேறிகளின் மாநாடு

காலையில் பல் விளக்கிக் கொண்டிருக்கும் போதுதான் தூள் திண்ட கடதாசியும், எழுதுகோலனும் என்னைச் சந்திக்க வந்திருந்தார்கள். எனக்கு எந்தவித ஆச்சரியமும் எழவில்லை. என்னைப் பார்க்க வரும் பல ஆயிரம் பேர்களில் இவர்களும் அடங்கியிருந்தார்கள். நான் பேசிவிட்டு எந்த உழறல்களையும் இப்போது விடுவதில்லை பேச்சுக்களை அளந்து அளந்து கதைப்பதனால் நான் எனது நாவினை முதலில் நீட்டவில்லை, அவர்கள்தான் நாவினை நீட்டினார்கள் "வணக்கம்! எங்களுடைய மாநாடு பற்றி உங்களுடன் உரையாடலுக்காக வந்திருக்கிறோம் நேரம் ஒதுக்க முடியுமா?" எனப் பரிந்தார்கள்.

"ஓம் அதில் எதுவும் பிரச்சினை இல்லை இருந்தும் இப்போது பெரியளவில் அலட்டிக் கொள்வதில்லை, வாயைத் திறந்தால் பலபேர் எதிரிகளாகின்றனர், எதிரிகள் தான் என்னுடைய காவல் அரண்களை ஊடறுத்து நிற்கின்றனர். வேறு எந்தப் பிரச்சினையுமில்லை" என்றேன்.

"உண்மைதான் எதிரிகள் எந்த வேசத்தில் இருக்கிறார்கள் எனக் கண்டுபிடிப்பது சிரமம் இப்போது எந்த நல்ல வேலைகளும் செய்ய முடியாதுள்ளது. மூன்றாம் தர பேர்வழிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்திருப்பதனால் வீதிகள் முழுதும் காட்டேறிகளின் ஆதிக்கம் அதிகரித்து விட்டன. மனிதநேயமில்லை எழுத்துக்களில் உண்மையில்லை. பேச்சில் நேர்மையில்லை. குழி தோண்டுவதில் ஆர்வம் காட்டும் காட்டேறிகளுடன் நாம் வாழ்வது நாம் செய்த பாவம்தான்" என்றனர். உண்மைதான் என்றேன்.

"ஆனாலும் நாம் விட்டுவிட முடியாது. குழிதோண்டும் பேர்களுக்காக நாம் எம்முடைய எழுத்துக்களைத் துறந்து விடமுடியாது. குண்டுச்சட்டிக்குள் குதிரையோடும் பேர்வழிகளின் வழிபாடுகளையும் துதிப்பாடல்களை தூக்கியெறிந்து எமக்கான வழியை அமைத்திட வேண்டும்" என்றனர்.

"பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டும். குப்பைகள் அதிகரித்து விட்டன. சுத்திகரிப்புத் தொழிலாளியாலே முடியவில்லை. நகரம் குப்பைக் காடாகவே மாறிவிட்டது. தலைக்குமேல் வெள்ளம் வந்தபின் உயிரைக் காப்பது பற்றிச் சிந்திப்பது முட்டாள்தனம்" என்றேன்.

"அப்படியானால் என்னதான் வழியிருக்கின்றது" என என்னிடம் கேட்டனர்.

"அவர்களின் வழியில்தான் போக வேண்டும் அல்லது குப்பைகளை எரித்துச் சாம்பலாக்க வேண்டும்" என்றேன்.

"இந்தப் பதில் உண்மையில் விசர்தனமானது என்னுடைய கையாலாகாத்தனத்தை எடுத்து இயம்புகின்றது. கறையான்கள் பெருகும்வரை புத்தகங்களைப் பார்க்காது, பாதுகாக்காது அரித்த பின்னர் புத்தகத்தை கறையான் அரித்து விட்டது என கூக்குரல் இடுவது எவ்வளவு முட்டாள்தனம். கறையான்களின் உருவாக்கத்திற்கு முதலில் முற்றுப்புள்ளி வைத்திருக்கவேண்டும் அல்லவா?"

எனது புலம்பலைக் காது கொடுத்துக் கொண்டிருந்தது தூள் திண்ட கடதாசி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“இவ்வளவு ஆணித்தரமாக இருக்கும் நீங்கள் ஏழாவது இதழில் ஓய்ந்து போய் இருப்பது ஏன்?”

“அது ஓய்வல்ல, போராளிகளுக்கு ஓய்வென்பது இல்லை. வேறு தடங்களில் பயணிக்கும் காரணத்தினால் உங்களுக்கு ஓய்வு போல் தோன்றுகின்றது. தோற்றம் பொய், நிஜம்தான் மெய். நான் நிஜம். மாற்றமற்ற தடத்தில் பயணிக்கும் உரு நான்” என்றேன்

“தவறாகப் புரிந்து வைத்திருப்பதற்கு மன்னிப்புக் கோருகிறோம்” என்றனர்.

“இதில் என்ன மன்னிப்பு கிடக்கு”; என்றேன். “ஏழாவது இதழில் - இருவிடயம் பலரை புண்படுத்தியிருப்பதாகப் பேசப்படுகின்றது பற்றி என்ன சொல்லப் போகின்றீர்கள்?”

“ஏழாவது இதழ் ரொம்ப வித்தியாசமாக வந்த இதழ். வாசனின் ஓவியம். எங்களுடைய வரலாற்றை புடம் போட வைக்கின்ற அட்டை. அது பற்றி நிறையப் பேர் என்னுடன் தொலைபேசியிலும், நேரடியாகவும் பேசியிருக்கின்றார்கள். இதில் உள்ள சாதகத்தைத்தான் எடுக்கின்றேன். அதுபோல சிவத்தம்பி பற்றிய கட்டுரை மிக முக்கியமான கட்டுரையாக எனக்குப்பட்டது அதனால் தான் அதில் பிரசுரமானது. சிவத்தம்பி எனக்கு ஆறு மாதம் பல்கலைக்கழகத்தில் படிப்பித்திருக்கின்றார். அறிஞர் அதற்காக அந்திமகாலத்தில் விட்ட பிழையை எப்படி விட்டு வைப்பது? சரிநிகர் என்று வாயளவில் பேசிவிட்டுப் போக முடியாது. சிவத்தம்பியின் முகத்திரையை நச்சினிக்கினியார் கிழித்தெறிந்தார். பலர் பேர் சொல்வதைப் போல் அதனைப் போட்டிருக்கக்கூடாது அல்லது “எடிட்” செய்திருக்கலாம் என பசப்புகின்றனர். நம்ம சாதி எப்போதும் எட்டப்ப சாதிதான் சிவத்தம்பியும் அதற்கு விதிவிலக்கல்ல.

“தேய்ந்து போன ஒலிநாடாக்களில்நிமிர்ந்து நிற்கும் ஒலி நாடாக்கள் பற்றி...”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கட்டுரை இளம் தலைமுறை எழுத்தாளர்களை இனம்காட்ட முற்படுகின்றது. வழவழா என்ற ஒரு ஊர்ப்பாசை இருக்கின்றது. எதுக்கெடுத்தாலும் குறிப்பிட்டவற்றை உழறுவது, அந்த ஒன்றுக்கு முற்றுப் புள்ளி வைப்பது எனது நோக்கமல்ல. விமர்சகர்கள் மற்றவர்களையும் புத்தகங்களையும் படிக்க வேண்டும். தேய்ந்த 'ரெக்கோட்' போல் கொஞ்சப்பேர்வழிகளை வைத்துக் கொண்டு எழுதுதல் பற்றிக் கட்டுரையாளர் விசனப்பட்டிருந்தார். இதில் என்ன பிழை இருக்கின்றது? ஜாம்பவான்கள் யார் என்பது எனக்குத் தெரியாது. ஐன்ஸ்டீனுக்குப் பின்னும் கண்டுபிடிப்புக்கள் நடந்தன. ஐன்ஸ்டீன் எந்தக் கொள்கைகளையும் கட்டிப்பிடித்திருக்கவில்லை இதை முதலில் தமிழ் ஜாம்பவான்கள் புரிந்துகொள்ள வேண்டும். புரியாமல் நீங்களும் என்னிடம் கேள்வி கேட்க வந்திருக்கின்றீர்கள். பத்திரிகையாளன், நண்பர், தெரிந்தவர், படிப்பித்தவர், ஆசிரியர், அதிபர், தலைவர் எனப் பார்த்தால் பத்திரிகை நடத்த முடியாது. உண்மை பக்கச்சார்பற்று நடக்க வேண்டும். அவன்தான் பத்திரிகையாளன். எனக்கு இதில் மட்டும் பிரச்சினை இல்லை. 'களப்பு' எனும் சஞ்சிகை வந்தபோதும் பிரச்சினை எழுந்தது. பொறாமை கொண்டவர்கள், ஜீரணிக்க முடியாத கையேலாப் பேர்வழிகள் பிட்டிசம் போட்டார்கள். ஜாம்பவான்கள் உண்மையில் யார்?

"ஜாம்பவான்கள் யாரும் இல்லை. ஒவ்வொரு காலத்திற்கும் ஜாம்பவான்கள் தோன்றுகின்றார்கள் மறைகின்றார்கள். தோற்றமும், மறைவும் தான் நிரந்தரம், உண்மை மற்றயவற்றில் ஒன்றுமில்லை" என்றனர்.

"நீங்கள் சொல்வதில் பல நியாயங்கள், உண்மைகள் இருக்கின்றன. எனது நாக்குச் சற்று நீண்டிருக்கின்றது. எனது நாக்கு நீண்டால் ஏதாவது வில்லங்கம் வந்துவிடும். நாக்கு நீள்தல், உடும்பு, பாம்புக்குப் பொருந்தும். எனக்கு அது ஆபத்தில் வந்துவிடும். நாம் தவறுதலாக சிந்திப்பதும், தவறுதலாகப் பேசுவதும் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரங்களில் நமக்குச் சரியாகப்படலாம். மற்றவர்களுக்குப் பிழையாகப் புரியும். நான் பேசுவது உங்களுக்கு எப்படி என நான் அறியேன். முகத்தில் காட்டாது உங்களுக்குள் திட்டுக்கூட எனக்கு விழலாம். அது மனித இயல்பு" என்றேன்.

"அப்படி ஒன்றுமில்லை. உண்மைகளையும் முகத்துக்கு முன் பேசுவதும் எமக்குப் பிடித்திருக்கின்றது. அதனால்தான் இவ்வளவு நேரமும் பேசுகின்றோம் இல்லாவிட்டால் எப்பொழுதோ விடைபெற்றிருப்போம் அல்லவா?" என்றனர்.

"சரி மாநாடு பற்றி பேசவந்தீர்கள் ஏதோ பற்றிப் பேசிக்கொண்டிருக் கின்றோம்" என்றேன். எழுத்துகளைப் புரிந்துகொள்ளல், புதிய எழுத்துக்களை நோக்கி நகர்தல். இதுதான் எங்களுடைய மாநாட்டு தொனிப்பொருள். பொதுவாக இன்று எழுத்துக்கள் மாற்றத்துக்குள்ளாகி விட்டது. தமிழில், பொதுவாக ஈழத்தில் பெருமளவில் அரைத்தமாவை அரைக்கின்ற படைப்புக்களும் கி.மு. ஆங்கிலேயரின் காலத்து எழுத்து முறைமையுமே எம்மிடம் உலாவுகின்றன. இவை புளித்துப்போன பானங்கள். இவை சுவையானவை எனப் பருகமுடியாதவை. சுவைகளை அதிகரிக்கும் படைப்புக்களை நாம் உருவாக்க வேண்டும். உலகத்தரத் திற்கு படைப்புக்கள் பயணிக்க வேண்டும். இளம் தலைமுறையினரை இதை நோக்கி உணர வைப்பதே எமது நோக்கம்" என்றனர்.

நான் இது பற்றிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை. சிறு புன்முறுவலுடன் தலையாட்டிக்கொண்டே இருந்தேன்.

"தமிழ் இலக்கியத்துக்காக புத்தகமாகவும், எழுதுகோலாகவும் வாழ்ந்து வருகின்றோம். எழுத்துக்களை நாங்கள் அறிகின்றோம். குண்டுச் சட்டிக்குள் நாங்கள் குதிரை ஓட்டவில்லை. உலக விரிவுத்தளம் எங்களுக்கு ஒவ்வொரு நாளும் தரிசனமாகின்றது மாற்றம் கண்டு வரும் எழுத்து முறைமையை ஒவ்வொரு நாளும் கண்ணுற்று வருகின்றோம். இத்தருணத்தில் எமது மாநாடு சாதாரணமானதல்ல. உலக அரங்கில் இருந்து பல எழுத்தாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவுள்ளார்கள். ஜப்பானிலி ருந்து ஹாருக்கிமுராகமி வரவுள்ளார். மெக்சிக்கோவிலிருந்து காப்ரியல் கார்சியா மார்ச்க்வெஸ் வரவுள்ளார். அதுபோல் இன்னும் பல முக்கிய எழுத்தாளர்கள், கவிஞர்களுடன் தொடர்பில் இருக்கின்றோம். இந்த மாநாடு மாற்றத்திற்கான திறவுகோலாக அமையப் போகின்றது. உண்மையான எழுத்தை இனம் காட்டும் மாநாடாக மிளிரும் என்பதில் சந்தேகம் இல்லை.

அவர்கள் சொல்லுகின்ற வார்த்தை ஆரோக்கியமானதாக இன்னும் எனக்கு உணராததால், என்னுடைய பதில்கள் அவர்களிடம் சென்றடைய வில்லை. என்னுடைய அண்மைக்கால இருமாநாடுகளும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன. இதனால் தான் இவர்கள் இவ்வளவு நேரமும் என்னுடன் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

“நாங்கள் எல்லாவற்றையும் உங்களுடன் பேசிவிட்டோம் மாநாட்டிற்கு தாங்கள் வருவதையும் கருத்துத் தெரிவிப்பதையும் நாங்கள் விரும்புகின்றோம்” என்று விடைபெற எழுந்தனர்.

மழை பெரும் இரைச்சலுடன் பெய்து கொண்டிருந்தது. மாரி காலமழை இரு வருடமாக வெள்ளப் பெருக்குகளையும் இடப்பெயர்வையும் ஏற்படுத்திவிட்டன. இந்த மழைக்காலத்தில் மாநாடு பற்றி சிந்திப்பது... எத்தனை பேரை அழைத்து வரப்போகின்றார்கள் எனத் தெரியவில்லை. இப்போ இலக்கியக் கூட்டத்திற்கு பத்துப் பேர் வருவதே பெரிய விடயம் அதே நேரம் “பொம்புளப் புள்ளைகளின் கிரிக்கெட் போட்டி யினைப் பார்ப்பதற்கு நிறைய கிரிக்கெட் ரசிகர்களை இப்போது தரிசிக்க முடிகின்றது இந்த மாநாட்டை விட “பொம்புளப்புள்ளைகளுக் கான கிரிக்கெட் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்தால் முஸ்பாத்தியாக இருக்கும். முன்னர்கூட “தமிழினி மாநாடு கூட கும்பமேளக்கூத்தென வர்ணிக்கப்பட்டது. குடியும், குடித்தனமும் தான் இந்த மாநாட்டில் மிச்சம் என பல பத்திரிகையில், துண்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரங்களில் விமர்சனங்கள் வந்திருக்கின்றன. இது அப்படி இருக்கப்போகின்றதோ தெரியவில்லை. இருந்தும் மாநாடு நடத்துதல் பற்றி இவர்களுக்குச் சொல்ல வேண்டியது எமது கடமையாகின்றது. மாநாடு காற்றில் கலந்து போகும் பேரோசைகளாக இருப்பதில் பயன் ஏதுமில்லை. அதை அழகாகத் திட்டமிட்டு பயன்படுத்துதல் அவசியமாகின்றது. எனது இரு மாநாடுகளும் அவ்வாறே செயல்வடிவமாகியது பாரம்பரியங் களையும், அடையாளங்களையும் இளம் சந்ததியினருக்கு எடுத்துச் செல்லல் என்பதே எனது இயங்கியலாக இருந்தது. அதேபோலத்தான் இந்த மாநாடும் கடமையாற்ற வேண்டும். பேருக்கு நடத்துதல் அதுவும் ஒரு கும்பமேளாதான்.

நான் அவர்களை தாமதிக்கச்சொல்லி எனது அறையிலிருந்த பத்திரங்களுடன் அவர்கள் முன் வந்தேன். ஒவ்வொரு அமர்வுகளுக்குமான நகர்வுகளை அவர்களுக்கு முன்மொழியத் தொடங்கினேன் முதலில் மாநாட்டு உரைகளை

1. சிறுகதை 2. கவிதை, 3. மொழி பெயர்ப்பு 4. நாவல், 5. நாடகம், 6. ஓவியம், 7. நாட்டாரியல், 8. புனைவுசாரா எழுத்துக்கள் என்ற அடிப்படையில் எனதுபிரிவுகள் இருந்தன.

1. சிறுகதை: - சமகாலம், சமகாலத்திற்கு முந்தியவை, நவீன எழுத்து, மரபு எழுத்து, பின் நவீன எழுத்து, வழவழா எழுத்து இவ்வாறே ஏனைய பிரிவுகளுக்கும் கட்டுடைப்புச் செய்து பாருங்கள். அதில் முக்கியம் ஆய்வாளர்களை தேர்ந்தெடுத்தல் மிகமிக முக்கியமானது. வாசிப்பற்ற, தகவல்கள் தருபவர்கள், நுனிப்புல் மேய்பவர்கள், அலட்டல் பேர் வழிகள் என்ற நபர்களை சேர்த்து விடாது காத்திரமாகப் பணியாற்று பவர்களை கண்டுபிடியுங்கள். உங்களுடைய மாநாடு சிறப்படைய எனது வாழ்த்துகள். அவர்களை அனுப்பி வைத்தபோது, எனது அறை முழுவதும் நடுக்கம் ஏற்பட்டு ராக்கையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புத்தகங்கள் விழத்தொடங்கி விட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசை மீதிருந்த கவிதைப் புத்தங்கள் மலேரியா காச்சல்காரன் போல் குலுங்கிக் குலுங்கி எழத் தொடங்கிவிட்டன. எனக்கு ஏதும் புரியவில்லை வீடு முழுவதும் ஒரு வகை மணம் வீசத் தொடங்கியது. திடீரென்றுதான் 'ஓங்கிக் குத்தி ஓய்தலற்றுப்போ' என்ற கவிதை ஞாபகத்திற்கு வந்தது. மேசை மீது ஒரு பெரும் குத்தினை விட்டேன். அலைகள் எழும்பி அதிர்ந்தது. அதிர்வு வீடு முழுவதும் அதிர்ந்து சற்றுப் பின் ஓய்தலற்று போனது. குத்துக்குப் பின் ராக்கையும், மேசையும் வழமைக்குத் திரும்பின. தூள் திண்ட கடதாசியும் எழுதுகோலனும் சென்ற சில நிமிடத்தில் அமைதியற்ற சூழல் நிகழ்ந்ததை எனது மனம் கிளறிக் கொண்டிருந்தது. மனக்கிளறல் தொடர்ந்த சில நாட்களில் ஒரு மதிய நேரம் பெருவெளியை நோக்கிப் பயணிக்கின்ற பெரும் மாநாடு அனைவரையும் அழைக்கின் றோம். அழைப்பிதழ் உறையிலே அந்த வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. என்னைப் பார்க்க வந்த அந்த இரு முகங்களும் மறந்து விட்டன. அவர்களை நினைத்துப் பார்க்கின்றேன் எனக்குள் அவர்கள் பிடிபடவில்லை.

உறையை கிழித்து அமர்வுகளைப் பார்த்தேன். நான் கொடுத்த எந்தவொரு தலைப்பும் அங்கிருக்கவில்லை. வழமையான பல்லவிகள் தான். போவதற்கே மனம் விருப்பம் கொள்ளா விட்டாலும் 'கோ.கி'யைப் புரிந்துகொள்ளல்" தலைப்பிற்காக செல்லவேண்டும் என்று தீர்மானித்தேன். கட்டுரை வாசிப்பாளர் பழைய கடதாசி, 'க.கி'யையும், சந்திரனையும், 'ப.பி'யையும், தமிழில் உச்சம், தமிழில் இமயங்கள் எனப் புலம்புவர். இவர் 'கோ.கி'யை எப்படிப் புரிந்து கொள்ளப்போகிறார். 'எஸ்.செ' கூட உயிர்மை **100** இதழில் 'கோ.கி'யின் ஆரம்பகால சிறுகதைகளுக்கு மட்டுமே இப்போது வரை வாசகர்கள் இருக்கும் பட்சத்தில் ஏன் அவர் தொடர்ந்து எழுதிக் கொண்டேயிருக்கின்றார்? வாசிக்கப்படாத புத்தகங்கள் வாசிக்கப்படாத கதைகள் அறியப்படாத கதாபாத்திரங்கள் இறுதியில் இவ்வுலகில் என்னவாகப் போகிறார்கள்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'எஸ்.செ' வளர்ந்து வருகின்ற இளம் எழுத்தாளர். நல்ல சிறுகதைகளை நமக்குத் தந்திருக்கின்றார். கோணங்கியின் கதைகளை இவர் ஏன் புரிந்து கொள்ளவில்லை? என்பது என் பிரச்சினை அல்ல. எழுத்தின் மாற்றம் என்பது எல்லா மொழியிலும் மாறிக் கொண்டே போகின்றது. வாசகர் மாறவில்லை என்றால் அது யாருடைய பிழை. கணிதம் விளங்கவில்லை புரியவில்லை என்றால் தேற்றத்தில் பிழையா? எண்களில் பிழையா? சமன்பாட்டில் பிழையா? வர்க்கத்தில் பிழையா? எதில் பிழை? கணிதத்தைப் புரிந்து கொள்வதற்கு நாங்கள் எல்லோரும் தயாராகின்றோம். புரிதலுக்கான பெருவெளியைத் திறக்கின்றோம். அப்படித்தான் எழுத்தும் விந்தையானது. புதிய கதவுகளை திறக்க முற்பட வேண்டும். கதவுகளைத் திறக்காது மூடியிருந்தால் துர்நாற்றம் நம் வீடுகளில் குடிகொண்டு விடும். மழைக் காலத்தில் யன்னல்களைத் திறந்து வீடுகளைப் புதுப்பிப்பது போல் தான் எழுத்துலகமும் புது எழுத்துக்களை திறந்துவிட வேண்டிய காலத்தில் நிற்கின்றோம்.

நான் 'கோ.கி'யின் ரத்த ஓட்டம் நிறைந்த புகைக்குடிகாற்றினைச் சுமந்து வண்ணத்துப்பூச்சிகளின் மீது சவாரி செய்து புகைக்குடிப் பெண்களை துரத்திச் செல்லும் கானகத்தில் நாலா வாசல்களையும் எப்போது  வரை புகைக்குடிகாற்று, துக்கத்தில் கயிற்றை சர்ப்பமாக்கும். கனவுப் பாம்பின் குறுக்குவெட்டுத் தோற்றம் மெல்லப் பரவும் தொண்டிக்கடலின் புகைவளையப் பூதங்கள் ஐந்தும் புனையுருவாக பெருவழிதோன்றும். எட்டுக் காற்றுக் கழுதைகளின் சாயலில் அடிமுடிகண்ட புகைக்குடிச்சித்தனின் ஊர்களின் எல்லையில் அடிநாதத்தின் உச்சத்தில் நிற்கின்ற புனைவினை நான் தரிசித்துக் கொண்டு இருக்கின்ற புகைக்குடிச்சித்தனின் 'பிரச்சினாவதா' எனைக் கொல்லுகின்ற வார்த்தைகளைத் தேடிப் படியெடுக்கின்றேன்.

சமாரியன்காற்று மகதலேனாவின் தைல வாடையில் சமாரியப் பெண்கள் மழைக்காற்றை கூட்டி வரும் கடியெறும்புகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டினை கிணற்றடியில் கூவிக்கூவி உவர் கடலைப் பாழிடங்களை பயிரிடப்படாத தரிசு நிலங்களைத் தாண்டி கீழ் நாட்டு எமோரியரின் மலைப் பகுதியில் மெல்ல ஏறுகின்ற எனது கால்கள் புதிய காற்றுகளை மூட்டை கட்டி கிழக்கிற்கும், வடக்கிற்கும், மலையகத்திற்கும் அனுப்பிக் கொண்டிருக் கின்றேன். என் கண் எதிரே சிறுபுற்கள் முளைக்கத்தொடங்கி விட்டன. ஆனால் பெரும் இருள் மூண்ட திசையிலிருந்து ஊர்ந்து வந்த வெள்வாடைக் காற்று.

"காடேறிகளில் பலரகமுள்ளது. உன் வீடு புகுந்தவை இரத்தக் காடேறிகள், எனக் கூவிப்போன போது என் தலை சுற்றி மலை உச்சியிலிருந்து சறுக்கி குடும்பிமலையில் அமர்ந்து கொண்டேன். காடேறிகள் மாநாட்டிற்கு நான் இன்னும் போகவில்லை என உரத்துக் கத்தினேன். மலைகள் முழுவதிலுமே எதிரொலித்து, ஓய்தலற்று போனது. மலையை விட்டு நடந்து போகின்றேன். "தவின் சொல் கதைகளுக்கு அப்பால்......

*-2013-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூ....

சித்தார்த்தன் சுடுகவிதையுடனும், கதையுடனும் வந்திருப்பது எனக்கு பேரதிர்ச்சியாகவே இருந்தது. அதிர்ச்சியிலிருந்து மீள பல கணங்களைக் கடக்கவேண்டியிருந்தது. என்னை ஆசுவாசப் படுத்தி சற்று மெல்லலாமென வாயில்போட்ட மறுகணமே சுர்ரென மூளையில் பெரும் உதை விழுந்தது. சொல்லமுடியாத ஓசையுடன் காறி உமிழ்ந்தேன். பற்கள் விறைத்திருந்தன. சொக்கும் உள்நாக்கும் தீக்காயங்களாக வெந்து துடித்தன.

சித்தார்த்தனுக்கு ஏன் இந்தத்திடீர் மாற்றம். வாழ்க்கை பிடிக்கவில்லையென்றே... மாயவாழ்க்கையிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்றே... புறப்பட்ட சாது அவன். பிறகு ஏன் கவிதைக்குள்ளும், கதைக்குள்ளும் ஓடுகிறான் இது பற்றி நான் அவனிடம் கேட்கவேண்டுமென்றே மனம் உறுத்திக் கொண்டிருந்தது. எதையும் மனதில் பூட்டி வைக்கும் பழக்கம் இயல்பாக இல்லாத காரணத்தினால் சித்தார்த்தனிடம் கேட்டே ஆகவேண்டுமென்று மனம் துடியாய் துடித்துக்கொண்டேயிருந்தது. அன்றுதான் அந்தச் சந்தர்ப்பம் எனக்குக்கிடைத்தது.

"சித்தா ஏனப்பா இந்தத்திடீர் மாற்றம்" என்றேன். அது "ஏனெனத் தெரியவில்லை" வயோதிபரை, இழவினை, வறுமையை....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்பார்த்த பிற்பாடுதான் அரச வாழ்க்கையிலும், ஆடம்பர வாழ்க்கையிலும் வெறுப்பேற்பட்டது. வீட்டை விட்டு காட்டிற்கு போகும் முடிவும் அக்கணத்திலேதான் உருக்கொண்டது.

வருடக்கணக்காய் தவமிருந்தேன்.சில போதனைகளும் சொல்லியிருக் கிறேன். உண்மைதான் ஆனால் ஏனென்று தெரியவில்லை கொஞ்சக் காலமாய் கண்ணை மூடினால் கதையும் கவிதைகளுமே என்னில் சுரந்தெழுகின்றன. பரமபிதாவை நான் இப்போது கவிதைகளிலே காண்கின்றேன். தாண்டவக் கோலத்தை கதைகளிலே காண்கின்றேன். எல்லாச்சிவமயத்தையும் எழுத்துக்களிலே தரிசிக்கின்றேன். அதனால்தான் ஞானம் எதையும் தராது என்பதைப்புரிந்துவிட்டேன். கச்சைக்கட்டிலோ, நிர்வாணத்திலோ எதையும் சாதித்து விட முடியாது. இப்போதுதான் என் மண்டையில் உறைத்திருக்கிறது.

படைப்புத்தான் மனிதனை வாழ வைக்கும். கண்களைத் திறக்க வைக்கும் நான் இத்தனை வருடமும் எத்தனை எத்தனை ... பேரோசைகளை உருவாக்கியிருக்கின்றேன். இந்தப் பூமிப்பந்தின் ஜென்மங்களுக்கு மண்டை திறக்கவில்லை. ஏன்?அதுதான் நான் புது அவதாரம் எடுத்திருக்கிறேன். கதையும், கவிதையும்தான். புதுமைகளையும், புதுயுகத்தையும் படைக்கும். ஆயிரம் ஆயிரம் மாடுகளை வசப்படுத்தும் ஒரு புல்லாங்குழல் சிறுவனைப் போல் நானும் முளைவிட்டிருக்கின்றேன் என்றான்.

“எனக்கு ஏதும் பேசமுடியவில்லை” கதை, கவிதையென நக்குவாரப்படும் பாழ்கிணற்றில் இவன் ஏன் தவறிவிழுந்தான். இதில் எதைச்சாதிக்கப் போகின்றான். கூடினா பத்துப்பதினைந்து வாசகரை எட்டலாம். அதுக்கு மேல் நான் நினைக்கல்ல.

“என்ன அண்ணே கடுமையாக யோசிக்கிங்க” என என்னை மீண்டும் உசுப்பினான். “ இந்தாங்க இரண்டு சுடு க....க.... வாசித்துச் சொல்லுங்க எனச்சந்தி மறித்து என்முன் நின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்ல வாயில் தண்ணீரை நிறைத்து மெல்ல மெல்ல மென்றேன். ருசி சிரசை மெல்ல அருட்டியது. ஆணுறுப்பை சற்று உசாராக்கியது. கவிதைகள் புனிதவதியை, நாச்சியை, ஔவையென ஒழுகினாலும் உத்தவத்தாண்டவம் உடலுறுப்பு சார்ந்ததாகவே விரவிக்கிடந்தது. ஆண், பெண் உறவுகள் உட்பாகத்தின் களிமுகத்திலே சஞ்சாரம் செய்து இயல் பிழந்து பிண்டத்தில் விழுகின்ற சொல்லாட்சி வழவழாகவே எனக்குப்பட்டது. கதையும் புதுசா எனக்குப் படவில்லை. 'ஜே.பி.சா'வின் ஆண்களின் படித்துறையையோ / 'பாலு' வின் வடிகாளையையோ/ சண்முகம் சிவலிங்கத்தின் காட்டுப்பூச்சியையோ... மிஞ்சவில்லை.

"வாழ்வு பாலியலை வெறுக்கின்ற போதுதான் விடுதலை நேசிக்கும்". விடுதலை பாலை அறுத்தலிலே தங்கியிருக்கின்றது. வாழ்வும் பாலியலும் சமதையாக பயணிக்கும்வரை விடுதலை சாத்தியமில்லை. விமோசனமில்லை. நாம் எப்போ பாலினை அறுக்கிறமோ அப்போது தான் ஒளியினை அடையமுடியும். அதற்காக நாம் பயணிப்போம். இது சித்தாவால் இறுதியாகப் எழுதப்பட்ட "கவட்டுக்குள் கையை வை" என்ற சிறுகதையின் இறுதிப்பகுதி.

இக்கதையில் தத்துவார்த்தம் விரவிக்கிடக்கின்றது. இது யாருக்குப் புரியப்போகின்றது. தத்துவத்தினைப் படிப்பவனை, படிப்பிப்பவனை லூசன், லூசி என்றே இந்த உலகம் சொல்கின்றது. பிறகு எப்படி?

சித்தார்த்தன் கண்களைச்சிமிட்டி மூக்கின் இடது பக்கத்தை ஒரு கையால் அமர்த்தி மறுபக்கத்தினால் காற்றை உறிஞ்சிவிட்டு சொன்னான் "உங்கள் மனம் என்ன சொல்கிறதென எனக்குப் புரிகிறது. புரிதலும் புரியாததும் அவரவர் திறன் சார்ந்தது. புரியாதவன் இவ்வாழ்க்கையை இழக்கின்றான் புரிந்தவன் இவ்வாழ்க்கையை சுவைக்கின்றான். அவ்வளவுதான் என்றான்". அதற்கு மேல் என்னால் ஒன்றும் சொல்ல முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் புரியாதவனாக கருதுகின்றான். அப்படியே இருக்கட்டும். ஆனா, சித்தார்த்தன் பெரும் கவிஞனாக, எழுத்தாளனாக முடி சூடுவான் என்பதில் சந்தேகம் இல்லை. அவனிடத்திலிருந்து விடைபெற முயன்றேன். நாயுருவிபோல் அவன் விடுவதாகயில்லை.

சித்தார்த்தன் தன்னுடைய படைப்புக்கள் கடல் கடந்து வரவேண்டு மென்று ஆசைகொண்டான். என்னுடைய தத்துவங்கள் அங்குதான் தோன்றின. கதைகளும், கவிதைகளும் அங்குதான் ஜனனிக்க வேண்டுமென ஆதங்கம் கொண்டான். நான் எனது தந்திரங்களை அவனுக்கு சொல்லத் தொடங்கினேன். கடல் கடந்து வரவேண்டு மென்றால் அங்குள்ள நாள் ஏடுகளை புழுகித்தள்ள வேண்டும். அத்தோடு நாள்கணக்காய் தொலைபேசியில் உரையாட வேண்டும். அவர்கள் ஒருபோதும் எடுக்கார் நீதான் எடுக்கவேண்டும். எனக்குத் தெரிஞ்ச ஒருவர் விருட்சம், புனலுக்கு "ஐஸ்" வைத்து கடிதம் எழுதினார்.

"உங்களுடைய சஞ்சிகை சிறந்த வடிவமைப்பு, சிறந்த செய்நேர்த்தி/ படைப்புக்கள் அதி அற்புதம்... இப்படியான சஞ்சிகைகள் எங்கள் ஊரில், நாட்டில் வரவில்லை... வருவதில்லை. உங்களைப் பாராட்டுகின்றேன் எனக்கடிதம் முதல் இதழில் வந்தது. அடுத்த இதழில் அவருடைய கதை வந்தது. எப்படித்தந்திரம்?.

அதே நேரம் இங்கு அலை, மனிதன், வியூகம், நிகரி, சமர், மறுகா என பல சஞ்சிகை விருட்சத்தைவிட புனலைவிட சிறப்பாக வந்தன... வருகின்றன. சுந்தரராமசாமி கூட அலையைப்பார்த்து பிரமித்து எங்களிடம் இப்படியில்லையே என வெட்கப்பட்ட காலமும் உண்டு. ஆனா நம்மட "மஸ்து" இப்படி எழுதினது தனது கதையைப் பிரசுரிப்பதற்கு என ஊருக்கே தெரியும். நீரும் இந்தத்தந்திரத்தை கையாளும் என்று எனது ஆலோசனையை செப்பிவிட்டு ஒருமாதிரியாக அவனிடமிருந்து விடைபெற்றேன்.

விடைபெற்று பலவருடங்களாக அவனுடன் உறவும், தொடர்பும் இருக்கவில்லை. இருந்தும் பல்வேறு கதைகள் அவனைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலாவின. ஆனா அவனிடம் இருந்து கதைகளும், கவிதைகளும் குவிந்த வண்ணமாகவே இருந்தன. மூட்டை மூட்டையாகக்கட்டி மலைபோல் குவித்து வைத்திருந்தேன். திடிரென ஒருநாள் என்னிடம் தரிசனமானான். என்னைக்கட்டித்தழுவி உச்சிமோர்ந்தான்.

"வானமே எல்லை" விருது கிடைத்திருப்பதாக உட்சாகத்துடன் கூவினான். உங்களை மறக்க முடியாது. அண்ண நீங்க தந்த அறிவுரைதான் என்னை இந்தக்கடல் கடந்த விருதிற்கு உயர்த்தியிருக்கு. இப்ப என்ட கவிதையில, கதையில ஒண்டுமேயில்ல ஆனா பிரமித்து என்ட படைப்பை பாராட்டுறாங்க... எப்படியிருப்பினும் என்னுடைய பாராட்டு விழாவிற்கு ஒரு புகழ்மாலையை எழுதித்தரவேண்டும். இப்படித்தான் பலர் புகழுக்காக ஓடித்திரிகிறார்கள். இருந்தும் அவனுடைய கோரிக்கையை தட்டிவிட முடியவில்லை. தலையை அசைத்தேன்.

சித்தார்த்தன் முற்றாக மாறியிருந்தான். ஆசையைத்துறக்க துணிந்தவன். ஆசையின்பால் ஈர்க்கப்பட்டு எழுத்தாளர்கள் சண்டையில் அவனும் முகிழ்ந்துவிட்டான். பெரும் புத்தகம் ஒன்றைக்கொண்டுவர வேண்டு மென்று இரவு பகலாய் அட்டையிலும் உள் அமைப்பிலும் நாட்களை ஓட்டினான். எந்த எழுத்தாளனையோ, கவிஞனையோ மதிப்பதில்லை அவன். ஏறெடுத்து பேசத்தொடங்கினான். என்ன எழுதுகிறாங்க? பீ கவிதையும். பீ கதையும் நாக்கில் வைத்துக்கூட வழிக்கேலாது. என மமதை கொண்டு கதைக்கலானான். நோபல் பரிசுதான் என்னுடைய அடுத்த குறிக்கோள். தமிழில் இதுவரை யாரும் நோபல் பரிசுக்கு கிட்டக்கூடப் போகவில்லை. நான்மட்டுமே தற்போது தகுதியடைந் திருக்கிறேன். ஆல்பிரட் நோபலின் கனவினை நான்தான் விரட்டுவேன் என சித்தம் பேதலித்து உளறத் தொடங்கினான். இதற்கு மேலாக அவனுடைய பேச்சை என்ட செவிகள் கேட்கும் சக்தியை கொண்டிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி விரட்டி அடிப்பது எனச்சிந்தனையில் ஆழ்ந்தேன். விரட்டி அடிப்பதென்பது சும்மாவிடயமா? ஊருக்கும், அவனுக்கும் ஏற்றாற்போல் புகழ்மாலையை பாடி விட்டால் புது எழுத்தாளன் பறந்துவிடுவான். மண்டையைக் குடைந்து கதிரையில் அமர்ந்து கொண்டேன்.

## புகழ்மாலை - 1

அரச வாழ்வு
அசிங்கமாய்ப்போனதால்
ஞான வாழ்வைத்தேடினாய்
மரநிழலில்
நிஷ்டையானாய்
மாமேதையே சித்தா!
அகக்கண்களைத்திறந்தாய்
ஞான ஒளியைப் பாய்ச்சினாய்
மரணித்த மனங்களைத் திறந்தாய்
மமதையை ஓட்டினாய்

## புகழ்மாலை - 2 - வேறு

உயிர்பலி
உதவாது என்றாய்
அன்பே
ஆருயிரே என்றாய்
துன்பங்களைத் துடைத்திட
துணிவுகொள் என்றாய்
கடவுளை நம்பு
காலம் உன்னைக் காக்கும் என்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகழ்மாலை -3 - வேறு வேறு

இத்தனை போதனைகளையும்
இனிப்புடன் தந்தாய்
அத்தனையும் எமக்கு
அருமருந்தாய் ஊட்டினாய்

## புகழ்மாலை - 4 - பழையது

சற்றும் எதிர்பார்க்காது
சடுதியாய்
கதை கவிதையுடன் வந்தாய்
அழுகி நாறுகின்ற அசிங்கத்திற்குள்
நீயும் தவறி விழுந்தாய்
கள்ளுக் கடைகளைத் தரிசித்தாய்
களவு ஒழுக்கத்திற்கும் போனாய்
யார் பெரியவன்
நான்தான் பெரியவன்
இல்லை நான்தான் பெரியவன்
என அலறும்
புலம்பிகள் மத்தியில்
நீயும் மாமேதையானாய்

## புகழ்மாலை - 5 பிற

சித்தா
கொடும் புயலில் சிக்காது
கொள்கையுடன் வாழ்
நோபல் பரிசுக்காய்
நொந்து போகாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குள் இருந்து எழுதும்
எழுத்தாளர் கவிஞர்கள்கள் போல்
நீயும் இராது
வாழ்வதற்காய்
போதனை செய்வது மேல்
சாதுவாய் வாழ்
சமரசத்தைக் கொண்டுவா!
இதற்கு மேல்
என்னால் எழுந்து பாட முடியாது
நாயகனே!
எழுந்து போ மகனே!
நீ நீடூழி வாழ்க.

புகழ் மாலை முடிவடைய சாமங்கள் கடந்து போயிற்று. சித்தா தலையில் துண்டைப் போட்டு அக்கினி மூலையை நோக்கி நடந்து போனான். நான் புகழ்மாலையை கிழித்தெறிந்து கொண்டிருந்தேன். தூ...

*-2014-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால்குடியனும் இன்னும் சிலரும்

*10.10.2011ம் திகதியிடப்பட்ட 'பிட்டி'சத்தின் பின் எந்த விழாக்களையும் செய்யக்கூடாதென நான் முடிவெடுத்தாலும் இயல்பான உந்துதல் என்னை ஏதோ ஒன்றில் தள்ளிக்கொண்டே இருக்கிறது. என்னுடைய காலைக்கட்டிப்போட துஷ்டர்கள் புறப்பட்டாலும் எப்படியோ தெரியவில்லை அவை அவிழ்ந்து விடுகின்றன. திடீர் திடீரென சிந்தனைகளும் உணர்வு உந்துதலும், அடையாளங்களை மீட்கின்ற இனத்துவமும் என்னை அறியாமல் வந்து விழுவதற்கு நான் என்ன செய்ய என் தோழர்களே? என் மனைவிக்குக்கூட துளியும் இதில் விருப்பமில்லை. மற்ற உத்தியோகத்தர்களைப்போல் சும்மா இருந்தா எந்தப் பிரச்சினையும் இல்லையே என நச்சரிப்பாள். அதில் எந்தப்பிழையும் இல்லை. அவள் சொல்வதில் நிறைய உண்மைகள் இருக்கின்றன. 'சயிட் பிஸ்னஸாக' இந்தத் தொழிலைச் செய்யலாம். ஆனால் என்னால் முடியவில்லை. சும்மா இருத்தல் என்பது எந்தச் சூழலிலும் நான் பழக்கப்படாதவை. ஏதோ செய்ய வேண்டும். எம்முன் விரிந்து கிடக்கும் எம் பாரம்பரியத்தை விழுங்க நினைக்கும் பெரும் பூதத்தை நாம் அழித்தே ஆக வேண்டும். இதுதான் இப்போது என்முன் விரிந்து கிடக்கும் கிடக்கின்ற பெரும் பணியாக நான் உணர்கிறேன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசிபடிந்த பைல்களை கிளறிக்கொண்டிருந்தேன். அது ஒரு காலை எட்டு மணி இன்னும் சகபாடிகள் வேலைக்கு வராத நேரம். அலுமாரிக்கதவினை விரித்து அண்ணாவிமார்களின் 'பைலை'யும், விருதுகள் வழங்குவதற்காக பெயர் பட்டியல் அடிக்கிவைக்கப்பட்டிருந்த 'பைலை'யும் எடுத்து எனது மேசைமீது வைத்து இருக்கையில் அமர்ந்து கொண்டேன். எலி நாற்றம் அடங்கி ஏதோவொரு நாற்றம் மெல்ல எழுந்தது. எனது அலுவலக அறைமுழுவதும் இது இற்றைக்கு, மூன்று வருடமாக அனுபவித்து வருகின்ற நரக வேதனை தான். என்ன செய்வது மேசைமீது ஊதிப்பெருத்திருந்த விருதுகள் 'பைலை' எடுத்தேன் ஒற்றைகளை ஒவ்வொன்றாகத் தட்டிப்பார்த்தேன் முன்னூறுக்கு மேற்பட்ட பெயர்களின் தகுதிகளும், தராதரங்களும் இணைக்கப்பட்டு இருந்தன. புன்முறுவல் பூக்கும் முகங்கள், என்னை முறைக்கின்ற முகங்கள், என 'பைல்' முழுவதும் வளர்ந்துகொண்டிருந்தன. கலாபூசணம் தா, முதலமைச்சர் விருது தா என ஒலிக்கின்ற குரலுமாய் சத்தம் எழத்தொடங்கியது. முகங்கள் நீண்டு 'பைலை' விட்டு வெளியேற முயற்சித்தன. நான் பெரும் பயம் கொண்டு கோப்பை மூடினேன். கோப்புத்துடிக்கத் தொடங்கியது. அடிக்கடி நான் காணும் முகங்களும், காணாத முகங்களும்தான். இடியோசை எழத்தொடங்க எனது பாரம் ஏத்திய கோப்பின் மீது அழுத்தி வைத்த பின் நீண்டு வந்த முகங்களும், ஓசைகளும் நின்று காற்றடித்து ஓய்ந்துபோன மனநிலை எனக்குள் ஏற்பட்டது. இனி கலைஞனைத் தேடி விருது போக வேண்டும். அவன் பட்டங்களைத் தேடி அலையக் கூடாது. ஒரு கதை, ஒரு கவிதை, ஒரு கூத்து, ஒரு நாடகம் என ஆற்றிவிட்டால் பட்டத்துக்கு ஆசைவந்து விடுகிறது. கியூ வரிசைகளும் நீண்டு விடுகின்றன. சீச்சீ.. இது மாறனும் பட்டங்கள் அவன் வீட்டுக்குப்போய்ச்சேர வேண்டும். ஆசை யாரைத்தான் விட்டுவெச்சிருக்கு. ஆனால் தன்மானம், மாண்புறு இருக்க வேண்டுமல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போதெல்லாம் அவ்வளவு பாரம் பீடிப்பதில்லை என்பதோடு சில கணங்கள் மட்டுமே நீடித்து விட்டு மறைந்து விடுகின்றது. என்ன சில யோசனைகள் தானாகவே உதித்தெழும் அதைத் தொடர்ந்து ஆழமான பயமும் உடன்கிளம்பும். இந்தக் கலைஞர்களுக்கு என்னால் என்ன செய்ய முடியும்? பட்டங்கள் மாத்திரம் அங்கீகாரமா! சில பேருக்கு அதிஷ்டம் அடித்து விடுகிறது. சில பேருக்கு போதாத காலமாக அமைந்து விடுகிறது. பாப்பம் இன்னும் அண்ணாவிமார் மாநாட்டிற்கு இருபது நாட்களே இருக்கின்றன. மேடு பள்ளம், காடு கரம்பைகள் தாண்டி சிலரை அடையாளம் கண்டாலும் இன்னும் பலரை பார்க்க வேண்டியிருந்தது. தகவலாளிகள் அனுப்பி வைத்திருந்த தகவல்களும் ஓரளவுக்கு மாத்திரம் உதவின. அண்ணாவி என குறிப்பிடப்பட்ட பலர் கூத்தர்களாக அல்லது மத்தளம் அடிப்பவராக அல்லது இதில் எதிலும் சம்மந்தப்படாதவராகக் கூட இருந்தனர். ஒரு அண்ணாவியை கண்டு பிடிக்க பல நாட்கள் கழிக்க வேண்டியிருந்தது. எழுபது எண்பது கிலோமீற்றர் பிரயாணங்கள் இரவில் தரையில் மல்லாக்கப்படுக்கும் போது தான் முதுகு எலும்பு புதுப்புது அனுபவங்களைப் பேசும். இவற்றை எல்லாம் தாண்டித்தான் எனது பயணங்கள் ஓடுகின்றன.

**20.10.2012**
**சில்லிக்கொடியாறு**
**பயணம் ஆரம்பம் காலை 7.30 மணி**

வானம் இருட்டி இருக்கிறது. சில்லிக் கொடியாற்றைத் தாண்ட வேண்டும். எனது 'கீரோ சீடி டவூ'னில் சில்லிக்கொடியாறு பற்றி முழத்துக்கு முழம் விசாரித்தே எனது பயணம் தொடர்கிறது. இதற்கு முதல் இந்தப்பக்கம் எட்டிப்பார்த்ததே இல்ல. அப்படி வந்திருந்தா இப்ப எந்த மண்மேட்டிற்குள் இருந்திருப்பனோ தெரியல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மணல் புட்டியத்தாண்டி குறுக்கால போனா பன்சேனைவரும். அதத் தாண்டி தாந்தாக்குப் போற றோட்டால வலப்பக்கம் போனா ஒத்தயடிப் பாத வரும் அதால குறுக்காகபோனா குளத்து 'வண்டு' வரும் அதால போனா சில்லிக்கொடியாறு தான்"

என ஒரு முதியவர் எனக்கு வகுப்பெடுத்தார். குளத்து வண்ட் ஒரு பாகமும் வராது. சற்றுச்சறுக்கினா உடம்பில ஒரு பாகமும் புறக்கேலாது. மிகக் கவனமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தி சில்லிக்கொடியாறு வெட்டையை அடைந்த போது, மதியம் ஒருமணியிருக்கும். புதர் காடுகள். மனித நடமாட்டத்தைக் காணவில்லை. பயமும் கொஞ்சம் உதறத் தொடங்கியது. என்ன செய்ய? தொடங்கியதை முடிக்கவேணும். வண்டில் பாதையின் அடித்தடத்தாலே மோட்டார் சைக்கிளை நகர்த்தினேன். வெகு நேரத்தின் பின் ஒரு கொள்ளி கொண்டுவரும் ஒரு தொழிலாளி என்முன் தென்பட்டான்.

"அண்ணண் பால் குடியன் அண்ணாவியாரிட ஊடு எங்கயிருக்கண்ணன்" என்றேன் " இன்னும் ரெண்டுமைல் ஓடினா வலப்பக்கம் வரும் சந்தியில இருக்கின்ற பெரிய காட்டுமா நிக்குது, அந்த வழியால போனா அவடத்தான்" என்றான். அது அவனுக்கு 'அவடத்தான்' என 'சிம்பிலாகச்' சொல்லித்து சைக்கிளை மிதித்தான். திக்குத் தெரியாத காட்டில் கண்ணைக்கட்டி விட்டது போல்த்தான் நான் தொடர்ந்து பயணித்தேன். அவன் சொன்னது போல ஒவ்வொரு மரமாகத்தேடி பால் குடியனின் வீட்டை அடைய ஒரு மணித்தியாலத்தைத் தாண்டியது.

ஓலை வேயப்பட்ட சிறியதொரு குடிசை. கம்புகளால் கோர்க்கப்பட்ட படலைக்கதவு, முன் வாசலுக்கு இடப்பக்கம் சிறிய ஆட்டுக் காளை,'கோனை' அழுத்தினேன். யாரும் வருவதாக இல்லை, திரும்பவும் முயற்சித்தேன். பதினேழு பதினெட்டு வயது மதிக்கத்தக்க ஒரு குமரி வயல் வெளியிலிருந்து வந்தாள். இடுப்பில் தண்ணீர்க் குடம், தோளில் உடுப்புக்கள். "அண்ணாவியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காரா" எனக்கேட்டேன். "இல்ல, அவரு இஞ்சால போயிருக்காரு, நீங்க ஆரு" எனக் கேட்டாள். நான் என்னைப் பற்றிச் சொன்னன். "அண்ணாவி மாநாடு நடக்கப்போகுது அதுதான் இவரச் சந்தித்து கதைக்கணும்" என்றேன். "அப்படியா, அப்பா பக்கத்தூரில இண்டைக்கு சதங்க கட்டுவிழா அங்கதான் போயிருக்காரு வேணுமெண்டா அங்க போயி பாருங்க" என்றாள்.

"அப்படியா" என எனது ஆற்றாமையைக் கொட்டினேன்.

"தூரமில்ல இந்தாதான்" என்றாள்

"அப்பசரி வழியச்சொல்லுமனே" என்றேன் "நீங்க வந்தவழியால போயி இடப்பக்கம் கிறிகினா அவடத்திலதான்" என்றாள். சரி எனத்தலையை ஆட்டிவிட்டு எனது மோட்டார் சைக்கிளை காற்றில் பறக்கவிட்டேன்.

மாமரமும், வேப்பை மரமும் நிழல் சோலையாக இருக்கின்ற வளவின் மத்தியில் வட்டக்களரி கட்டி ஆட்கள் சுற்றிவர இருக்க நடுவில் தும்பு மீசையுடன் திடகாத்திரமான முறுக்கிய உடல் வாகு, நெற்றியிலிருந்து மேல்நோக்கி ஒரு நீள்வட்டமான முடியற்ற தலையுடன் ஒருவர் நிற்க இன்னும் சிலபேர் தள்ளி நின்று கொண்டிருந்தார்கள். நான் சட்டென்று யாரிடமும் ஏதும் பேசாது களரியைத்தள்ளி ஒரமாக உட்கார்ந்து நிகழ்சியை கவனித்தேன். அந்தஊர் கலைக்கழகத் தலைவரின் வரவேற்புரைக்குப் பின், அண்ணாவியார் பால்குடியன் கூத்துப்பற்றிய பல அரிதான தகவல்களைக் கூறத்தொடங்கினார்.

"இது போன்ற சதங்கையணி இளம்பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியையும், எங்களுடைய கலைகளை அடுத்த சந்ததியினருக்கு கைமாறு வதற்குமான ஒரு முக்கியமான நிகழ்வு. இன்று நகரத்திலயும், அதை அண்டிய ஊர்களிலும் ரீவியும், கொம்பியூட்டரும், இணையத் தளங்களும் எல்லாவற்றையும் அழிக்கின்றன. எங்கட பிள்ளையாரின் அருளால இங்கால கரண்ட் வராததால இந்தக்கலை இங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருடன் இருக்கு. இல்லாட்டி அங்கவுள்ள மூடர்கள் போல இங்கயும் சில இடர்பாடுகள் வரலாம். எப்படியிருந்தாலும், நாங்க இதை விட்டுக்கொடுக்கக் கூடாது. நான் இறந்தாலும் எனக்குப்பின் இன்னொருவர் உருவாகணும். உருவாகுவான். என்றுகூறிமுடித்தார்.

சதங்கையைக் கூத்தர்களுக்கு அணிவித்து, தலையில் தலைப்பாகை, கழுத்தில் மலர் மாலைகள், காசுமாலைகள் கையில் ஆயுதங்கள் என களரிக்குள் கூத்தர்கள் வந்தனர். அண்ணாவியார் இடுப்பில் மத்தளத்தைக்கட்டி விநாயகர் வணக்கத்துடன் ஆரம்பமாக மத்தளம் பேசத் தொடங்கியது. சதங்கையணிவிழா கண்ணுக்கும், காதுக்கும் புளகாங்கிதத்தையளித்தது. கூத்து முடிந்ததும் முன்வரிசையில் அமர்ந்திருந்த பெரியவர் மெல்ல எழுந்து சென்று எப்படியெல்லாம் தங்கள் காலத்தில் கூத்தாடியதையும்,இந்த ஊருக்கு பெருமை சேர்த்ததையும் எங்கெல்லாம் பாராட்டு பெற்றிருக்கிறோம் என்பதை பெருமை பொங்க பேசத் தொடங்கினார். நேரம் நீண்டு கொண்டேயிருக்க அவர் எப்படா பேச்சை நிறுத்துவார் என்று அமர்ந்திருந்தவர்கள் வெறுத்துப் போனமாதிரி தெரிந்தது. எனக்கும் நேரம் ஓடிக்கொண்டே இருந்தது. “அப்பாடா” ஒருமாதிரி மனிசன் களரியிலிருந்து அகன்றான். கலைக் கழகத்தலைவர்தான் நீங்க யாருமகன் என, என்னைப்பார்த்து வினாவினார். நான் களரிக்குள் நுழைந்து “கச்சேரியில இருந்து வந்திருக்கன். அண்ணாவியாரைச் சந்திக்க அவருட வீட்ட, போனனான் இஞ்ச இருக்கிறதாகச் சொல்லித்தான் இஞ்சவந்தனான். என்றேன்.

“அப்படியா மகன்” என கையைக் குலுக்கினாரு. அண்ணாவியாரும் முப்பத்திரெண்டு பல்லையும் காட்டினார். பின் அந்தக் கூத்துப் பற்றியும் அதன் தேவை பற்றியும் எனது கருத்தை யும் பதிவு செய்து கொண்டேன்.

சனங்கள் கலைய அண்ணாவியார் மீண்டும் வீட்டிற்கு அழைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனார். " புள்ள ஐயாவுக்கு இளநீ வெட்டுபுள்ள" என குரலை வைத்து, குடிசைக்குள் புகுந்தவர் இரண்டு 'பிளாஸ்ரிக்' கதிரையை எடுத்துவந்து முற்றத்தில் போட்டுக்கொண்டு இருவரும் அமர்ந்து கொண்டோம். சூரியன் மெல்ல மேற்கு நோக்கிச் சரியத்தொடங்கியது. அவரும் கதைக்கத் தொடங்கினார். "எங்கட அப்பா வைரமுத்து அண்ணாவி இந்த படுவாங்கர பக்கத்தில மொதலாவது அண்ணாவி. அப்பாட்ட அன்னேரம் கனக்கப்பேர் வந்துபோவாங்க எங்கட ஊடு என்நேரமும் பாட்டும், மத்தாளச் சத்தமுமாக இருக்கும். எனக்கு அஞ்சி வயதிருக்கக்குள்ள எல்லாத்தயும் கேட்டுத் திருப்பன். ஓம்பது வயதில மத்தளத்த அடிக்க அப்பாட்ட பழகித்தன். அப்பா எல்லா விசியத்தையும் எனக்கு குடுக்கணுமாம் எண்டு என்ன ஊக்கப் படுத்தினாரு. அப்படி யிருக்கக்குள்ள எங்கட அப்பாட, வைகுந்தம் வடமோடிக் கூத்தில தருமருக்கு மொதலில ஆடத்தொடங்கித்தன். எனக்கு அப்ப பன்ரெண்டு வயது. அந்தக் கூத்தில எண்ட ஆட்டம் பேர் வாங்கித் தந்தது. புறகு ராமர் நாடகம் அதுவும் வடமோடிக் கூத்துத்தான். அதில சீதக்கி ஆடினனான். உம்மயச்சொன்னா ஒரு அண்ணாவியாக வாரதுக்கு மத்தாளம், ஆட்ட மட்டும் போதாது பொம்புளக் கூத்தும் ஆடணும். பொம்புளக் கூத்தாடாட்டி ஆட்டம் நல்லாவராது. தாளம்சரியா விழாது. எனக்கு ராமர் நாடகம் நல்ல சந்தர்ப்பத்த குடுத்தது அது ஆடக்குள்ள எனக்கு பதினாலு வயதிருக்கும் சில்லிக்கொடி ஆத்திலதான் ஆடியது. இதுக்கும் அப்பாதான் அண்ணாவி. அதுக்குப்புறகு அபிமன்னன் சண்டையில சயந்தனுக்கு ஆடக்குள்ள எனக்கு இருபத்தினாலு வயது. இதுக்கு கிருஷ்ணபுள்ளயும், செல்வநாயகமும் தான் அண்ணாவிமார். 17ம் 18ம் போர் கூத்த கிருஷ்ணபிள்ள அண்ணாவியும் நானும் சேர்ந்து பழக்கி அரங்கேத்திருக்கம், இதில மகன் சுபேந்திரன் கூத்தாடத்தொடங்கித்தான். புறகு வாளவீமன் நாடகம் தென்மோடிக் கூத்த அப்பா வைரமுத்தும் நானும் சேந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுஞ்சேனயில அரங்கேத்தினம். புறகு நான் தனியப்பழக்கத் தொடங்கித்தன். எனக்கு இருபத்தாரு வயதிருக்கக்குள்ள 17ம் 18ம் போர் வடமோடிக் கூத்தத் தான் நான் மொதல் மொதலாக தனிச்சு செய்த கூத்து. அத இருமண்ட குளத்தில அரங்கேத்தியது. அதுக்குப்புறகு வள்ளியம்ம நாடகம், வீரகுமாரன் நாடகம், கண்டிராசன் நாடகம், சத்தியவான் சாவித்திரி, என பதினொரு கூத்தப் பழக்கியிருக்கன். இப்ப அல்லி நாடகம் தென்மோடிக்கூத்த உப்புக்குளத்திலயும், கண்டிராசன் நாடகத்தை வாதக்கல்மடுவிலயும் பழக்கித்துவாரன். நான் தம்பி, கூத்த ஒரு நாளும் உடமாட்டன். இது நம்மட கல, அத எல்லாரும் கவனிக்கணும். இந்தக் கூத்தில இருக்கிற விசியங்கள் கதச்சி சொல்ல ஏலா. ஆத அனுபவிக்கணும், நாங் எங்கட ஊராக்களுக்கு நல்லதச்செய்யிறத்த, நல்ல மனசை இதனால உருவாக்கிறம். அதனால மட்டுமில்ல இது நம்மட உயிர். அத காப்பாத்திறதுக்காகத்தான் பாடுபடுறம். விட்டிருக்கிறதெண்டா எப்பயோ விட்டிருக்கணும்

வாளவீமன் தென்மோடிக் கூத்த நெடுஞ்சேணயில ஆடித்திருக்கக்குள்ள எனக்கு விசலம் வருது " உண்ட மகனுக்கு பாம்பு கடிச்சித்திட்டுடா" என குஞ்சிக்கந்தர் விசலம் சொல்லக்குள்ள நடுராத்திரி ஒருமணி. மத்தளத்த உதவி அண்ணாவிட்ட குடுத்துத்து பதறியடித்து ஊட்ட வந்து சேர்ந்த போது மகனுக்கு நிலம மோசம். பக்கத்து ஊரில இருந்த விஷக்கடி வைத்தியரும் செத்துப்போய் ஒருவருசமாகுது. அவரு இருந்தா சின்ன விசியம். எத்தன உயிர்போன பாம்புக்கடியெல்லாம் புளக்க வச்சிருக்காரு. மகனத் தூக்கித்து அஞ்சி மயில் ஓடியிருப்பன். அங்கயிருந்து ஓட்டோ எடுத்து ஆரையம்பதியால போகக்குள்ள புள்ளயிட சீவன் பொயித்து. காலக்கடி தப்ப ஏலாது. அது நாக பாம்பு கொத்தினது. நான் ஊட்டில இருந்திருந்தா மகன காப்பாத்தியிருக்கலாம். இப்படியெல்லாம் இழந்துத்தான் கூத்தில ஈடுபடுறன். ஐயா" என்ற போது அவரின் கண்ணில் இருந்து நீர்த்துளி பனித்திருந்தது. அதற்குமேல் அவருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைத்திருக்க முடியல்ல. அவரின் தோளைத்தட்டி எனக்குள்ள ஆதங்கத்தை பொத்திக் கொண்டு விடைபெற எழும்ப, வயல் வெட்டைகளில் மாடுகளை மேய்த்துக்கொண்டு அவள் வீடு திரும்பும்போது இருட்ட ஆரம்பித்திருந்தது.

அன்று இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. கண்ணை மூடிக்கொண்டு படுத்தால் பால்குடியன் தலைக்குள்ளால ஓடிக்கொண்டே இருந்தான். சே! நாம எல்லாம் என்னத்தச் சாதிக்கிறம். இந்தத் தொழில் மூலம் எவ்வளவு செய்யணும், நான்தான் அவரைப் பார்க்க வந்த ஒரு ஒப்பிசர் எண்டு மிகச்சந்தோசப்பட்டான். காட்டுக்குள்ள அவனின் ஆற்றல் முடங்கிக்கிடக்கு வெளி உலகத்துக்குக் காட்டாமல். மிக நிதானமாக இருக்கும் அவரை நினைத்தால் பெருமையாக இருக்கிறது. மாறாக ஏசிரூமுக்குள்ள இருந்து கொண்டு பலதும் பத்தும் கதைப்பதுமட்டுமல்ல குடிகாரர்கள், படிப்பறிவற்றவர்கள் இன்னும் பல அடைமொழிகளையும், பட்டங்களையும் வழங்குபவர்களை என்னென்று நாம் சொல்லி அழைப்பது. படித்தவர்கள் இந்த வல்லமையை புரிந்தால் சரி சாமியோய்.

25.11.2012

**கிண்ணையடி**

**பயணம் காலை 8.00 மணி**

வீமன், கதாயுதத்தை ஒத்த விரலால் சுற்றியெடுத்து களரியை சுற்றி ஆடிவந்தான்

துரியோதனை அழிப்பேன் நாடு நகரம் எங்களுக்கு கிடைக்கணும் இல்லையேல் மாண்டுபோவோம் ஓ... கவலைப்படாதே... பெண்ணே! உன் கூந்தலை முடிய துரியோதனன் தொடையைப் பிளந்து பெண்ணே உதிரத்தை உன்கூந்தலில் வாரி இறைப்பேன் பார்... தா... தெய்யத்..தா.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களரியில் உக்கிரமான ஒத்திகை நடந்து கொண்டிருந்தது. வீமன் கந்தையா என்னைக் கண்டதும் அருகில் வந்தார். நாளைக்கு நடக்கப் போகும் கூத்து ' துரியோதனன் சண்டை' நாற்பதாவது களரி ஏறப்போகும் செய்தியைச் சொன்னார். எனக்கு வியப்பாகயிருந்தது. மீண்டும் தொடர்ந்தார். "இஞ்சால, இந்த நேரத்தில" எனக்கேட்டார். அண்ணாவி மாநாடு பற்றிச்சொன்னேன். "அதில உங்களப்பத்தியும் சிறுதகவல் வரப்போகுது அதுதான் தகவல் எடுக்க வந்தனான். அடுத்தமுறவார களப்பில விரிவாக வரும்" என்றன். 'சரி தம்பி' என எல்லாவற்றையும் சொன்னார். தனது சிறுவயதில் கூத்துப்பார்க்கப்போன சங்கதி தொடக்கம், தகரப்பேணி, தொடை, வயிற்றில மத்தளம் அடிக்துப் பழகிய கதைய ஓயாது சொன்னபோது பொழுது உச்சத்திற்கு வந்திருந்தது. நான் அவரிடம் வேறு அண்ணாவிமார்களைப்பற்றி விசாரித்தேன். பூலாக்காட்டில இருக்கிற சௌத்திரியை பற்றிச் சொன்னார். "இப்பதான் கொஞ்ச நேரத்துக்கு முதல் போனவர், துரத்திப்போனிங்கலெண்டா வோக்கடிளில அவங்கட அக்காட வீட்டில இருப்பார். இல்லண்டா கடயடியில பாருங்க இல்லாட்டி துறையடிக்குப் போனீங்கலென்றா ஆளப்புடிக்கலாம்" என்றார்.

"சரியப்ப நாங்க புறப்படுறம்" என, அவரும் தலையாட்டினார்.

சிவாவை பின்னுக்கு ஏற்றித்து வோக்கடிக்கு அவரிட அக்காட்ட விசாரித்தபோது 'இப்பதான் போறாரு'

"என்ன சேட்டுப் போட்டிருக்காரு" என்று கேட்டேன். "நீலச் சேட்டுப் போட்டிருக்காரு, தலை மொட்டையாக இருப்பாரு" என்றார்.

சரி சந்தியில இருக்கிற கடயிலசௌந்தரி வந்தவரா? என விசாரித்தேன். "ஓம்..ஓம் இந்தா இருக்கின்ற சைக்கிள் அவரிடமாதிரி இருக்கு என அக்கம் பக்கமெல்லாம் தேடினான் கடைப்பொடியன். "சீ... காணல இப்ப நிண்டவர்.. கெதியாப்போன ஆள துறயடியில புடிக்கலாம்" என்றான். மோட்டார் சைக்கிளை மிக வேகமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறுக்கினேன். அசுரனாக இராணுவமுகாம் எனக்கு முன் நின்றது. முகாமிற்குள்ளால திறந்து விடப்பட்டுக்கிடக்கும் ஒற்றையடிப் பாதையால போனோம். தூரத்தில் தோணி இரண்டு புணையப்பட்ட ஓடத்தில் சைக்கிள்களும் ஆட்களும் ஏறுவது தெரிந்தது. எல்லாம் சினிமா கிளமக்ஸ் போலத்தான் நடப்பதாகவே சிவா பேசினான். 'கோனை' அழுத்தி சத்தமிட்டு மோட்டச்சைக்கிள் பறக்க தோணிக்காரன் கரையிருந்து மெதுவாக ஓடத்தை நகர்த்தத் தொடங்கினான். சௌந்தரி யாரு என சத்தமிட்டுப் போனேன். நான்தான் என அறுபது மதிக்கத்தக்க நபர் இறங்கினார். "அண்ணன் உங்களோட கொஞ்சம் கதைக்கணும்" என்றேன். "அப்படியா தோணியில சைக்கிள ஏத்தித்தன் சரி தம்பி சைக்கிள அங்காலக் கரயில இறக்கி வைங்க நான் மற்றத் தோணியில வாறன்" எனச் சொல்லித்து என் அருகில் வந்தார்.

"ஆருதம்பி நீங்க என்ன விசயமாகத் தேடுறீங்க?" எனக் கேட்டார். அண்ணாவிமார் மாநாடு பற்றிச் சொன்னேன் அவரிடம்.

"அப்படியா நல்ல விசயம், உங்களப் போல ஆக்கள் தான் செய்யணும் தம்பி! நம்மட கலய காப்பாத்தணும். இப்ப இருக்கிற பொடியனுகள் பொடிச்சிகளுக்கு இந்தக் கூத்துப்பற்றி ஒரு இளவும் விளங்குதில்ல. காதுக்குள்ள இந்த செல்போன வச்சா ஒரு மண்ணும் தெரியிதுமில்ல மகன். என்னத்தக் கதக்கிதுகளோ தெரியாது, விடிய விடிய கததான். நாங்க விடிய விடிய ஆடுறம். இந்தப் புள்ளக்கிளயல் விடிய விடிய கதக்கிதுகள். டவுனில வேறுவேறு ஆட்டமெல்லாம் வந்திருக்காமே. அந்தக் காய்ச்சல் இஞ்சாலயும் பரவியிருக்கு. இத சும்மா விட்டுத்துயிருந்த மெண்டா நம்மட கலய அதுகள் விழுங்கிடும் இதுகளுக்கும் வேல பாக்கணும் தம்பி. நம்மட ஊரில இருக்கிற கலைகளை படிப்புல கொண்டு வரணும். இந்தியாவில இருக்கிறத்தெல்லாம் இங்க கொண்டு வந்து பழுதாக்காம இதுக்கு வேல பாருங்க தம்பி நாங்களும் உங்களோட வருவம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அண்ணன் எனக்கு உங்கட கோபம் புரியுது. இந்த மாநாட்டில ஒரு தீர்மானம் எடுத்து ஜனாதிபதிக்கு அனுப்புவோம்." என்றேன் அது கிடக்கட்டும் நீங்க எப்படி கூத்துக்குள்ள வந்தனீங்க? என்று கேட்டேன். " நான் தம்பி சின்னவயதிலேயிருந்து அப்பா அண்ணாவியாக இருந்ததால எண்ட உடம்புக்குள ஏறித்து. அப்பாட்ட மத்தாளம் அடிக்கப்பழகி, கூத்தாடி எண்ட பதினெட்டாவது வயதில் தனிய கூத்த அரங்கேத்தித்தன். அதுக்குப்புறகு ஒவ்வொரு வருஷமும் கூத்துப் போடுறம். குழப்பத்துக்குள்ள இடம் பேந்து போன வருஷம் தான் கூத்துப்போடல. அந்த இடம்பேந்ததால எண்ட அறுபது கூத்துக் கொப்பி, மத்தாளம், சலங்கைக் கூட்டமெல்லாம் துலஞ்சித்து. கூத்துக்கொப்பிய ஆமிக்காரன் எறிஞ்சிவச்சிருந்தான் அது மழயிலயும் வெயிலிலயும் கிடந்து பழுதாப்பொயித்து. அதில புறக்கின ரெண்டு மூணு கொப்பியை வீமரிட்ட குடுத்திருக்கன் எழுது றதுக்கு. தம்பி! வாற கிழம " மயில் ராவணன் சண்ட கூத்திருக்கு பாக்க கட்டாயம் வரணும். ராவணன்தான் இப்ப நமக்குத்தேவ. அவண்ட ஞாயத்த ஆரும் கவனத்தில எடுக்கிறாப் பில்ல. எல்லாத்துக்கு எடுத்தாலும் சீதய கடத்தினவன், அது ஒரு வாய்ப்பாடு. அதனால்தான் அவண்ட ஞாயத்தையும் கதைக்கணும். அதனாலதான் இந்தக் கூத்த ஆடுறம் என்றார்.

அவரிடமிருந்து விடை பெற்றபோது எனக்கு களைப்புக் கூடியிருந்தது. மண்டை பாரமாக இருந்தது. சற்று நகர்ந்து சந்திக் கடைக்கு வந்த போது முதல் நாளிரவு நடந்த சங்கதியை தெருமுனை டீகடையில் உற்சாகத்துடன் பேசிக்கொண்டனர். நாங்க காதில போட்டுக் கொள்ளவில்லை. எனக்கு அண்ணாவியம் மலர் பற்றியும், மாநாடு பற்றியுமே நிறைந்திருந்தன. சிவாவை ஏறாவூரில் இறக்கிவிட்டு வீடு வந்தடையும் வரை மழை பொடுக்கு... பொடுக்கென தூறிக் கொண்டே இருந்தது.

என்னால் இருக்கையில் அமர முடியவில்லை. எழுந்து யன்னல் பக்கத்தில் போய் நின்று கொண்டேன். இரண்டு பக்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பிகளைப் பிடித்துக்கொண்டு வெளியே இருந்து மோதிவந்த காற்று என்னைத் தடவி விட்டுப்போனது. கொந்தளிப்பு சற்று அடங்கியிருந்தது. மாநாட்டில் பல தீர்மானங்கள் எடுக்கவேண்டி யிருக்கின்றன. முதல் பிரச்சினை மத்தளத்துக்கு தோல்எடுப்பதுதான் பெரிய பிரச்சினை யாகவுள்ளது. மரைத்தோல், மான்தோல், குரங்குத்தோல், எப்படி எடுக்கிற? சட்டம் கூட கூத்திற்கு எதிராகத்தான் இருக்கு.

பத்துப்பக்கம் கொண்ட மகஜரை நிறைவு செய்தேன். மீண்டும் மீண்டும் வாசித்துப் பார்த்தேன். மெல்லிய மகிழ்வு அடிவயிற்றி லிருந்து எழுந்தது. அது உடல் முழுதும் பரவ மெல்லக் கண்மூடினேன்.

*-2011-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாசெ: எதிர் - விசாரணை அறிக்கைகளும் தீர்வுகளும், ஆலோசனைகளும்

'மாசெ' யை அழிப்பதற்கான திட்டங்களை அவர்கள் மிகக் கச்சிதகமாகச் செய்திருந்தார்கள். இத்திட்டத்திற்கு அவனது மடத்தனங்களும் அவர்களுக்குக் கைகூடியிருந்தது. எப்படியிருந்தாலும் அவன் நிரபராதி என்பதை நிருபிக்க வேண்டியதாயிற்று. இது அவனது முதல் அனுபவமாகியதால் பதட்டம் அவனை ஒவ்வொரு தீர்வுக்கும் தள்ளிக்கொண்டே இருந்தது. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இருந்தும் நம்பிக்கையும் துணிவும் அவனைக் காற்றில் பறக்க வைத்தது.

விசாரணைக்காக அழைக்கப்பட்டபோது மதியம் ஒரு மணியைத் தாண்டிவிட்டது. வயிறு பற்றியெழுந்தாலும் பசியெடுக்கவில்லை. களைப்புக்கூடியிருந்ததால் சிறு நடுக்கம் உடல் முழுதும் எழுந்தது. "உட்காரு" என அந்த அதிபர் கூறினார். அப்போதுதான் அந்த அறையை ஏறெடுத்துப்பார்த்தான். நடுவில் அந்த அதிபர் அமர்ந்திருந்த வலப்பக்கம் முன்னாள் மாவட்ட நீதிபதியும், இடப்பக்கம் தொழில் அமைச்சின் செயலாளரும் அமர்ந்திருந்தனர். அவனால் வணக்கம் சொல்லக்கூட "நா" எழவில்லை. அமர்ந்து கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உனக்கெதிரான கண்டன அறிக்கையையும் எதிர்வினையையும் படித்துப்பார்த்தாயா?" முன்னாள் மாவட்ட நீதிபதி கேட்டபோது அவன் இல்லையெனத் தலையை அசைத்தான். அந்த அதிபரும் செயலாளரும் வியப்பாகப் பார்த்தார்கள். அந்த அதிபர் தன்னுடைய அழைப்பு மணியை அடித்து "பியோனிடம்" இரு பேப்பரைக் கொடுத்து "போட்டோக்கொப்பி" எடுத்து அவனிடம் கொடுத்தார். அவன் ஆறுதலாக வாசித்தான். குளிரூட்டப்பட்ட அறையிலும் அவனுக்கு மெல்லத் துளிர்த்தன வியர்வைத் துளிகள்.

கடிதம் இரண்டும் வாசித்து முடிக்க அவனுக்கு ஒரு மணித்தியாலமும் 59 செக்கனும் பிடித்தது. இரு கடிதங்களும் சலிப்பை ஊட்டின. "பி.செ"யின் கண்டன அறிக்கையின் அறியாமையையும், அனாமேதய கடிதத்தின் பொறாமை உணர்வையும் அதே நேரமும் இரு கடிதமும் ஒரே நபரினால் தீட்டப்பட்டிருக்கும் புதிரும் அவனுக்கு புரியலாயிற்று. எல்லாம் அந்தக் கோகர்ணனின் வேலைதான் என்பது தெரிந்தது.

"பி.செ"யின் தலைமையில் இயங்கும் ஒரு கலாசார பேரவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓவியரை எப்படி நீ நிராகரிக்கமுடியும்? அது மாத்திரமின்றி பகிரங்கமேடையில் இதுபற்றி நீர் எப்படிப் பேசலாம்? முன்னாள் நீதிபதி அவனைப்பார்த்துக் கோட்டார். விசனத்தை ஏற்படுத்தும் கேள்விகளால் எத்தனையோ சுற்றவாளிகளையெல்லாம் குற்றவாளிகளாகத் தண்டித்தாரோ தெரியவில்லை அவனுக்கு. ஆனால், அவன் சுற்றவாளி. குறுக்கு விசாரணை அவனைக் குற்றவாளியாக மாற்றவே அடியெடுத்து வைக்கிறது.

சிறிது நேரம் மௌனம் காத்தவன். அதிகாரங்கள் எப்பொழுதும் நேர்கோட்டில் இயங்குவதில்லை. தன்சுயத்திற்கும், சுயநலத்திற்கும் வளைந்து கொடுத்தே பயணிக்கிறது அல்லது பயணித்திருக்கிறது. எப்போதும் எந்த முடிவும் சரியானதாக இருக்கும் என நாம் கருத முடியாது. குழுவோ, தனிமனிதரோ எடுக்கும் எல்லாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானங்களும் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் நல்ல முடிவாக அமைந்திருக்கின்றனவா? எத்தனையோ உதாரணங்களை நாம் அடித்துக்கொண்டே போக முடியும். "மா" செயலகம் கொடுக்கும் விருது வழங்கலையும் வெறுத்தேன். இது எனது தனி முடிவு பிழையானதாக இருக்கலாம். ஆனால் அது எனக்குச் சரியாகப் பட்டது. ஏதோ பெயர் அடிபடாத, அவர்களுடைய புத்தகத்திற்குச் சின்னம் வரைந்தாராம் என்பதற்குப் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தும் ஓவிய குழாமே இங்கிருக்கத் தனிப்பட்ட முறையில் ஒரு ஓவியக் கண்காட்சியை நடத்தாத ஒரு மனிதரைப் பாராட்டுவதும் விருது வழங்குவதும் எத்தனை தகும் சொல்லுங்கள் ஐயா? தகுதியானவர் நிறைந்திருக்க, அவர்களை விடக் குறைவான தகுதியுடையவரைப் பாராட்டினால் இதைவிட அவமானமும், எதிர்ப்புப்போராட்டத்திற்கும், கண்டன அறிக்கைகளுக்கும் யார் முகம் கொடுப்பது?

"மாசெ" பேரவையில் பத்து வருடங்கள் செயலாளராகக் கடமையாற்றியதின் பேரில் பதாதை எழுதும் ஒருவரைக்கூட அவர்கள் பாராட்ட முனைந்தார்கள். நான் எதிர்ப்பைத் தெரிவித்தேன். இச்செய்தி அவருக்குப் போய் அவர்கள் இன்றும் என் முகத்தைக் கூடப்பார்ப்பதில்லை. இப்படித்தான் இதுவும். பலதும் பத்தும் கதைக்கும் போது இச்செய்திப் பற்றியும் கதைக்கப்பட்டது. அது பத்திரிகைச் செய்திக்காகவில்லை. இப்போது அவனுக்குப் படபடப்பு அடங்கிவிட்டது. எது நடந்தாலும், எப்படி நடந்தாலும் அது பற்றிக் கவலை இருக்கவில்லை. முன்னாள் நீதிபதியின் கேள்விகள் சிரிப்பைத்தந்தன. அவனுக்கு இவர்களுடைய உச்சத்தண்டனை அவனை இடமாற்றலாம் அல்லது வேலைக்கு ஊறுவிளைவிக்கலாம். இதைவிட என்னதான் செய்ய முடியும்? அதனால் அவன் பயத்தைத்துறந்தான். "நீர் பேரவையின் முடிவைத் தவறு என்று கூறுகிறீரா?" தொழில் பெறு செயலாளர் வினவினார். "ஆம். அதில் இருப்பவரில் பலர் எழுத்தாளர்களில்லை, குட்டையைக் குழப்புவதற்காகவும், எனது தனிமனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பாட்டை பேரவையில் கூட்டுச்சேர்ந்து கூடிக்கலைந்து போபவர்கள் செய்ய முடியாததை நான் செய்வதனால் ஏற்பட்ட காழ்புணர்ச்சியும்தான் இது. இதைவிட நான் எதுவும் சொல்லத் தயாரில்லை.

"பேரா பற்றிய குற்றச்சாட்டுக்கு என்ன சொல்லப் போகிறீர்கள்?" தொழில் அமைச்சின் செயலாளரின் விக்கல் கேள்வி என்னுள் ஆத்திரத்தை உண்டு பண்ணியது.

கருத்தை கருத்தால் எதிர்கொள்ள முடியாத அற்பங்களின் அனாமேதய பீ நாற்றத்தைக் கிளறுகிறீர்கள். நான் எவரையும் எச்சந்தர்ப்பத்திலும் தள்ளிவிடுபவனல்ல. களப்புச்சஞ்சிகையின் ஆசிரியர். ஆனால், அதில் வரும் எல்லாப்படைப்புகளுக்கும் பதில் சொல்லும் நிலையில் தற்போதில்லை. பேரவை மதிக்கும் மனிதர்களில் நானுமொருவன்.

ஆனால் அவர் விடும் தவறுகளையோ, பிழையான வழிநடத்தல்களையோ மற்றவர்கள் போல் பார்த்துக் கொண்டிருப்பவனும் அல்ல. அவர் முன்னே என் விமர்சனங்களை முன்வைத்திருக்கிறேன். இந்தக்களப்பில் வந்திருக்கும் எல்லாக்கட்டுரைகளும் பேராவிற்கு எதிரானதாக, வேண்டுமென்று செய்யப்பட்டதாக தெரிவிப்பது அவர்களின் வாசிப்பின் போதாமையையே சுட்டுகிறது. அண்ணாவியார் பாரம்பரியம் பற்றிய கட்டுரை கூத்தின் முக்கித்துவத்தையும் அண்ணாவிமார் பற்றியும் விவரிக்கிறது. கூத்தைச் சிதைப்பவர்கள் பற்றியும் அதில் விமர்சிக்கப்பட்டிருக்கிறது. பேராவின் "ப.பு" புத்தகத்தில் அவர் கூறும் முரண்பட்ட சில கருத்துக்களை இது சிலாகிக்கிறது. அதைநான் "எடிற்" செய்யவேண்டிய தேவைப்பாடிருக்கவில்லை.

"தனி மனிதனைத் தாக்கும் போது 'எடிட்' செய்யவேண்டியது ஆசிரியரின் கடமையல்லவா?" முன்னால் நீதிபதி குறுக்கிட்டார்.

"அப்படியல்ல. நீங்கள் பழைய பஞ்சாங்கத்தின் ஆசிரியர்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடுகிறீர்கள், இங்கு எச்சந்தர்ப்பத்திலும் "பேராவைத் தாக்கவில்லை". அவர் எழுதிய எழுத்து விமர்சிக்கப்படுகிறது. அவ்வளவுதான். இதற்குப்போய் பேராவை விட, நான் உயர்ந்தவனாகக் காட்ட முயன்றிருப்பதாகக் கூறுவது முட்டாள்தனம். இவ்விடத்தில் நான் ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன் பேரா சம்மந்தப்பட்ட மிருச்சகடி நாடகம் பற்றி, நாடகம் முடிந்த அதே கணமே அந்த நாடகத்தின் பிழையாகக் கட்டமைப்பையும், சிங்கள ஊடுருவலையும், பெண்ணியத்தைத் தகர்க்கின்ற முட்டாள்த் தனத்ததையும் சூடாக முன்வைத்தேன். அவர் வேறு நியாயத்தைச் சொன்னர். முருகனின் இரு திருமணத்தை நியாயப்பாட்டிற்கு கொண்டு வந்தார். சிறிது நேரம் சலசலப்பாக இருந்தது. எனினும் நாங்கள் எச்சந்தர்ப்பத்திலும் அடிபட்டுக் கொண்டதில்லை. பிரச்சினையின் கணத்திலே எதிர் எதிரே போர் செய்வோம். பின்னர் அதை அக்கணத்திலே மறந்து விடுவேன். அவர் எப்படியோ தெரியல்ல? ஆனால் என்னுடன் முகம் மலர்ந்து பழகுவார்".

விசாரணை முடிந்தது. சூடுபரவியிருந்த அறையிலிருந்து மாசெ மிகச்சந்தோசத்துடன் வெளியேறி வந்தான்.

மா.செ யின் விசாரணையை முடிவிற்கு கொண்டுவந்த அ. அதிபர், முன்னாள் நீதிபதி, தொழில் செயலாளர் ஆகியோர் அறிக்கையையும் ஆலோசனையையும், முதலமைச்சருக்கு அனுப்புவதற்காக கலைஞர்கள் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பி.செயலாளர்கள், பத்திரிகையாளர்கள், பேராசிரியர்கள், கலாநிதிகளை அழைத்துக் கருத்துபரிமாற்றங்கள் செய்து தீர்க்கமான தீர்வினையும் ஆலோசனைகளையும் முதல் அமைச்சருக்கு முன்வைத்தார்.

1. பிரதேச செயலகங்களில் இயங்குகின்ற கலாசார பேரவை வெறுமனே ஒரு வருடத்தில் ஒரு நாள் நடைபெறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவிழாவிற்கு மாத்திரம் இயங்காது. அது தொடர்ச்சியாக பிரதேச பண்பாட்டுத் தளத்தில் அழியும் விளிம்பிலிருக்கும் கலைகளை மேல்தளத்திற்கு கொண்டு வருவதற்கு பாடுபடவேண்டும். இணைப்பாளர்களாக அல்லது பேரவையின் செயலாளராக கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தங்கள் பொறுப்புக்களையும் கடமைளையும் அர்ப்பணிப்புடன் செயற்படுத்த அவர்களை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செயற்படாமல் காலம் தள்ளுவார்களானால் மேற்படி உத்தியோகத்தரை இடமாற்றம் செய்யப்பட வேண்டும். அல்லது அவர்களுக்கு ஏற்ற உத்தியோகத்திற்கு இணைந்து விடவேண்டும். பேரவை உறுப்பினராக இணைக்கப்படுபவர்கள், கலை இலக்கிய நாட்டாரியல், தொல்லியல் போன்ற துறைகளில் விற்பனராக அல்லது அத்துறையோடு இயங்குபவர்களாக இருக்க வேண்டும். அத்தோடு அர்ப்பணிப்புச்சிந்தை, வேலைப்பளு அற்றவராக, சமூகம் சார்ந்த சிந்தனையாளராக, கலை இலக்கியத்தை காப்பவராக இருக்க வேண்டும். இதற்கு மறுதலையாக புகழுக்காக, பதவிக்காக கதிரைகளை சூடேற்றுபவர்களை எச்சந்தர்ப்பத்திலும் உறுப்பினர் களாக நியமிக்கக்கூடாது. உறுப்பினராக நியமிக்கப்படுபவர்கள் கூட்டத்திற்குச் சமுகமளித்தால் படி வழங்கப்பட வேண்டும்.

2. மா.செயலகத்தில் இயங்கும் பேரவை, பி.செயலகங்களில் இயங்கும் பேரவையிலிருந்து உறுப்பினர்களை உள்வாங்கிக் கொள்ளவேண்டும். இருபதிற்கும் இருபத்தியைந்திற்கும் உட்பட்டதாக உறுப்பினர்கள் அமைய வேண்டும். ஒவ்வொரு உறுப்பினர்களையும் தெரிவு செய்வதோடு "மா"செயலகத்திற்கு அருகிலுள்ள பிரதேச செயலகங் களிலிருந்து மேலதிகமாக ஐந்துபேரையும், பல்கலைக்கழகத்திலிருந்து குறிப்பாக தமிழ்த்துறை, நுண்கலைத்துறை, வரலாற்றுத்துறை அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லியல் துறையிலிருந்து தலா ஒவ்வொரு பேராசிரியர்களையும் நியமிக்க வேண்டும். அப்போதுதான் இப்பேரவை சிறப்பாக இயங்க வாய்ப்புள்ளது.

3. பிரதேச செயலக மட்டத்தில், மா.செயலக மட்டத்தில் தகுதியில்லா தவர்களை விருதுக்கு பரிந்துரைக்கக்கூடாது. விழாவில் பாராட்ட வேண்டுமென்று, கலைகளைச் சிதைப்பவர்களுக்கும், பொய்ப்பேர் வழிகளுக்கும் பாராட்டும் விருதும் வழங்கும் பட்சத்தில் உண்மையாகவும் கலைக்காகவும் தங்களை அர்ப்பணிப்பவர்கள் உதாசினம் செய்யப்படுகிறார்கள். இது அவர்களை விரக்திக்கு இட்டுச்செல்லும். கடந்த காலங்களில் கலாபூசணம், முதலமைச்சர் விருதுகளில் இவ்வாறான கொடுமை நடந்துள்ளதாக எமது விசாரணை மூலம் அறியக்கிடக்கிறது. விருதுகளைச் சிபார்சு செய்து அனுப்பும் அதிகாரிகள், கரிசனையுடன் ஈடுபட வேண்டும். தெரிந்தவர், சொந்தக்காரரர் என்ற பாகுபாட்டிற்குள் விழுந்து விடாது, பிரதேசத்தில் இருக்கும் தகுதி கூடியவரை இனம் காணப் பட்டு பலநிலை விவாதத்தின் பின் இறுதித்தேர்வுக்கு வரவேண்டும்.

4. புத்தகங்கள், ஆண்டுமலர்கள் வெளியிடும் போது பொறுப்பு வாய்ந்த ஆசிரியரும் மலர்க்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டு இயங்கவேண்டும். பேருக்கான மலர்க்குழுவாக இராது அவர்கள் அர்ப்பணிப்புடன் கட்டுரை, படைப்புக்களின் மீதான தரநிர்ணயத்தை விவாதித்து பிரசுரத்திற்கு கொண்டுவர செயற்பட வேண்டும். இதுவரையும் பெயருக்கான மலர்க்குழுவே விசாரணை மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இது இனிவரும் காலங்களில் தவிர்க்கப் படவேண்டும். காத்திரமான மலர்க்குழுவாக இருந்தால் வீண் பிரச்சினைகளும், பழிவாங்கல் சம்பவங்களும் நடவாது.

5. விருதிற்காகப் பரிந்துரைப்பவர் அவ் விருதுக்குத் தெரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப் படாவிட்டால் அதற்கான காரணம், நியாயப்பாடு ஆகியவற்றை உரிய நபருக்கு அனுப்புவதோடு உரிய ஆண்டில் விருதிற்கு தேர்வானவர்களின் புள்ளிகளையும் தேர்வு நடைபெற்ற நடைமுறை களையும் பத்திரிகை வாயிலாக பகிரங்கப்படுத்த வேண்டும்.

6. தேர்ச்சியான கலைஞன் (அண்ணாவி போன்றவர்) எழுத்தாளர்கள், கவிஞர்கள் தகுதியிருந்தும் அவர்களிடத்தில் சில நேரங்களில் ஆவணங்கள் இல்லாமலிருக்கலாம். கூத்துச்செயற்பாட்டில் ஈடுபட்ட அண்ணாவி துண்டுப் பிரசுரம், புகைப்படங்கள் போன்றவற்றை தொலைத்திருக்கலாம். அதுபோல் எழுத்தாளர்கள், கவிஞர்கள், பத்திரிகைகள் சஞ்சிகைகளில் எழுதுபவர்களாக இருக்கலாம். வறுமை காரணமாகப் புத்தகங்கள் போடமுடியாத சூழல் இருக்கலாம். அதனால் புத்தகங்கள் மட்டும் வெளியிட்டவர்களையோ சந்தர்ப்பவசத்தால் (அரசியல் செல்வாக்கு காரணமாக) கோவில்கள், கலைக்கழகங்கள், பாடசாலைகளில் பாராட்டப்பட்டவர்களை மாத்திரம் கவனத்தில் கொள்ளாது கலைஞனின், படைப்பாளியின் திறனைக் கணிப்பிட்டு விருது வழங்க வேண்டும். கடதாசித் தகமைகளை மட்டும் கருத்தில் கொள்வது இலக்கியத் துரோகமாகிவிடும்.

7. மாவட்டமட்ட, பிரதேசமட்ட விழாக்களுக்கும் கலைமேம்பாட்டிற்கும் ஆண்டிற்கான வரையறுக்கப்பட்ட பண ஒதுக்கீடு இடம்பெறவேண்டும். இதற்கான திட்டவாரியத்தை ஏற்படுத்தி நிதியத்தை உருவாக்குவதற்கான வழிமுறைகளை உரிய அதிகாரிகள் கண்டடைய வேண்டும்.

8. அர்ப்பணிப்புடன் இயங்கும் உத்தியோகத்தர்மேல் அபாண்டமான குற்றச்சாட்டுக்களை முன்மொழியும் அல்லது "பிட்டிசம்" போடும் நபர்களைக் கண்டறிந்து உரிய தண்டனைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய ஆலோசனைகளையும் தீர்வுகளையும் தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.

இப்படிக்கு
உண்மையுள்ள

*01.* *அ.அதிபர்.*
*02.* *முன்னாள் மாவட்ட நீதிபதி.*
*03.* *தொழில் அமைச்சின் செயலாளர்.*

குறிப்பு: கோகர்ணன் பற்றிய கதை அடுத்த சிறுகதையில் எழுதப் படவுள்ளதால் இக்கதையாடலில் கோகர்ணனின் பொய்த்தோற்றம் தவிர்க்கப்பட்டுள்ளது.

*-2015-*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தக்கையனின் நாட்குறிப்பேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட நான்கு கதைகள்

இந்தக்கதை பற்றி நீங்கள் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. எனது ஆய்வுக்காகத் தேடப்பட்ட பல்லாயிரக்கணக்கான கதைகள் என்னுள் ஜீரணித்துவிட்டன. இரண்டு மூன்று வருடங்களைத் தின்று தீர்த்த ஆய்வு முழு உலகத்தினுடைய கதவுகளையும் திறப்பதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எனக்குத் தந்திருக்கிறது. நான் ஆஃப்ரிக்கா தனது சூரியனைக் கொல்கின்றது - கென்சரோ விவா வினுடைய கதைகளைக் கூட ஆராய்வதற்கு நைஜீரியாவை மேய்ந்திருக்கிறேன்.அது மிகத் துக்கமானது. சரோவிவா தூக்கிலிடப்பட்ட போது நான் அவரைப் பார்த்தேன். சற்று முன்னர் தான் அவன் நாட்குறிப்பினை என்னிடம் நீட்டினான். நான் அப்போது படிக்கவில்லை. உக்கிப்போனமெது மெதுப்பான கடதாசியை ஒத்ததாக அவையிருந்தன. மிகக்கவனமாக பிரித்தெடுக்க வேண்டியதாக இருந்ததனாலும் சரோவிவாவின் மரணமும் தக்கையனின் நாட்குறிப்பை பிரிப்பதற்கான நாட்களைத் தள்ளித்தள்ளிப் போட்டுவிட்டன. இன்று தான் அது வாய்க்கப் பெற்றிருக்கின்றது.

காடுகளில் நாற்றம் மணத்து ஊரைக்கூட்டியது. பல காலங்களுக்கு முன்பே செயலிழந்து போன சண்டியர்கள் மீண்டும் துளிர்க்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிவிட்டார்கள். கெட்ட சகுனமாகவே ஊர் சந்து பொந்துகளில் கதைகள் வானைப்பிளந்தன. ஊர் எவர் பொருட்டும் அக்கறையற்று தன்னந்தனியாகவே நடந்து திரிந்தது. ஆக்கிரமிப்புக் காரர்கள் உருவிழந்த முகத்தினை புதுப்பித்து வெல்ல முடியாத மனங்களை வெல்ல எத்தனித்தர். வார்த்தை ஜாலங்களை ஏற்ற இறக்கம் காட்டும் அவர்களின் தந்திரங்களுக்கு மயக்கம் கொள்ளும் மனிதர்களின் அறியாமையை பெருவழுதி நினைத்து, துக்கம் கொண்டான்.

பெருவழுதிக்கு பயித்தியம் என்றனர். அவன் அது பற்றி எந்தக் கவலையுமின்றி காலற்று நடந்து திரிந்தான். பேய்களின் ஊழிக்கூத்தினை நமிட்டுச் சிரிப்புடன் அவன் மோனப்பார்வையில் கழிக்கத் தொடங்கி னான். கூக்குரலிட்டு சந்தியில் வேள்வித்தீயை மூட்டி பெருநாக்குகளை சுமந்து கொண்டு திரிந்தன பேய்கள். அவனின் செயலை நிறுத்துவதற்கு பலப்பல யுகங்களில் நடந்திருக் கின்றன. சோரம் போகின்ற சமூகத்தை அவன் எப்பொழுதும் ஏற்கவில்லை. தன்மானத்தைப்பற்றி பல தடவைகள் பேசியிருக் கிறான். அதனால் அவன் அனுபவிக்காதது ஒன்றுமில்லை.

பெருவழுதிக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவனின் சுடுகலன் அனுமதிப் பத்திரமற்றது முன்னர் அவர்கள் பறித்துச் சென்றுள்ளனர். இச்சுடுகலன் கிருஷ்ணபரமாத்மா அருளியதாகவே அவர்கள் கதைபரப்பிக் கொண்டேயிருந்தார்கள். கிருக்ஷ்ணர் பற்றி பெருவழுதிக்கு நல்ல அபிப்பிராயம் ஒரு நாளும் இருக்கவில்லை. அவன் பொம்புளக் கள்ளன், பொய்யன், பித்தலாட்டக்காரன். இந்தப்பிரமை எப்போதும் அவனுக்கு இருந்து கொண்டேயிருந்தது. பெருவழுதி இது பற்றி தன் மனைவியிடம் சொல்லியிருக்கிறான். அவள் அக்கணமே பேரோசையை எழுப்பி ஏழாயிரம் அலைகளை உருவாக்கினாள். அது வடக்கு கிழக்கு தெற்கு,மேற்கு என எல்லாத்திசைகளும் புரண்டோடின ஊரெல்லாம் இரும்புக்கொள்ள முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதாசிகள் இறக்கை கட்டிப் பறக்கத் தொடங்கினர். அவளுடைய பேரோசை எழுப்பும் நோய்மை எவ்விதத்திலும் குறைந்திருக்க வில்லை.

தசாவதாரம் என்று ஊர் மணக்கத் தொடங்கியது. நெய்வாடை கலந்த ஒரு நறுமணமாக அது படர்ந்தது.

கிருஷ்ணர் அந்தரத்தினின்று உலகத்தைக் குடிப்பதாக அவள் கூறினாள். பெருவழுதி கையை அவள் தலையில் வைத்து தணித்தான்.

அவள் எதற்கெடுத்தாலும் சாமிக்குற்றம் வந்திடும், சாமி தண்டிற்கும் எனப் பயந்து கொண்டேயிருப்பாள். அவன் எவ்வளவு சொன்னாலும் கேட்கமாட்டாள். பிள்ளைகளுக்கு காய்ச்சல் வந்தால் அதுவாங்கித் தருவேன். இது செய்வேன் என நேர்த்திக் கடனுக்கே அவனுடைய சம்பளம் சரியாகிவிடும். ஊரில் எல்லாத் தெருக்களிலும் கோவில்கள் நிரம்பிக்கொண்டிருந்தன. ஐயர்களின் தொகை அதிகரிக்கத் தொடங்கி யது. சரியாக சமஷ்கிருதத்தை உச்சரிக்கத் தெரியாதவர் கெல்லாம் பூநூலை அணிந்து பிராமணராக வேஷம் தரிக்கத் தொடங்கிவிட்டனர். பூசாரிகள் ஊரைவிட்டு புறப்பட நினைத்தனர். யாருக்கும் இருக்க விருப்பமில்லை. சடங்குக் கோயில்களெல்லாம் பெரும் கோயிலாக மாறிக்கொண்டிருந்தன. நிறையப் பேர் வாய்விட்டுக் கதைப்பதற்கு அச்சம் கொண்டனர். பீச்சான் கோழிகள் என பெருவழுதி முழங்கத் தொடங்கினான். அவனுக்கு ஊரைவிட்டு ஓடும் எண்ணம் துளியும் இல்லை. 'சா' ஒன்றுதான் இந்த ஊரைப் பிரிக்க முடியும் என்றான். மண்வாரி வீசுகின்ற ஈரக்காற்றுக் காலத்தில்த்தான் அவனை விழுங்கத் தொடங்கினான். பெருவழுதி, அவனை பெரிதாக எடுக்கவில்லை. குறுக்கு வழியால் எல்லாவற்றையும் சாதிப்பவன் என்பது அவனுக்குத் தெரியும். பல தடவை பெருவழுதிக்கு வேட்டுவைத்திருக்கிறான். தலை கூட பலதடவை தப்பியிருக்கின்றது. இருந்தும் பெருவழுதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. எதிர்பாராது ஒரு சந்தர்பம் கரிக்கட்டையனுக்கு கிடைத்தது. இது பெருவழுதியின் மொக்குத் தனமும் கூட எல்லா அஸ்திரங் களையும் இழந்து நின்ற போது உயிர்ப்பிச்சைக்காக அவனிடம் ஏந்திநின்ற சமயம் அவன் அவனுக்கு எல்லாம் வழங்கினான். செத்த பாம்பாகவே அவனிடம் சுருண்டுகிடந்தான். பெருவழுதி அவனை நம்பி விட்டான் அத்தவறுதான் அவனை இச்சிக்கலில் மாட்டிவிட்டது.

அவனுடைய ஆட்டம் தொடங்கியது. 'கிழக்கை' வைத்து காய் நகர்த்தத் தொடங்கினான். சிற்றரசனிடம் மகஜர் சமர்ப்பித்து பத்துப் பதினைந்து ஆட்களுடன் முற்றுகையிட்டான். அப்போ ஊரெல்லாம் பெருவழுதியினுடைய சிறகு உடைக்கப்பட்டதாகவே செய்திகளை ஒலிபரப்பினான். வழுதி உடைந்து போகவில்லை. சிற்றரசனின் விசாரணைக்கு தயாரானான். மண்டபம் முழுதும் விசாரணைபற்றியே பேசப்பட்டது. கட்டைவிரல் வெட்டப்படுமா? அல்லது கண்டத்துடன் வெட்டப்படுமா? அல்லது ஆளே இல்லாமல் போய் விடுவாரா? பலப்பல கதைகள் காற்றில் கரைந்தன. பெருவழுதி ஒன்றுக்கும் பயப்படவில்லை (எத்தனை யுகப்பிரளயத்தைச் சந்தித்தவன். 17ம் போரில் பெருவழுதி இல்லாமலிருந்திருந்தால் அருச்சுனன் கச்சக்கட்டோடுதான் தப்பி ஓடியிருக்க வேண்டும். பெருவழுதி தந்திரம்தான் செய்தான் ஏமாற்றவில்லை மோசடி செய்யவில்லை. இந்தச் சொற்பதங்களே பலருக்குப் புரியவில்லை) வருவது வரட்டும் மசிர் ஒன்று போகட்டும் எத்தனை சிற்றரசர்களைச் சந்தித்திருக்கிறான். இவர் என்னத்தப் புடுங்கப் போறாரு ....?

பகல் 1.10க்கு அழைப்போலை கிடைத்தது. அவன் 1.12க்கெல்லாம் மாளிகைக்குச் சென்றுவிட்டான். வெளிவிறாந்தையில் பல மணி நேரம் காக்கவைக்கப்பட்டான். அலுப்பு அவனுக்குள் அரித்தது. சாகநினைத்தவனுக்கு தூக்கு மேடை பஞ்சு மெத்தை மாதிரி பழைய படம் ஒன்றின் கதை வசனமும் சிவாஜியின் நடிப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்குள் வந்து போனது. எழுந்து நடந்தான் ஆற்றங்கரைக் காற்று புகுபுகுவென அவனுடைய முகத்தை துடைத்துச் சென்றது.

'தம்பி" என்ற குரல் எழத்திரும்பினான். எழுவது மதிக்கத்தக்க ஒருவர் அவன் முன் நின்றார். முகம் உள் நோக்கி குவிந்து நரைகள் முகம் முழுதும் படர்ந்திருந்தன. கேசத்தை மேல்நோக்கி வாரிய ஒரு விறைப்பான தோற்றம்.

"உங்களை உள்ளுக்குள்ள வரட்டாம் மனே"

"சரி ஐயா" என்றவாறு அவன் கதவினைத்திறந்து உள்ளுக்குள் போனான். ஜிலு ஜிலு என அறையிருந்தது. இந்த ஜிலு ஜிலுப்பு, வெளிச்சம் சற்றுக் குறைந்த அறையும் அவனுக்கு யார் யார் இருக்கிறார்கள் என அடையாளம் காணவில்லை. கதிரையில் சாய்ந்து சற்று நேரம் மௌனமாக இருந்தான். மெல்ல மெல்ல அறை துலங்கலானது. பன்னிரெண்டு பேர் அமர்ந்திருப்பது அப்போது தான் அவனுக்குப். புரிந்தது. கரிக்கட்டையனும், சாம்பிராணியும், பொழுது வணங்கியும், அவர்களின் குழுவினரும் இருந்தார்கள்.

பின், சிற்றரசனின் மந்திரி பல வினாக்களை அவன் மீது தொடுத்தான். அவன் மறுமொழி சொன்னான். இல்லை உன்னில் பிழையிருக்கிறது. இவர்களும் சொல்கிறார்கள், நானும் உணர்கிறேன் என்றான். மந்திரியாரே சொல்வதெல்லாம் உண்மையாகவும், எழுதுவதெல்லாம் பொய்யாகவும் ஆகிவிடாது... பல இடங்களில் பேச்சுக்கள் பொய்த்திருக்கிறது. மன்னிப்பு கோரப்பட்டுள்ளது. வரலாறுகளை நீங்கள் புரட்டிப்பார்க்கும் போது உண்மைபுரியும் உங்களுக்கு இவர்களில் பலர் என் உழைப்பைச் சுரண்ட முனைந்தார்கள். நான் விழித்துக் கொண்டேன். ஒரு துளி வியர்வை சிந்தாமல் பலன் அனுபவிப்பது சரியா மந்திரியாரே. நீங்கள் எத்தனை எதிரிகளை சந்தித்திருப்பீர்கள். எத்தனை யுத்தகளத்தைக் கண்டிருப்பீர்கள். இந்த மந்திரிப்பதவி சும்மா வந்ததல்ல உங்கள் வியர்வை, உங்கள் உழைப்பின் ஊதியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் இவர்கள் ஒரு துளிவியர்வை கூடச் சிந்தாதவர்கள். அதனால்தான் என்னுடன் முரண்படுகிறார்கள் இதோ பாருங்கள் ஆதாரத்தை அவன் எல்லாப்பத்திரங்களையும் கையளித்தான். மந்திரி பார்த்தான் நாங்கள் தீர்மானிப்போம் நீங்கள் போகலாம். அவன் எழுந்து போனான். அவர்கள் வரவில்லை மூட்டை மூட்டையாக கோள்களைக் கட்டிக் கொண்டிருந் தார்கள்.

அவனின் உடலில் தாவரங்கள் முளைப்பதை உணரமுடிந்த அவன், அவர்களை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை. அற்பப் பிறப்புக்களாக நினைத்துக் கொண்டான். நிறமாறும் ஜந்துக்களின் தந்திரங்களில் யாகவம் கொண்டிருந்தவன் அவர்களின் ராஜ தந்திரங்களை பெருவழுதிக்கு உச்சமானதாக நினைக்கத் தோன்றவில்லை. சிறு பிள்ளைத்தனமான சேட்டைகள் ஒரு பெருவெளி பிரமாண்டத்தைத் தகந்த்துவிடும் என அவர்கள் கண்ட கனவுகளைத் தவிடு பொடியாக்குவான் என அவர்கள் ஒரு கணத்திலும் நினைத்திருக்கவில்லை. சிங்கத்தாரின் வியூகங்கள் வரண்ட நிலத்தில் கரிகிநிற்கும் வயல் நாற்றுக்களாய் போனதை நினைத்து நாவரண்டு போக எச்சில்களை விழுங்கிக் கொண்டு மொக்காடுகளை தலையில் போர்த்தி முகத்தினைத் தொங்கப் போட்டு அடைபட்டுப்பொன தெருக்களில் நடக்கலாயினர்.

பெருவழுதி கால்களற்று நடனமாடுவானென எதிர்பாராத பொழுது கூத்தின் நர்த்தனங்களை அவர்களால் காணக்கிடைத்தது பெரும் பாக்கியமென கரிக்கட்டையன் எக்களித்தான். பொழுது வணங்கி அவனை முறைத்து 'முட்டாள்' என்றான்.

உன்ட வயிற்றெரிச்சல் தான் எங்கள இந்தப்பாடுபடுத்துது. நீ யொரு அழுமூஞ்சி. உன்ட கதயக் கேட்டுட்டு நாங்களும் இதில சம்மந்தப்பட்ட எங்கட புத்திய செருப்பாலடிக்கனும் என்றான். இன்னும் பெரும் அண்டம் விழுங்குமென இங்கிருந்து கிளம்புகையில் மூவாயிரத்து சொச்சம் நாய்கள் அவர்களைத் துரத்தத் தொடங்கின. கானகத்தின் எல்லையை அடைந்தபோது நடனத்தை பெருவழுதி நிறுத்திக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

அப்போது சிற்றரசன் இருந்தான், இம் முறை அவர்கள் அவனிடம் செல்லவில்லை. அவனுடைய நீதி பிழையானது எனவும், தீர்ப்புச் சரியானதில்லையென்றும் கதைத்துத்திரிந்தார்கள். அச்சமயம் அரசன் ஒரு பிரமாணத்தைக் கொண்டு வந்திருந்தான். ஊரை குழப்பித்திரிகின்ற சொறிநாய்களை சுடும்படி அல்லது பிடித்து அழிக்கும்படி அப்பிரமாணம் பலரை அதிரச் செய்தது. நாய்க்கடியிலிருந்து பலர் தப்பித்திரிந்தார்கள். விசர் நாய்க் கடி ஊசிகளின் பாவனைகளும், செலவுகளும் அரசின் கஜனாவுக்குள் சென்றன.

நோய்த் தொற்றற்ற மாகாணம் எனப்பரிசுகளும், விருதுகளும் கூடக் கிடைத்தன. இது கரிக்கட்டைக்கு கடுப்பை ஏற்படுத்தியது. எப்படிக்காய் நகர்த்தலாம் எனத் தினம் தோறும் பசப்பித்திரிந்தான்.? பல்வேறு குற்றச்சாட்டுக்களை அடுக்கி 'செடி" நாற்றம் ஒன்றைத் தயாரித்து தலையாரிக்கு அனுப்பியிருந்தான். தலையாரி அவனிடம் ஒரு மண்ணும் கேட்கல 'அந்த லூசன்ட கதையை உட்டுப்போட்டு வேறு வேலையப்பாரு' என்றார். அந்த நாற்றத்தை பார்க்க முடியவில்லை மிகக்கேவலமாக தயாரிக்கப்பட்டிருந்தது.

யார் இந்த வெடி? .... சுடுகலனை தோளில் சுமந்து வந்தான். பொறு மகனே! என பரமாத்மா தடுத்தார். 'ஏன் சுவாமி தடுக்கிறீர்கள். அதர்மம் தலை விரித்தாடுகிறதல்லவா"? பொறு அவன் படுகுழியில் விழப்போகிறான், காலம் உனக்கு இன்னும் இருக்கிறது' என்றார்.

'இல்லாத பொல்லாததெல்லாம் சோடித்து அவன் நடத்தும் நாடகத்தை இன்னும் விட்டு வைப்பதா?"

"காலம் வரும் பொறுத்துக்கொள்" அவர் மறைந்து விட்டார். இரவு முழுக்க உறக்கம் வராதவனாய் சுவரில் ஓடித்திரியும் பல்லிகளையும், நுளம்புகளையும் துரத்தித்துரத்தி 'லபக் லபக்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென வயிற்றை நிரப்பும் வெள்ளைப் பல்லிகளின் ஆகாரத்தையும் அவதானித்துக் கொண்டி ருந்தான். திடீரென அன்றிரவு வீட்டைவிட்டு கானகம் ஏகினான். இந்திரசித் தவம் செய்த இடத்தினை பார்வையிட்டு அந்த மேடையிலே அன்றிரவு உறக்கம் கொண்டான். நறு மலர்களின் மணம் வெட்டை முழுதும் மணம் கமழ இரண்டாம் சாமம் வரை அவனை நித்திரை போட்டுவிட்டது. காலையில் அவனை அறியாமலே எல்லாம் பெருத்துப் போனதாக உணர்ந்தான். அச்சமயம் தொலைந்து போன உணர்வு மேலெழும்ப ஊரை வந்தடைந்த போது ஊர் விழாக் கோலம் பூண்டிருந்தது. பெருவழுதியை புகழ்ந்து பாடும் ஓசைகள் நிறைக்க அவனைத் தேரில் அழைத்து வந்தனர்.

அவர்கள் ஓடி விட்டார்கள் என்று செய்தி மட்டும்தான் அவனின் காதில் விழுந்தது.

பொழுது மெல்ல மெல்ல நிறமாறத் தொடங்கியது. அவர்கள் பச்சோந்தியாய் மாறத்தொடங்கினார்கள். நீண்ட நாட்களாய் மறைந்திருந்த புன்னகைகள் ஒவ்வொரு முகத்திலும் பூக்கத் தொடங்கின. விறுட்டென ஒரு மின்னல் கீற்றாய் சிவந்தகண்கள் தோன்றி மறைந்தன பெருவழுதி சவுக்கினை கையில் பற்றிப்பிடித்து குதிரையின் நடையினை உசாராக்கினான்.

3

புயல் ஓய்ந்து இரு கிழமை கூட ஆகாத மஞ்சள் வெயில் பொழுதில் மீண்டும் சூறாவளி அவனை நோக்கி வீசியது. இரண்டாவது அதிகாரி அதை குப்பைக் கூடைக்குள் போட்டு விடு என அறிவுறுத்தல் செய்தாலும், அவன் பெரும் மூச்சுடன் வாசிக்கத் தொடங்கினான். "நாங்கள் தெரிவு செய்தமாடு சிறந்த மாடு தினமும் பத்துப்போத்தல் கறக்கும். இங்குள்ள ஏனைய மாடுகள் பத்துப் போத்தல்கள் கறவாது. என எமது ஆய்வு மூலம் கண்டடைந்துள்ளோம். நாட்டுமாடுகள் ஒரு போத்தல் கூட கறவாது. இது கேசியன் நியூசிலாந்திலிருந்து இறக்குமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. இதற்கு அவுஸ்ரேலியன் புற்களையே கொடுத்து வளர்த்து வருகின்றோம். அப்படி பராமரித்து உயர்ரக தீனிகளைக் கொடுத்துவந்த, பத்துப் போத்தல்களை கறக்கும் கேசியனை (எமது தெரிவான மாட்டினை) நிராகரித்திருப்பது. தனிமனித செயற்பாடாகும். அது மாத்திரமின்றி எமது தெரிவினை பகிரங்கமாக பேசியது புதினத்திலும் வெளியீட்டிருப்பது வன்மையாக கண்டிக்கத் தக்கது. இது ஒரு தனிமனித செயற்பாடு ஒரு தனித்த மனிதனின் முடிவை ஒட்டு மொத்த மாவட்டத்தின் முடிவாக தாங்கள் எடுப்பதும் நடப்பதும் பெரும் அவமானம். தனிமனித செயற்பாட்டையும், தீர்மானத்தையும் நிறுத்த வேண்டும். இல்லாவிட்டால் பாரதூரமான நிலைக்குத்தள்ளிவிடும். தீர்மானத்தை வாசித்த பெருவழுதி சிரித்தான். "மொக்கனுகள்" என்று கூவினான். வழுதி நல்ல பசுக்களை தெரிவு செய்ய வேண்டுமென்றே அழைப்பு விடுத்திருந்தான். ஆனால் நல்ல கறவைப்பசுக்கள் இருக்கும் போது, செத்த மாடுகளையே தெரிந்து அனுப்பியிருந்தார்கள். குழு நிராகரித்து விட்டது. இதை இரண்டாம் அதிகாரி பறையடித்தார். இதை யாரும் காதில் எடுக்கவில்லை. கரையொதிங்கிய சொறிமுட்டை போல் கிடந்தது. எனினும் இதை வழுதி, பறைந்ததாக குற்றப்பத்திரம் தயாரித்து அனுப்பியது தான் இந்த நூற்றாண்டின் பெரும் பகிடி.

நகரத்தில் குப்பைக் கடதாசிகளைத் தின்னும் மாடுகளையும், சுவர்களின் விளம்பரங்களை உரித்துத்தின்னும் கோவேறு கழுதைகளையும் நல்ல கறவல் பசுவென பொய்யான பத்திரங்களைத் தயாரித்து அனுப்பிவிட்டால் போதுமா? குற்றச்சாட்டை அலசியகுழு, பசுக்களை நேரில் பார்க்கச் சென்ற போது காளையினுள் காடுவளர்ந்திருந்தது. மேச்சல் காரன் மாத்திரம் நின்றான் 'எங்கே அவர்கள்" என வினாவிய போது....

'அவர்கள்" தப்பியோடி விட்டார்கள் என்றான் 'எந்த மாட்டினை அவர்கள் சிபார்சு செய்து அனுட்பினர்" என அவனிடம் கேட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்த மாடுதான்" என வயிறு, உள்ளுக்குள்ள போன ஒரு எலும்பும் தோலுமான மாட்டினைக் காட்டினான்.

'இதுவா" என ஆச்சரியத்துடன் கேட்டனர்.

'ஓம்" எனத் தலையாட்டினான்.

'இது கால் போத்தலும் கறவாதே"

'ஓம்" என்றான்.

'மற்றப்பட்டியில் நல்ல கறவைப்பசு இருக்கா" என கேட்டனர்.

'நல்ல கறவைப் பசுக்கள் இருக்கு" என்றான்.

'அப்ப ஏன் அதத்தெரியல்ல" என்றனர்.

'அது தெரிஞ்ச ஆளிட அது தான்"

'தெரிஞ்சாளிட எண்டா எலும்பும் தோலும் சபைக்கு வருமென"

'அது கலைப்பேரவை தெரிவு செய்தது எனக்கு இதில ஒரு துளியும் சம்பந்தமில்ல" என்றான்.

குழுவினர் அறிக்கையை பூர்த்தி செய்து மதியம் ஒரு மணிக்கே திருப்பி விட்டனர். அவன் தப்பினேன் பிழைத்தேன் என ஓடிவிட்டான்.

குறிப்பு:- கண்டனத் தீர்மானத்தைத் தயாரிப்பதற்கு அதற்குப் பொறுப்பான மேச்சல்காரன், காப்பாளி என ஊழியர்கள் இருந்தும் கரிக்கட்டையன்தான் தயாரித்திருக்கிறான். மேச்சல்காரன் இதைப்பலரிடம் உறுதிப்படுத்திருக்கிறான். மேச்சல் காரனையும் கரிக்கட்டையன் குறுக்கிடுவதாகவும். குழப்புவதாகவும் ஒரு மாதிரி திண்டாடி பட்டிகளை சமாளித்து கொண்டு போவதாகவும் ஒப்பாரி வைத்திருக்கிறான்.

இப்படியாக பல வருடங்கள் ஓடியது. அப்பப்ப அவனைப் பற்றி வினோதமானதும் அபாயகரமான செய்திகள் காதுகளை எட்ட ஆரம்பித்தன. ராத்திரியில் காற்றினை ஊடுறுவி ஓசைகள் மெல்லியதும் உரத்தும் பெருவழுதியை இருக்க முடியாது. 'துன்புறுப்பு" அவனை வந்தடைந்தன. அது தன்னையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டையும் நிம்மதியற்று இருக்க முடியாது தன்னை ஏதோ செய்வதை உணர்ந்து கொண்டான். சில மாதங்கள் பல்லைக்கடித்து பார்த்த பின்னும் அதன் ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டே போனதால் என்னதான் அது என்பதை அறிந்து கொள்ளும் ஆத்திரத்துடன் ஓசையின் திசை நோக்கி நடக்கத்தொடங்கினான். அந்தப்பயணம் கிழக்குப்பக்கம் ஆற்றைத்தாண்டிய வனாந்தரத்தை அடைந்தது. அங்கு ஓடங்களை ஓட்டுகின்ற செம்படவர்களைத்தவிர ஆண்கள் யாருமில்லை. பெண்கள் சிறிதளவில் பூக்களை கையில் ஏந்தி மந்திரங்களை உச்சாடணம் செய்து முட்கள் நிறைந்த பாதையில் வெறுங்கால்களுடன் நடந்து போகின்றனர். யாருடனும் ஏதும் பேசாது இறை சிந்தனையே அவர்களின் சொல்லும் செயலுமாய் இருந்தன.

பெருவழுதிக்கு இத்தனை காலமும் அவிழ்க்கப்படாது பொத்திப் பொத்தியிருந்த ரகசியங்கள் அவனுக்குள் கேள்விக்குறியாய் இறங்கி உதறலை அனுபவிக்கும்படி செய்து விட்டது. பெண்களையும் செம்படவர்களையும் கானகத்தையும் கண்டு அவன்மிரண்டு போனான்.

நாழிகைகள் ஏற ஏற மதிய வெயில் அவனை கொல்லத் தொடங்கியது. மெல்ல மெல்ல சிறுபுதர்களைக் கொண்ட ஒற்றையடிப் பாதையினூடாக நகரத்தொடங்கினான். பகலும் இரவுமாய் நடந்து காட்டின் மத்தியில் ஆச்சிரமம் ஒன்று உருவாக்கப்பட்டுக் கொண்டிருந்தது. அவனுக்குள் பெரும் ஆச்சரியம் எழுந்தது. இத்தனை காடுகளைத் தாண்டி இந்த ஆச்சிரமத்தின் தேவைப்பாடு எதற்கு? யாரிடம் இதைப்பகிர்ந்து கொள்வது என்பது தெரியவில்லை. அச்சமயம் அவ்வழியால் சென்ற ஒருமாதுவிடம் கதைப்பதற்கு அனுகினான். "பெண்ணே! என்றான் அவள் திரும்பிக்கூடப்பாராது. வெள்ளையுடையை உடல் முழுதும் போர்த்தி கொண்டையில் பூவினைச்சூடி, பின்பக்க பிருஷ்டத்தை அங்குமிங்கும் ஆட்டி அவள் அவனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ந்தெழச் செய்து ஆச்சிரமத்தின் முன்கதவினைத்திறந்து உள்ளே சென்றாள். பெண்ணே! அணங்கே! என மீண்டும் கூவியழைத்தான். அவன் அழைப்புக்கள் நாலாதிசையும் எதிரொலித்தது. பின் மெல்லிய கொடியிடையாள் கோபத்தை முகத்தில் அப்பிக்கொண்டு என்ன வேணும் உமக்கென்று கேட்டாள்.

"நிம்மதியற்று ஓசையொன்று வந்தது. அத்திசைவழியே இங்கு வந்திருக்கன்" என்றான். அவளுக்கு அவனுடைய குறைபுரியவில்லை.

"ஓசைகள் இங்கு எழுவதில்லையே! காட்டு விலங்குகளை கலைத்து விடாது, அதன் சந்தோசத்தைக் கூறுபடுத்தாது, வாழ்வளிப்பதே இந்த ஆச்சிரமத்தின் எண்ணப்பாங்கு" என்றாள்.

அவை பற்றி சில நாட்களின் பின் கானகத்தில் சொல்லப்பட்டுக் கொண்டிருந்த அத்தனை கதைகளும், யாரும் சொல்லாமலேயே பெருவழுதிக்கு பூரணமாகப் புரிந்தது. பயம் அவனுள் எழத்தொடங்கியது. நச்சுப்பாம்புகள், புலியின் உறுமல்கள். யானைகளின் அட்டகாசங்களைக் கண்டு அவன் மிரண்டு போனான்.

கானகத்தை நீங்குவது பற்றியே தனக்குள் புலம்பிக் கொண்டிருந்தான். நிம்மதியற்ற ஓசையின் பால் இழுபட்டு இத்தனை நாள் தன் நிம்மதியையும் காலத்தையும் வீணடித்தது எவ்வளவு முட்டாள்தனம் என்பதைச் சிந்திக்கத் தொடங்கினான். அப்போது நிம்மதியற்ற ஓசை கிழக்குத்திசை நோக்கி ஒலிக்கத்தொடங்கியது. வாரிச்சுருட்டியெழுந்தான். மீண்டும் காதைக் கொடுத்தான். ஒலிப்பது கேட்டது. நடந்தான். இரு நாட்கள் நடந்தான். ஆச்சிரமத்தைத்தாண்டி ஈரல் காடுகள் மத்தியில் ஒரு ஆணும் நான்கு பெண்களும் மதங்க ஆலிங்கணம் புரிவது தெளிவாயிற்று. அவன் இன்னும் சற்று நடந்தான். நிம்மதியற்ற ஓசை எழுகின்றது. களிநடனப் பெண்கள் சற்று விலகி மதங்க ஆலிங்கணத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசித்துக் கொண்டிருப்பது அவன்தான் என்பதை உணர்ந்த பெருவழுதி திக்கற்றுப்போனான்.

## 4

பெருவழுதிக்கு ஏழரைச்சனியன் தொடங்கி ஏழு நாட்கள் கடந்த ஒரு மாலைப்பொழுதில்த்தான் பனிடாக்டர்'ரா" பெருவழுதிக்கு புது வியாதி இருப்பதாக அறிவித்திருந்தார். அப்போது டாக்டர்"ரா'குஞ்சி முளைத்து ஏழு நாட்கள் கூட ஆகவில்லை. அப்போ பெருவழுதி கொல்லன் பட்டறையில் அடிபடும் எஃகு வாகியிருந்தான். அதனால் எந்த அடியாயினும்அவனுக்கு வலி தெரியவில்லை. நல்ல காலமாக பனியினுடைய கண்டுபிடிப்பு எயிட்ஸ் என்று முடிவாகாதது வழுதிக்கு பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. இருந்தும் புதிய வியாதி பற்றி பெரும் டாக்டர் சைதனியரிடம்ஒரு ஆலோசனை பெறுவதற்கு அவரின் அலுவலகம் சென்றிருந்தான். பத்துக்கொப்பி முழுதும் இடம் தேடியும் பதிவதற்கு இடமற்றுப்போக நாட்காட்டியின் பின்பக்கம் ஐந்து வருடமும் ஐந்து நாட்களும் கழிந்து வருமாறு தாதியொருத்தி இடம் ஒதிக்கிக் கொடுத்திருக்கிறாள். கால்இடர மெல்ல மெல்ல நடந்து வந்திருக்கிறான். என்ன செய்வதென்று தலையைச் சொறிந்த கணம் அவன் மண்டையில் ஒரு ஞானம் எழ, பனிடாக்டர் 'ரா" வினுடைய கண்டு பிடிப்புக்களை மறுவாசிப்புச் செய்தான். பனியார் பல இடங்க ளில் முன்னுக்குப்பின் முரனாய் தன் அறிக்கையை வெளியிட்டிருப்பது தெளிவாகியது அவனுக்கு.

வழுதிக்கு, அவன் சாத்தானின் கைக்கூலி என்பதும், காட்டெறியின் மறு அவதாரம் என்பதும் இரண்டு நாட்களும் பன்னிரெண்டு மணித்தியாலமும் ஐம்பத்திரெண்டு செக்கனும் பிடித்திருந்தன.

பனி உண்மையிலே சாதாரண மனிதனில்லை. கொஞ்சம் அப்படித்தான். பனியை வழுதி நேரில் பார்த்ததில்லை. இரு தடவைகள் அலைபேசியில் கதைத்திருக்கிறான். மூன்று தடவை எழுத்தில் உரையாடியிருக்கிறான். பனி தன்னைப் பல இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிச்சந்திரனாகக் காட்ட முனைந்து தோற்றுப்போன அற்பம். பொல்லு வருத்தம் காரணமாக சின்ன வயதில் கண்ட பொடிச்சியைத் தேடித்தேடி அலைந்து விறைப்பு வருத்தம் வந்த செய்தி வழுதிக்கு வைத்தியர் கணேஷ் பரிசாரி சொன்ன போதுதான் சித்தம் தெளிந்திருக்கிறது. எனினும் வழுதிக்கு இந்த மர மண்டையனின் கண்டுபிடிப்புக்கும், ஆராய்ச்சிக்கும் நோபல் பரிசு கிடைத்து விடுமென்ற பயம் எழத்தொடங்கிற்று......

தக்கையனின் நாட்குறிப்பில் ஏனைய பக்கங்களை கரையான் புசித்திருந்ததால் பனி பற்றிய ஏனைய வண்ட வாளங்களை அறியமுடியவில்லை. இருந்தும் தக்கையன், பனியினுடைய படையெடுப்பிற்கு ஈடுகொடுக்க முடியாமல் ஏழு கடல் தாண்டி தப்பியோடியதாக பிந்திய செய்தி 'தை'யில் வெளியாகியிருந்த போது 'குறைக்குடம்" ஒன்று ஆஜானுபாகுவைச் சாடியிருந்தது.

## பிந்தியசெய்தி

பனி வேவு பார்த்துத்திரியும் காலை கலி 5114யில் பெருவழுதியைத் சந்தித்திருந்தான். பனியை அவன் பெரிய தோற்றமாகவும். ஆஜானு பாகுவாகவும் அப்போ, இப்படிக் கற்பனை செய்திருந்தான். அவனைக் கண்டவுடன் சீயென்று போயிற்று. இது தானா பனி? ஊதினால் பறந்து போகும் எலும்புத்துண்டு கோணல் தலை, கெழிந்த பார்வையும் கொண்டிருந்தான். அவனுக்கு அது இருப்பது உறுதிப் படுத்திற்று. சடாரென. எப்படி இருக்கிறீர்கள்? என விசாரித்தான். திடுக்கிட்டுப் போய் பனி சில நிமிடங்கள் அவனுடைய நா எழவில்லை.

"இரு.....இரு"

கரகரக்கும் மின் விசிறிபோல் கரகரக்கத்தொடங்கினான். பின் வழுதியின் மீசை பற்றி பேசத் தொடங்கினான்.'ஆண்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீசைதான் அழகு. தமிழன் என்றால் மீசை இருக்க வேண்டும் மீசை இல்லாதவன் பொம்புளதான்" என்றான்.

ஆனா பனிக்கு மீசை அரும்பிவருகின்ற காலம். எதைக் கதைப்பது எதைத் தொடங்குவது. எனத்தெரியாது. உழறல் கச்சான் காற்றுப் போல் வீசத் தொடங்கியது. இரண்டு இரவும் இரண்டு பகலும் அவனுடைய உழறலே அந்தவட்டாரம் முழுதும் ஒலிக்கத் தொடங்கின. குமர்பெட்டைகளை இருக்க முடியாமல் காடு, கரம்பை முழுதும் ஓட்டம் காட்டத் தொடங்கினான். பெருவழுதி தலையில் அடித்துக்கொண்டு இவன்ட உழறல்களைத்தானே தூக்கிப்பிடித்துக் கொண்டு சில சித்தம் பேதலித்ததுகள் ஓடித்திரிகின்றன.... சீ....எப்போது திருந்தப் போகிறார்களோ இந்தச் சிவாச்சாரியார்கள். அரோகரா...

*-2016-*

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| Class No: | |
| --- | --- |
| Acc No | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

| Class No: | |
| --- | --- |
| Acc No | 789 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## த. மலர்ச்செல்வன்

மாசெ: எதிர் - விசாரணை

இந்த அந்தகாரத்தில்தான் சூனியக்காரர்களும், சூனியக்காரிகளும், ஜான்சிராணிகளும் படையெடுத்தபோது களத்தில் தனித்திருந்து போரிட வேண்டியிருந்தது. பின் முதுகு காட்டி ஓட ஒருபோதும் நான் எத்தனிக்கவில்லை. எப்போதும் போலவே சுடுகலன் சுட்டுத் தள்ளியது.

பின்னைய காலங்களில் கலை இலக்கியம் தேவையற்றதென புரியத் தொடங்கினேன். இந்த எழுத்தில் எதுதான் மிஞ்சியிருக்கிறது? விரோதம் தான் மிச்சம்.

நான் முதுகு சொறியப் பழகாததும், ஐஸ் வைக்கக் கற்றுக் கொள்ளாததும்... என் அறியாமையின் நிமித்தம், எறிகணைகள் என்னைத் தாக்கின. இருந்தும் பிட்டிசங்களுக்குத் தாக்குப் பிடித்தேன். ஒரு முதலமைச்சன் கூட என்னை விசாரித்தான். நானும் திமிர் கொண்டு பேசினேன். "என்னுடைய தலை பறக்கும் என்றார்கள்." வீரபாண்டிய கட்டப்பொம்மன்தான் ஞாபகத்து வந்தான். நானும் 'நயிஞ்சி' போகவில்லை. இப்படி.... இப்படி....

ISBN 978-955-50710-2-4

9 789555 071024

ஆரையம்பதி

விலை 480.00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org